KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

Jabatan Pendidikan Negeri Pulau Pinang

# MODUL KESUSASTERAAN TAMIL SPM 2022

***"ILAKKIYA VANNAM"***

## பினாங்கு மாநில எஸ்.பி.எம் இலக்கியப் பயிற்றி 2022

# இலக்கிய வண்ணம்









***"PULAU PINANG PENERAJU TRANSFORMASI PENDIDIKAN NEGARA"***

## HAK CIPTA

**JABATAN PENDIDIKAN NEGERI**
**PULAU PINANG**

© ***Cetakan Pertama 2022***

**Penyelaras:**

SMK Bayan Lepas

**Panel:**

SMK Seri Nibong
SMK Tasek
SMK Mak Mandin
SMK Saujana Indah
SMK Simpang Empat
SMK Bukit Mertajam
SMK Tunku Abdul Rahman
SMK Bandar Tasik Mutiara

## உள்ளடக்கம் KANDUNGAN


| எண் | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1 | உள்ளடக்கம் | i |
| 2 | Kata Alu - aluan | ii-iii |
| 3 | வாழ்த்துரை | iv |
| 4 | பயிற்சி 1 | 1-7 |
| 5 | பயிற்சி 2 | 8-14 |
| 6 | பயிற்சி 3 | 15-20 |
| 7 | பயிற்சி 4 | 21-27 |
| 8 | பயிற்சி 5 | 28-35 |
| 9 | விடைப்பட்டி | i-xl |



**KATA ALU-ALUAN**
**PENGARAH PENDIDIKAN**
**JABATAN PENDIDIKAN PULAU PINANG**

# SETINTA KATA

**Assalamualaikum warahamatullahi wabarakatuh dan salam sejahtera.**

Syukur ke hadrat Allah S.W.T kerana dengan limpah kurnia dan izin-Nya, kita diberikan kekuatan dan kesihatan untuk menggalas tanggungjawab hakiki dengan penuh dedikasi. Program Peningkatan SPM bersama Jurulatih Utama Bahasa Tamil Sekolah Menengah tahun 2022 telah berjaya dizahirkan melalui Modul Kesusasteraan Tamil SPM (*e-book*). Oleh itu, saya merakamkan setinggi-tinggi tahniah kepada Unit Bahasa, Sektor Pembelajaran JPN Pulau Pinang, ahli Panel Pemurnian Modul dan guru-guru Bahasa Tamil SMK Pulau Pinang atas inisiatif menghasilkan modul latihan *e-book* edisi pertama ini.

Saya faham untuk menghasilkan modul pembelajaran bukan mudah seperti yang dibayangkan kerana menulis modul yang berimpak tinggi memerlukan komitmen, kesabaran dan pengorbanan yang bukan sedikit daripada para penulis. Saya yakin Jurulatih Utama Bahasa Tamil yang menghasilkan modul ini telahpun berusaha bersungguh-sungguh sehingga modul ini dapat dihasilkan dan dapat dimanfaatkan oleh calon SPM pada tahun ini dan berikutnya.

Anak-anak yang dikasihi; kepentingan mempelajari karya sastera yang paling ulung adalah supaya kita mengenali dan mencintai bahasa ibunda kita. Sastera tidak dapat dipisahkan dengan manusia dan masyarakat. Sastera hidup kerana adanya hubungan ini. Matlamat matapelajaran ini diperkenal adalah untuk membolehkan pelajar menjiwai unsur dan nilai murni dari segi kerohanian, kemanusiaan, kemasyarakatan, kebudayaan, kewarganegaraan menanam perasaan bangga dan cinta tanah air dalam satu wawasan budaya kebanggaan dihasratkan tercapai. Peranan utama sastera ialah membina insaniah dalam kehidupan manusia. Sasterawan Negara Profesor Emeritus Dato' Dr. Shahnon Ahmad (1991) menegaskan bahawa sastera seismograf kehidupan, iaitu sastera bukan sahaja mencatatkan tetapi menganalisis perihal manusia. Bagi Shahnon, sastera sangat diperlukan untuk melengkapkan nilai sesuatu masyarakat.

Modul Latihan Kesusasteraan Tamil (*e-book*) garapan idea Jurulatih Bahaa Tamil Pulau Pinang pada hemat saya, sangat relevan digunakan oleh guru dan murid sebagai bahan latih tubi berfokus menjelang peperiksaan SPM pada tahun ini. Saya berharap agar warga guru mahupun murid dapat memanfaatkan modul ini dengan sebaik mungkin demi meningkatkan prestasi subjek Kesusasteraan Tamil dalam peperiksaan SPM tahun 2022. Oleh itu, saya mengambil peluang ini mengucapkan terima kasih dan tahniah kepada panel penulis modul kerana berusaha gigih sehingga dapat menghasilkan Modul Latihan Kesusasteraan Tamil SPM, modul format baharu yang sangat komprehensif. Modul ini diharapkan dapat membantu guru melaksanakan PdP secara bersemuka mahupun PdPR. Akhir sekali, sumbangan para penulis menghasilkan Modul Latihan Bahasa Tamil didahului dengan ucapan syabas dan terima kasih.

Sekian, terima kasih.

**"PULAU PINANG PENERAJU TRANSFORMASI PENDIDIKAN NEGARA"**

**HAJI ABDUL RASHID BIN ABDUL SAMAD**
**PENGARAH PENDIDIKAN**
**JABATAN PENDIDIKAN NEGERI PULAU PINANG**



# SETINTA KATA

**Assalamualaikum warahamatullahi wabarakatuh dan salam sejahtera.**

Syukur ke hadrat Allah S.W.T kerana dengan limpah kurnia dan izin-Nya, kita diberikan kekuatan dan kesihatan untuk menggalas tanggungjawab hakiki dengan penuh dedikasi. Program Peningkatan Akademik Pengarah bersama Jurulatih Utama Bahasa Tamil Sekolah Menengah tahun 2022 telah berjaya dizahirkan melalui Modul Latihan Kesusasteraan Tamil SPM (*e-book)*ini. Oleh itu, saya merakamkan setinggi-tinggi tahniah kepada Unit Bahasa Tamil, Sektor Pembelajaran Pulau Pinang, ahli Panel Pemurnian Modul dan guru-guru Bahasa Tamil SMK Pulau Pinang atas inisiatif menghasilkan modul latihan *e-book* edisi pertama ini.

Dalam menghadapi era globalisasi yang mencabar ini, kita perlu berusaha dengan lebih gigih untuk melengkapkan diri dengan ilmu pengetahuan dan kemahiran kendiri disamping mempamerkan sahsiah yang terpuji, justeru saya menyeru semua warga murid sentiasa bergerak seiring dengan transformasi yang berlaku dalam dasar pendidikan Negara. Arus pendidikan kini menuntut warga sekolah untuk berfikir di luat kotak supaya terus berdaya saing dan dihormati.

Modul Latihan Kesusasteraan Tamil garapan idea Jurulatih Bahasa Tamil JPN Pulau Pinang pada hemat saya, sangat relevan digunakan oleh guru dan murid sebagai bahan latih tubi berfokus menjelang peperiksaan SPM pada tahun ini. Saya berharap agar warga guru mahupun murid dapat memanfaatkan modul ini dengan sebaik mungkin demi meningkatkan prestasi subjek Kesusasteraan Tamil dalam peperiksaan SPM tahun 2022.

Saya mengambil peluang ini mengucapkan terima kasih dan tahniah kepada panel penulis modul kerana berusaha gigih sehingga dapat menghasilkan Modul Latihan Kesusasteraan Tamil SPM, modul format baharu yang sangat komprehensif. Modul ini diharapkan dapat membantu guru melaksanakan PdP secara bersemuka mahupun PdPR. Akhir sekali, sumbangan para penulis menghasilkan Modul Latihan Bahasa Tamil didahului dengan ucapan syabas dan terima kasih.

Sekian, terima kasih.

**"PULAU PINANG PENERAJU TRANSFORMASI PENDIDIKAN NEGARA"**

**Haji Roland @ Rozaidi Bin Abu Hassan B.C.N**
**Timbalan Pengarah, Sektor Pembelajaran**
**Jabatan Pendidikan Negeri Pulau Pinang**



## Kata Aluan

Salam Sejahtera dan ucapan ribuan terima kasih kepada warga Panitia Bahasa Tamil SMK negeri Pulau Pinang kerana sudi memberi ruang kepada saya untuk menyampaikan sepatah dua kata dalam e- Modul Latihan Kesusasteraan Tamil SPM 2022.

Setinggi-tinggi ucapan tahniah dan syabas buat warga jawatankuasa e-Modul Latihan Kesusasteraan Tamil SPM 2022 yang berjaya menerbitkan Modul Latihan yang akan memberi manfaat kepada murid-murid SPM 2022. Modul yang diterbitkan ini pasti dapat menyumbang kepada pembangunan insan yang berpotensi tinggi dan menyeluruh dalam memenuhi hasrat dasar Pendidikan Negara.

Kesungguhan dan komitmen Panel Jawatankuasa Pemikir Modul Latihan Kesusasteraan Tamil SPM 2022 Negeri Pulau Pinang amat dikagumi dan membanggakan. Harapan saya semoga usaha kecemerlangan sebegini dapat membentuk murid-murid yang boleh mendepani cabaran masa hadapan berdasarkan langkah anak-anak kita yang memfokuskan kejayaan dan berupaya mencipta dunia baru.

Akhir kata saya mengucapkan terima kasih kepada Tuan Haji Abdul Rashid Bin Abdul Samad, Pengarah Pendidikan Pulau Pinang dan Tuan Haji Roland @ Rozaidi Bin Abu Hassan,Timbalan Pengarah Pendidikan, Sektor Pembelajaran, Jabatan Pendidikan Negeri Pulau Pinang atas kebenaran dan sokongan yang tidak berbelah- bahagi hingga terhasilnya modul ini. Ucapan tahniah kepada semua pihak yang terlibat dengan harapan kita semua akan terus berusaha mencapai kegemilangan dan memajukan pendidikan di Malaysia.

Sekian terima kasih,
Selamat Maju Jaya.

**Sagundala Arokiam,**
**Penolong Pengarah Bahasa**
**Jabatan Pendidikan Negeri Pulau Pinang.**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்**

**அனைவருக்கும் வணக்கம். எஸ்.பி.எம் 2022 பயிற்சி நூலில் வாழ்த்துரை வழங்க வாய்ப்பளித்தமைக்கு நன்றி.**

**எஸ்.பி.எம் தேர்வில் நம் மாணவர்கள் சிறந்த தேர்ச்சியினை அடைவதற்குத் தமிழ் இலக்கியமும் முக்கியப் பங்காற்றுகின்றது என்றால் அது மிகையாகாது. இதனைக் கருத்தில் கொண்டே இப்பயிற்சி நூல் வடிவம் கண்டுள்ளது. தேர்வில் விடையளிக்கும் நுணுக்கங்களைக் கற்றுத்தரும் நோக்கத்திலேயே இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.**

**சிறந்த தேர்ச்சியினை அடைவதற்கு விடாமுயற்சியும் தொடர் பயிற்சியும் இன்றியமையாதது. அவ்வகையில் மாணவர்கள் இப்பயிற்சி நூலை முழுமையாகப் பயன்படுத்துவதோடு ஒவ்வொரு கேள்வியின் கூறுகளையும் கேள்வியின் தேவைகளையும் புரிந்து கொண்டு விடையளிப்பது மிக அவசியம்.**

**மாணவர்களின் தேவையறிந்து இத்தருணத்தில் இப்பயிற்சி நூல் அவர்களின் கைகளில் தவழவிருப்பதற்கு அரும்பாடுபட்ட இடை நிலைப்பள்ளி ஆசிரியர் குழுவிற்கு இவ்வேளையில் நன்றியும் பாராட்டுகளையும் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன்.**

**இறுதியாக ஒரு பாடத்தில் மாணவர்கள் சிறந்து விளங்க அப்பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள் மிகுந்த முயற்சிகளை மேற்கொள்வர் என்பது நாம் அறிந்த உண்மை. எனவே, இப்பயிற்சி நூல் சிறப்பாக வெளிவர அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்த பினாங்கு மாநில தமிழ் மொழி ஆசிரியர்கள் குழுவினருக்கும் எல்லா வகையிலும் ஆதரவு வழங்கிய பினாங்கு மாநிலக் கல்வி இலாகாவின் இயக்குனர் உயர்திரு ஹஜி அப்துல் ரஷிட் பின் அப்துல் சாமாட் அவர்களுக்கும் கல்வி இலாகாவின் கல்வித் திணைக்களத்தின் துணை இயக்குனர் திரு ரோலன் பின் அபு ஹசான் அவர்களுக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.**

**"பாரினில் தமிழ் சிறக்க; தோள் கொடுப்போம் வாரீர்"**

**நன்றி, வணக்கம்,**
**அன்புடன்**
**சகுந்தலா ஆரோக்கியம்,**
**தமிழ் மொழி உதவி இயக்குனர்**
**பினாங்கு மாநிலக் கல்வி இலாகா.**

**பயிற்சி 1**

[*எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.*]

**பாகம் – ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

நாள்பொழு தெலாம்உன் அன்பொலி
நல்வழிக்கு என்னை அழைத்திடும்
நாள்பொழு தெலாம்உன் அன்புளம்
நம்பிக் கையின்மகிழ் வூட்டிடும்!

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
**கணந்தொறும்** வாழ உதவுமே!

**-கவிஞர் த.கோவேந்தன்**

1 இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?
(2 *புள்ளி*)

2 இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசை நயங்கள்** இரண்டனை எழுதுக.
(4 *புள்ளி*)

3 (i) **கணந்தொறும்** என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
**கணந்தொறும்** வாழ உதவுமே!

(ii) இவ்வடிகளின் வழி எத்தகைய உறவு மகிழ்ச்சியாக வாழ்வதற்குத் துணைப்புரிகிறது எனக் கவிஞர் கூறுகிறார்?

(2 *புள்ளி*)

[10 *புள்ளி*]

## பிரிவு இரண்டு: நாடகம்

4 பிசிராந்தையார் நாடக ஆசிரியரின் **அடையைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

5 (i) பிசிராந்தையார் நாடகத்தின் **நோக்கு நிலை** யாது? (2 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெற்ற **புலவர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

6 கீழ்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(*படைத்தலைவனும் பிற அலுவலர்களும் அரசன் வழி பார்த்துக் காத்திருக்கிறார்கள். அரசன் பின்புறம் கைகட்டி உலவியபடி இருக்கிறான்*)

அரசன்: மேலுக்கு அமைதி; உட்புறம் குமுறல். தெருவில் நடிப்பு; திரைமறைவில் கொலைக்கான சூழ்ச்சிகள். அடுக்களையில் அமிழ்தின் தோற்றம்; **அகப்பை நிறைய நஞ்சு.** எத்தனை பேர்கள் வேவுக்காரர்கள! ஊர்க் காவலர்கள் எத்தனை பேர்கள்! கொலை–களவு முதலிய குற்றங்கள் நடவாமல் பார்த்துக் கொண்டிருந்தார்களா? தூங்கிக் கொண்டிருந்தார்களா அனைவரும்? கேட்ட போதெல்லாம் கேடு ஒன்றும் நிகழவில்லை என்றே நாட்டி வந்தார்கள் அமைச்சரும் பிறரும். இந்த நாழிகை வரைக்கும் குற்றத்தை எவனும் ஒப்பு கொள்ளவில்லை! ஐயோ அது மட்டுமா? இவள் என் மனைவி! இவள் என் மகள்! என்று கூற ஒருவன் ஒருத்தி முன்வர வேண்டுமே! நன்று இன்றைய நிலை! இதோ மாலைப் போது அமைச்சர் உயிரைக் குடிக்க வாயைத் திறந்துகொண்டு வருகின்றது.

படைத்தலைவன்: (*அரசனை நோக்கி*) தூக்குமேடை வேலை துவக்கவேண்டுமா?

மன்னன்: என்னைக் கேட்பதாவது? அங்கே அமைச்சர் இருப்பார். அவரையே கேட்டுக் கொள்ளுவீர்! விரைவாகச் செல்லுங்கள்.

**காட்சி** 5, **பக்கம்** 27-28
**உமா பதிப்பகம்**

(i) இச்சூழலில் வெளிப்படும் அரசரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **உத்தி** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **அகப்பை நிறைய நஞ்சு** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான காரணம் யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

**பிரிவு மூன்று : நாவல்**

7 வாடா மலர் நாவலாசிரியர் பெற்ற **விருது** ஒன்றைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8 (i) வாடா மலர் நாவலில் குழந்தைவேலின் இரண்டு **நண்பர்களைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலின் **சமுதாயப்பின்னணி** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

9 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> “நேர்மையாக ஒழுங்காக நடக்கிற பெண்களை ஆண்கள் ஏமாற்றி அடக்குகிறார்கள். ஆனால், தந்திரமாக வஞ்சமாக நடக்கும் பெண்களுக்கு அடங்கி ஏமாந்து போகிறார்கள். இந்த அண்ணன் அப்படித்தான். முதல் மனைவி வள்ளியை அடக்கி ஆண்டார். இரண்டாம் மனைவியாக வந்த தந்திரக்காரிக்கு அடங்கிவிட்டார்.”
>
> “இவன் **அடங்கினால் அடங்கிப் போகட்டும்**. இவன் பெற்ற குழந்தைகள் ஏன் துன்பப்பட வேண்டும்?”
>
> “மாற்றாந்தாய் என்றால் பொதுவாக உலகத்தில் இப்படித்தான் இருக்கிறது. உங்கள் வாழ்க்கை ஒன்றுதான் விதிவிலக்கு என்று சொல்லலாம். மாமி உங்களை எப்போதும் கொடுமைப்படுத்தியதே இல்லையா?”
>
> “எனக்கு நினைவு உள்ளவரையில் என் சின்னம்மா ஒருநாளும் எனக்குக் கொடுமை செய்ததே இல்லை.”
>
> **அத்தியாயம்** 6, **பக்கம்** 45
> **(மல்டி எடுக்கேஷனல் புத்தக நிறுவனம்)**

(i) இச்சூழலில் குழந்தைவேல் தந்தையின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழல் இடம்பெற்ற **உத்தி** முறையை எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **அடங்கினால் அடங்கிப் போகட்டும்** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான காரணம் யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

**பாகம் – இரண்டு**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

**பிரிவு ஒன்று : கவிதை**

**நாளை நமதே**

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில்
நொய்வமும் செம்பனை ஈயமெலாம்
பாட்டன் வியர்வை நீர் பட்ட சிறப்பென
பாடுங்கடி பாடி ஆடுங்கடி

பத்து மலையினில் கொட்டும் மழையென
பார்க்க வருகின்ற கூட்டமெலாம்
முத்துக் கலையினில் மோகம் அடைந்ததால்
முல்லை மலர்களே கொட்டுங்கடி

முத்து மணித்திரள் மூழ்கி எடுத்தவர்
முன்னுரை வாழ்வெனக் கொட்டுங்கடி
முத்திரையிட்டவர் மூத்த குடியினர்
முத்தமிழர் என்றே கொட்டுங்கடி

வட்ட நிலவினில் பட்ட கறையென
வாழ்க்கை யமைந்தது பாருங்கடி
வெட்ட வெளியினில் பட்ட மரமென
வேரற்றுப் போனதேன் கூறுங்கடி

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

**-கவிஞர் காசிதாசன்**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**மயில்**

அகவும் மயிலே அகவும் மயிலே!
கால மறிந்து கருமுகில் மழைதர
இளமணல் பரவிய எழில்மிகு காடெலாம்
முல்லை அரும்புகள் மெல்ல நகைக்கச்
சிவந்த பவளம் சிதறினாற் போன்று
தம்பலப் பூச்சிகள் தரைமீது தவழ
கைவிரல் போன்ற காந்தள் அரும்பெலாம்
நிமிர்ந்துநின் றெரியும் நெருப்பென மலரக்
கருநிற வண்டுகள் காந்தாரம் பாடிட
ஆடிக் களிக்கும் அழகிய மயிலே!
உன்விழி நீலம்! உன்தோகை நீளம்
உன்னுடல் மரகதம் உச்சிக் கொண்டையோ
கண்ணைக் கவர்ந்திடுங் காயா மலர்கள்!
ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும்
ஈரநொச்சியின் இலைகளே யாகும்!
மழைக்குரல் நின்குரல்; மலையே நின்மனை
செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ!
அன்று நீ மணிமலை அருகிலே நின்று,
மணித்தேர் அசைந்து வருமொலி கேட்டுக்
கழுத்தை உயர்த்தும் கலைமான் போன்று நீ
உன்றன் கழுத்தை ஓங்கி உயர்த்தியும்
அண்ணாந்த மலையை அண்ணாந்து நோக்கியும்
இட்டசிற் றடியை எடுத்தெடுத் தூன்றியும்
வண்ணத் தோகையை வட்டமாய் விரித்தே
'ஓ'வெனும் எழுத்தை உண்டாக்கிக் காட்டினை;
கண்டேன் களித்தேன் மீண்டும் காண்கிறேன்!
நீட்டுயர் மேடையில் நாட்டிய மாடிக்
காட்டும் பறவையே கலவை மயிலே
தொங்கும் தோகையில் தொகைநிலை காண்கிறேன்
வண்ணத் தோகையில் வகைநிலை காண்கிறேன்
விரிக்கும் தோகையில் விரிநிலை காண்கிறேன்!
குறிஞ்சியே புணர்ச்சிக் குரிய திணையாம்
காதல் புரியவோ கார்காலம் சிறந்ததாம்
என்று தமிழர் இலக்கணம் வகுத்தனர்
வாழ்க்கை மாறினும் வகுத்த தமிழரின்
மயிலேநின் வாழ்க்கை மாறவே இல்லை!
அணிலின் சிறுவா லதுபோல் விளங்கும்
செந்தினைக் கதிரைத் தின்னும் மயிலே!

நின்பகை கோடை நெருப்பு வெயிலே
நீயெதிர் பார்ப்பது நீருண்ட முகிலோ!
ஒரேஒரு கேள்வி உனைநான் கேட்கிறேன்
ஆடுங் கலாபமே அருகில்வா இதைக்கேள்
கருவுற்ற முகிலைக் கண்டதும் நீயோ
ஆடு கின்றனை அதுசரி தோகையால்
ஈர முகிலினை ஏன்விசிறு கின்றனை?
சுரந்திடும் ஊற்றுநீர் சுடுமென் றெண்ணி
விசிறுவார் உண்டோ ஓலை விசிறியால்?
அஃறிணை மயிலே ஆராய்ந்து பார்த்துச்
செய்வதைச் செய்தால் சிரிப்புக் கிடமிலை
என்பதை அறிக என்மனங் கவர்ந்த
நாட்டியப் பறவையே நன்குநீ
ஆட்டு தோகையை; ஆடுக நீயே!

\- **கவிஞர் சுரதா**

(i) இக்கவிதையில் கவிஞர் கையாண்டிருக்கும் **அணி நயங்கள்** மூன்றனை எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) இக்கவிதையின் மூலம் நீ பெற்ற **தாக்கம்** மூன்றனை எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

## பிரிவு இரண்டு : நாடகம்

12 (i) மான்வளவனின் **பண்புநலன்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **மொழிநடை** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**அல்லது**

13 (i) தூயனின் **பண்புநலன்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **இடப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

## பிரிவு மூன்று: நாவல்

14 தானப்பனின் **பாத்திரப்படைப்புகளை** ஆராய்ந்து எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

15 வாடாமலர் நாவலின் **வாழ்வியல் கூறுகளை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**கேள்வித்தாள் முடிவுற்றது**

**<u>பயிற்சி 2</u>**

[*எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.*]

**பாகம் – ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

**ஈனவழிச் சென்றே** நாளும்
இயல்பிலாச் செயல்க ளாற்றிப்
போனவழி நெறியென் கின்றாய்;
பொய்க்கு மெய் வண்ணம் பூசி
ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
நல்லுப தேசம் இஃதே!

**- கவிஞர் கவிஞர் பொன்முடி**

1 இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கருத்து** யாது? (2 *புள்ளி*)

2 இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 *புள்ளி*)

3 (i) **'ஈனவழிச் சென்றே'** என்பதன் **பொருள்** யாது? (2 *புள்ளி*)

ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
நல்லுப தேசம் இஃதே!

(ii) இவ்வரிகளின்வழி கவிஞர் ஒரு மனிதனை எத்தகையப் பாதையைப் பின்பற்றும்படி வலியுறுத்துகிறார்?

(2 புள்ளி)

[10 புள்ளி]

## பாகம் – ஒன்று

பிரிவு இரண்டு : **நாடகம்**

4 பிசிராந்தையார் நாடக ஆசிரியர் பெற்ற **விருது ஒன்றனை** எழுதுக. (2 *புள்ளி*)

5 (i) பிசிராந்தையார் நாடகத்தில் காணப்படும் கோப்பெருஞ்சோழனின் **பகைவர் இருவரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தில் காணப்படும் **சிக்கலைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| மேற்படியார்: | அரசர் அஞ்ச வேண்டியதில்லை. மக்கள் காற்று மழையில் வெளியில் வந்திருக்க மாட்டார்கள். |
| அரசர்: | (சிரித்து) புலவர் பெருமான் கிடந்த நிலையைக் காண என் கண்கள் நடுங்கின. உலகின் முடிவை நினைப்பூட்டிக் கொண்டிருந்தன. காற்றும் மழையும் அந்த நிலையிலும் வெளிவந்தீர்கள். |
| புலவர்: | அதிலும் யானைமேல் ஏறிக்கொண்டு! இவர் **பதினெட்டு ஆண்டு மாப்பிள்ளையல்லவா**! |
| பிசிராந்தையார்: | ஏன் காணும் மேற்படியாரே, வீழ்ந்து கிடந்த ஆலின்கிளையை அணைத்தபடி இருந்தவர் நீர்தாமோ? |
| மேற்படியார்: | வேறு! |
| பிசிராந்தையார்: | பிறகு? |
| மேற்படியார்: | ஆலமரம் என்னை இழுத்தது. விட்டுவிட்டேன்.வேலமரம் வரவேற்றது. உடம்பின் செங்குருதி குளிப்பாட்டி அதையும் அனுப்பினேன். ஆலும் வேலும் மேலே கிளம்பின. |
| பிசிராந்தையார்: | யானை! |
| மேற்படியார்: | அதையும் தூக்கிக் கொண்டுதான். |

**காட்சி** 2, (**பக்கம்** 7-8)
**உமா பதிப்பகம்**, 2020

(i) இச்சூழலில் வெளிப்படும் மேற்படியாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடை** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **பதினெட்டு ஆண்டு மாப்பிள்ளையல்லவா** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

**பாகம் – ஒன்று**

பிரிவு மூன்று : **நாவல்**

7 வாடா மலர் நாவலின் ஆசிரியரின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8 (i) வாடா மலர் நாவலில் காணப்படும் **பெண் கதைப்பாத்திரங்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலில் காணப்படும் **மொழிநடை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

9 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> மறுநாள் காலையில் சுடர்விழி தன் கணவருடன் எங்கள் வீட்டுக்கு வந்தாள். ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டோம். “எங்கே அம்மா?” என்று சுடர்விழி கேட்கவே, அம்மாவை அழைத்து அறிமுகம் செய்தேன். அம்மா அவர்கள் இருவரையும் அன்போடு பார்த்தாள். “உங்களுக்கு மரு விருந்து வைத்திருக்க வேண்டிய குடும்பம் இது. பெண் குழந்தை பெறாத நாங்கள் சுடர்விழியைத்தான் பெண்ணாக எண்ணிக் கொண்டிருந்தோம். இனிமேலாவது இது அவளுக்குத் தாய்வீடு என்று கருதி நீங்கள் வந்து போக வேண்டும். இவளுடைய தாய் வள்ளியம்மா இருந்தால், இந்தக் குடும்பம் எப்படியோ இருந்திருக்கும். வள்ளியம்மாவும் நானும் அக்கா தங்கை போல இருந்தோம். உடன் பிறக்காத குறைதான்” என்று சுடர்விழியின் கணவர் முருகய்யாவிடம் அம்மா உருக்கத்துடன் சொன்னாள். சுடர்விழியின் அருகே வந்து அவளுடைய கூந்தலைத் தடவி, “என்னவோ அம்மா! நீ உன் கணவருடன் நல்லபடி வாழ வேண்டும். அதுதான் எங்களுக்கு வேண்டியது. ஆனாலும், உன் சித்தி இப்படிக் கோபித்துக் கொண்டு போயிருக்கக்கூடாது. உன் அண்ணன் ஏதாவது சொன்னானா? நீ ஏதாவது சொன்னாயா? யாரும் ஒன்றும் சொல்லாமலே இப்படி வீட்டைக் காலி செய்துவிட்டுப் போனாளே.அவளுடைய அப்பனும் அம்மாவும் மனம் வந்து அழைத்துக்கொண்டு போனார்களே. **தெருவே கொல்லென்று பேசும்படி** செய்துவிட்டார்கள்,” என்றாள்.
>
> சுடர்விழியும் அவள் கணவர் முருகய்யாவும் பேசாமல் இருந்தார்கள்.
>
> **அத்தியாயம்** 17 (**பக்கம்** 123-124)
> **(மல்டி எடுக்கேஷனல் புத்தக நிறுவனம்)**

(i) இச்சூழலில் வெளிப்படும் மீனாட்சி அம்மாவின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **உத்திமுறையை** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **தெருவே கொல்லென்று பேசும்படி** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

**பாகம் – இரண்டு**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

**பிரிவு ஒன்று : கவிதை**

**காலம் பறக்குதடா!**

காலம் பறக்குதடா! - தமிழா
   வாழப் பறந்திடடா!
கோளம் வலம்வரவே - உலகம்
   கோலம் புனையுதடா!
நாளும் நடக்கையிலே - புதுமை
   நாடிப் பெருகுதடா!
வாழும் வகைகளிலே - வளங்கள்
   வந்து குவியுதடா!

நேற்றுத் திருந்தியவர் - உன்னை
   நோக்கிப் பழகியவர்
ஊற்றுப் பெருக்கெனவே - இன்பம்
   ஊறத் திளைக்கின்றார்!
காற்றுக் கிடையினிலே - அலை
   கத்தும் கடலினிலே
ஆட்டம் நடத்துகின்றார்! - நீயேன்
   ஆழக் கிணற்றிலுள்ளாய்?

நாளும் முழங்குகின்றாய் - அந்த
   நாளில் இருந்ததெல்லாம்!
காலப் பயனறியாய்! - உய்வைக்
   காணும் கடன் மறந்தாய்!
பாழும் பிரிவினைகள் - வளர்த்தே
   பாதை தவறிவிட்டாய்!
மீளும் வகைமொழிவார் தம்மொடும்
   மோதிக் கெடுத்திடுவாய்!

ஒன்றிச் செயல்புரிந்தால் - நாம்
   உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! - சின்னாள்
   சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
   ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! - தமிழா
   எண்ணிச் செயல்தொடடா!

**- கவிஞர் கரு. திருவரசு**

10 மேற்காணும் கவிதையின் கருத்துகளைத் **தொகுத்து** எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**பெண்கள் விடுதலைக் கும்மி**

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களிலே ஒளி போல உயிரில்
கலந்துஒளிர் தெய்வம் நல் காப்பாமே. (கும்மி)

கும்மி யடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமைஎன்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார், அதை
வெட்டி விட்டோம் என்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலைகொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்பது உண்டோ?
கொல்லத் துணிவுஇன்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் பழி சூட்டி விட்டார். (கும்மி)

கற்பு நிலைஎன்று சொல்லவந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;
எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி! (கும்மி)

வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோம் என்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்; தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம். (கும்மி)

காதல் ஒருவனைக் கைபிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச்செய்து வாழ்வமடி! (கும்மி)

- **மகாகவி பாரதியார்**

(i) இக்கவிதையில் காணப்படும் **அணி நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) இக்கவிதையின்வழி நீ பெற்ற **படிப்பினைகள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**பிரிவு இரண்டு : நாடகம்**

12 பிசிராந்தையாரின் **பாத்திரபடைப்பை** ஆராய்க.

[20 புள்ளி]

13 பிசிராந்தையார் நாடகத்தின் **படிப்பினையை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

14 (i) வாடா மலர் நாவலில் காணப்படும் **சமுதாயப் பின்னணியை** விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலில் காணப்படும் சுடர்விழியின் **பாத்திரப்படைப்பை** விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 புள்ளி]

**அல்லது**

15 (i) வாடா மலர் நாவலில் காணப்படும் **கதைப் பின்னலை** விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலில் காணப்படும் முருகையா **பாத்திரப்படைப்பை** விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 புள்ளி]

**தேர்வுத்தாள் முடிவுற்றது**

**பயிற்சி 3**

[*எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.*]

**பாகம் – ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

ஒன்றிச் செயல்புரிந்தால் – நாம்
உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! – **சின்னாள்**
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! – தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

**-கவிஞர் கரு.திருவரசு**

1 இக்கவிதைக் கண்ணி இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?

(2 *புள்ளி*)

2 இக்கவிதைக் கண்ணியில் காணப்படும் **ஓசை நயங்கள்** இரண்டனை எழுதுக.

(4 *புள்ளி*)

3 (i) **‘சின்னாள்’** என்பதன் **பொருள்** யாது?

(2 *புள்ளி*)

ஒன்றி முறைவகுப்பாய்! – **சின்னாள்**
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! – தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

(ii) இவ்வடிகளின்வழி தமிழ்ச் சமுதாயம் ஒரு செயலில் இறங்குமுன் எதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் கவிஞர் கூறுகிறார்?

(2 *புள்ளி*)

[10 *புள்ளி*]

## பிரிவு இரண்டு : நாடகம்

4 பிசிராந்தையார் நாடக ஆசிரியரின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

5 (i) பிசிராந்தையார் நாடகத்தில் **பெண் கதைமாந்தர்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **இடப்பின்னணியைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| அரசன்: | பெருமக்களே! படுகொலை புரிந்ததாகக் கூறினான்; கடுகளவு காரணமும் கூற மறுத்தான். இந்தப் படுகொலையின் உட்புறத்தில் கெடுதலையுள்ளங்கள் ஆயிரமிருக்கும். **அவைகளைக் கண்டறிந்தால் களைகளை அடியோடு வெட்டியதாகும்.** நாடு மாசு நீங்கும் உளவை வெளிப்படுத்துவேன் என்ற அமைச்சர் அது செய்யவில்லை. கடன்பட்டவர் அக்கடனைக் கழிக்கவில்லை. தண்டனைக்காகக் காத்திருக்கிறார். கொலைக்காரணம் தெரிந்தவர்கள் இங்கிருந்தால் கூறி அமைச்சரைக் காக்கலாம். இல்லையா! தூக்குக! |
| ஒருகுரல்: | நானே கொலை செய்தேன்! தூக்கில் இடுக என்னை! (ஓர் இளைஞன் மக்கள் கூட்டத்தைத் தாண்டித்தூக்கு மேடையை நோக்கி ஓடி வருகின்றான். கூட்டத்தில் வியப்பு) |
| அரசன்: | நீரோ கொலை செய்தீர்? ஏன் கொலை செய்தீர்? உமக்கும் இறந்த மங்கைக்கும் என்ன தொடர்பு? பொதுநலங் கருதி எல்லாவற்றையும் விளக்க வேண்டுகிறேன். |
| இளைஞன்: | எதையும் கூற விரும்பவில்லை பொதுநலங் கருதி. |
| அரசன்: | இப்படிக் கூறினால் உம்மை எப்படித் தண்டிப்பது? முன்னர் அவர் சொன்னார். நானே கொலை செய்தேன் என்று. இந்நாள் நீர் சொல்லுகிறீர் நானே கொலை செய்தேன் என்று. இதுபோல் இன்னமும் இருக்கக்கூடுமே! எதிர்வந்த உம் சொல்லிலும் பொய்மை இருக்கக் கூடுமே! உண்மை விளக்கம் ஆக வேண்டாமா? இப்படியெல்லாம் நீண்டு கொண்டு போனால் நாம் அமைச்சரையல்லவா இழக்க நேருகின்றது? |
| | **காட்சி** 8**, பக்கம்** 42&43 **உமா பதிப்பகம்** |

(i) இச்சூழலில் வெளிப்படும் அரசனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **சமுதாயப் பின்னணி ஒன்றனை** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **அவைகளைக் கண்டறிந்தால் களைகளை அடியோடு வெட்டியதாகும்** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான காரணம் யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

7 வாடா மலர் நாவலாசிரியர் **அடை பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8 (i) வாடா மலர் நாவலில் **தானப்பனின் தாயாரின் பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலின் **காலப்பின்னணி** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

9 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> பூங்கொடியை அழைத்துக்கொண்டு கடலூர்க்குப் போனேன். மாமனார் வெளியே எங்கும் செல்லாமல் வீட்டோடு இருந்தார். அன்பாகப் பேசினார். “பூங்கொடியின் வாயிலாக எல்லாம் தெரிந்துகொண்டேன். இனிமேல் அப்படிப்பணம் கொடுக்கும் வழக்கம் வேண்டா. அதனால் வீணான மனக்கசப்பு வளரும். கடைசியில் பூங்கொடிக்குத் துன்பமாக முடியும். நான் முன்போல் இருந்தால், அந்தப் பணத்தை முன்னமே திருப்பிக் கொடுத்திருப்பேன். **என் கை முடங்கிவிட்டது**. என்ன செய்வேன்? முடிந்தால், என் ஆயுள் இருக்கும்போதே திருப்பிக் கொடுக்க முயல்வேன். முடியாவிட்டால், விட்டுவிடுங்கள். பூங்கொடிக்கு அதனால் எந்தக் கவலையும் கொடுக்காதீர்கள். என்ன செய்வது? கெட்ட வேளை! இப்படி முடிந்துவிட்டது! பெரியவனை வீட்டுப் பக்கம் சேர்க்க வேண்டா, அவன் முன்போல் இல்லை. அவனை நம்ப முடியவில்லை” என்றார்.
>
> அவர் பார்ப்பதற்கு முன்போலவே இருந்தார். உடலில் தளர்ச்சி தோன்றவில்லை. மனம்தான் மிகத் தளர்ந்து விட்டிருந்தது.
>
> **அத்தியாயம்** 26, **பக்கம்** 260
> **(மல்டி எடுக்கெஷனல் புக் எண்டபிரஸ்** 2020)

(i) இச்சூழலில் வெளிப்படும் பூங்கொடியின் தந்தையின் **பண்புநலன்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **என் கை முடங்கிவிட்டது** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான காரணம் யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

## பாகம் இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

**காலை அழகு**

வெள்ளி முளைப்பினிலே – அழகு
துள்ளுது வான்பரப்பில்! – சிறு
புள்ளின ஓசையிலே – அழகு
பொங்கி வழியுதடி!

காலைப் பிறப்பினிலே – அழகு
கண்ணைக் கவருதடி! – சிறு
சோலைக் கலகலப்பில் – அழகு
சொரியுது உள்ளத்திலே!

சேவல் அழைப்பினிலே – அழகு
சிந்தையை அள்ளுதடி! – மன
ஆவல் அழித்துவிட்டால் – அழ
கானது நம்முடைமை!

தாமரை மொட்டுக்குள்ளே – அழகு
தங்கிக் கிடக்குதடி! – கதிர்
சாமரை வீச்சினிலே – விரிந்து
சஞ்சலம் போக்குதடி!

வீடு துலக்கும்பெண்கள் – குளிர்முகம்
வீசும் ஒளியழகில் – வான்
நாடு விட்டுநகரும் – முழுமதி
நாணி முகம்வெளுத்தே!

**- கவிஞர் வாணிதாசன்**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**சஞ்சிக்கூலி**

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் – உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? – உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்! – வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

- **கவிஞர் காரைக்கிழார்**

(i) இக்கவிதையில் கவிஞர் கையாண்டிருக்கும் **ஓசை நயங்கள்** மூன்றனை எழுதுக. [10 *புள்ளி*]

(ii) இக்கவிதையின் மூலம் கிடைக்கப்பெறும் **படிப்பினைகள்** மூன்றனை விளக்குக.

[10 *புள்ளி*]

[20 *புள்ளி*]

## பிரிவு இரண்டு : நாடகம்

12 பிசிராந்தையார் நாடகத்தின் **கதைப்பின்னலை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

13 பிசிராந்தையார் நாடகத்தில் பிசிராந்தையாரின் **பண்புநலன்களை** விளக்கி எழுதுக. [20 *புள்ளி*]

## பிரிவு மூன்று : நாவல்

14 (i) வாடா மலர் நாவலில் பூங்கொடியின் **பண்புநலன்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலின் **உத்திமுறை** மூன்றனை விளக்குக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**அல்லது**

15 (i) வாடா மலர் நாவலில் மோகனாவின் **பண்புநலன்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலின் **மொழிநடை** மூன்றனை விளக்குக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**கேள்வித்தாள் முடிவுற்றது**

**பயிற்சி 4**

[*எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.*]

**பாகம் – ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

வட்ட நிலவினில் பட்ட கறையென
வாழ்க்கை யமைந்தது பாருங்கடி
வெட்ட வெளியினில் பட்ட மரமென
வேரற்றுப் போனதேன் கூறுங்கடி

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
**வீறுகொண்டே** கும்மி கொட்டுங்கடி!

**-கவிஞர் காசிதாசன்**

1 இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?

(2 *புள்ளி*)

2 இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக.

(4 *புள்ளி*)

3 (i) **வீறுகொண்டே** என்பதன் பொருள் யாது?

(2 *புள்ளி*)

(ii)

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

இவ்வடிகளில் பெண்கள் நிலை உயர மேற்கொள்ள வேண்டிய **நடவடிக்கை** ஒன்றனைக் குறிப்பிடுக.

(2 *புள்ளி*)

[10 *புள்ளி]*

**பிரிவு இரண்டு : நாடகம்**

4 நாடகாசிரியர் ஈடுபட்ட **பிற துறை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

5 (i) பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெற்ற **மன்னர்** ஒருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள **உத்திமுறை** ஒன்றனைக் குறிப்பிடுக (2 *புள்ளி*)

6 கீழ்க்காணும் சூழலை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| கோப்பெருஞ்சோழன்: | என் தோள் எனக்குத் துணை! என் ஒரு வாள் எனக்குத் துணை! (வாளை உருவுகிறான்).<br>பெற்றவன் பிள்ளைகளை இழக்கட்டும். என் நாடு தான் பெற்ற இன்னலை இழக்கட்டும். என் ஆட்சி தன் பெரும்படையை இழக்கட்டும். என் பெரும் படையினர் தலைகளை இழக்கட்டும். (எழுகின்றான். சோழ மன்னி சோழ மன்னனின் காலைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விடுகின்றாள்.) |
| சோழ மன்னி: | பெருந்தவங் கிடந்து பெற்ற பிள்ளைகளல்லவா அத்தான்! நீங்கள் போக வேண்டாம். நானே சென்று நல்லது சொல்லித் திருத்துகின்றேன். அவர்கள் திருந்துவார்கள். |
| கோப்பெருஞ்சோழன்: | தாயாரும் சேயர் கட்சி! என்னைக் கொன்று என் முடி பறிக்க இருக்கும் பிள்ளைகளின் கட்சிதான் என் அன்பு மனைவியும்! உனக்கு உன் பிள்ளைகள் மேல் அன்பு தோன்றலாம். இயற்கைதான். ஆனால் நிலைமை வேறு. உன் அன்பைக் காட்டு. அழு! கண்ணீரால் நனை. **இதோ கொண்டு வருகின்றேன் இரண்டு தலைகளையும்**! |

**காட்சி** *29*, **பக்கம்** *113-114*
**உமா பதிப்பகம்**, 2020

(i) இச்சூழலில் வெளிப்படும் கோப்பெருஞ்சோழனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியைக்** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **இதோ கொண்டு வருகின்றேன் இரண்டு தலைகளையும்**! என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

**பிரிவு மூன்று : நாவல்**

7 வாடா மலர் நாவலாசிரியர் எழுதிய **பிற நாவல்** ஒன்றனைக் குறிப்பிடுக.
(2 *புள்ளி*)

8 (i) வாடா மலர் நாவலின் **துணைக் கதாப்பாத்திரங்களுள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலில் இடம்பெற்ற **சிக்கல்** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

9 கீழ்க்காணும் சூழலை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

"சித்திக்கு அன்பு இல்லை. ஆனால், சுடர்விழி நல்ல பெண். சித்தியின் மனமும் கரையும்படியாக நடந்து கொள்கிறாள். என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்கிறாள். எப்போதும் பணிவாக நடக்கிறாள். அதனால்தான், சித்தியாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை" என்றான்.

"நீயும் அப்படி நடந்து தொலைக்கலாமே?" என்றேன்.

"முடிந்த வரைக்கும் நடக்கிறேன். சில சமயங்களில் முடியவில்லை. என் வெறுப்பைக் காட்டிவிடுகிறேன். அதற்காகத் தண்டனை கிடைக்கிறது. சுடர்விழி எப்படியோ ஒட்டிக் கொண்டிருக்கிறாள். இன்னும் எவ்வளவு காலம் என்னால் இருக்க முடியும் என்று தெரியவில்லை," என்று கண் கலங்கினான்.

"ஏன் கவலைப்படுகிறாய்? நாளடைவில் எல்லாம் சரியாய்ப் போகும்."

"எனக்கு அப்படித் தெரியவில்லை. முன்னெல்லாம் வாயால் அடித்தார்கள். உடம்பில் அடித்தார்கள். **இப்போது வயிற்றிலும் அடிக்கிறார்கள்**. என்னால் சில நாட்கள் பொறுக்க முடியவில்லை. எங்காவது ஓடிப் போகலாமா என்று தோன்றுகிறது."

*(**அத்தியாயம்** 8, **பக்கம்** 62-63)*
*(**மல்தி எடுகேசனல் புத்தக நிலையம்** 2020)*

(i) இச்சூழலில் வெளிப்படும் தானப்பனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் இடம்பெற்ற **உத்திமுறையை** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **இப்போது வயிற்றிலும் அடிக்கிறார்கள்** என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது?
(2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

## பாகம் இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக .

### பிரிவு ஒன்று : கவிதை

### காடு

கல்தோன்றி மண்தோன்றிக் கடின மாகிக்
காசினியை உருச்செய்த பின்னர்ப் பச்சைப்
புல்தோன்றிச் செடிதோன்றிக் கொடியும் தோன்றிப்
பூதமென வளர்ச்சியுள மரமும் தோன்றி
எல்லாமொன் றாய்ச்சேர்ந்து வீசுங் காற்று
எரிகதிரோன் குளிர் நிலவாள் நுழையா வண்ணம்
வல்லடர்த்தி இருள் சேர்ந்த தென்பாம் காடே
மனிதகுல முதல் தலையோர் வாழ்ந்த வீடே!

காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவைகொ டுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த
பறவைவருந் தும்தம்மின் கூட்டில் வாழ்ந்து
ஆட்டத்தை மயில்பாம்பு மானின் கூட்டம்
அவற்றிடம்நாம் கற்றோமே; எண்ணிப் பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற் றோமே!

நண்பகலில் காடுபெறும் இருளே இன்று
நந்தமிழின் இருளாம்; நள் ளிரவுப் போதில்
சொன்னஅந்தக் காட்டினிலே சேரி ருட்டுத்
துயருறுநம் தமிழ்க்குலத்து வாழ்வி ருட்டே!
நண்பகலில் நள்ளிரவில் அமைதி யின்றி
நடுக்காட்டில் பலசத்தம் கேட்டல் போல
ஒன்றுபடும் குணமில்லாத் தமிழ் மக்கள்
உறையுமிடத் தில்நாளும் சத்தம் கேட்கும்.

பெண்ணவளின் மேனியிலே சேர்ந்த ஆடை
பிடிப்பாக உடல்தழுவி இருத்தல் போன்று,
வன்மரத்தோ டிணைந்தபடி கொடிகள் ஏறும்;
வளர்ந்தபெரு மரங்களின்வேர் நீண்டே பக்கம்
நின்றிருக்கும் மரவேரில் நன்றாய்ப் பின்னும்;
நினைத்தபடி தரையிற்படர் கொடிக ளுள்ளே
சென்றுவிளை யாடும்சில உயிர்கள்! தாயைச்
சேர்ந்திருக்கும் பிள்ளைவிளை யாடல் போன்று!

மானமுள்ள வாழ்க்கைக்குக் கவரி மானே
வாய்த்திடுநல் உவமையென்பார்? அஞ்சா மைக்குக்
கானகத்துப் புலிசிங்க வாழ்வைச் சொல்வார்!
காதலுக்கும் கற்பிற்கும் அன்றில் பண்பே
வானகத்தார் பண்பினுக்கும் மேலாம் என்பார்;
மானிடர்க்கு வாழ்வுநெறி கற்றுத் தந்த
கானகமே! என்னகமே! குளிர்ந்த நெஞ்சால்
கவின்தமிழால் வாழ்த்துகிறேன் வாழ்க வாழ்க!

**- கவிஞர் பாதாசன்**

10 கீழ்க்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**காவியமும் ஓவியமும்**

எழுத வேண்டுமென் றுணர்வு தூண்டப்
படிப்பறை சென்று பற்றினேன் தூவல்;
பழந்தாள் பொறுக்கிப் படியச் செய்தே
உணர்வுக் கலவையை ஓட விட்டேன்;
என்னை மறந்தே எழுதும் வேளையில்

ஏதோ ஒன்றென் உடலில் உரசும்
உணர்வு தோன்றினும் உளந்திருப் பாமல்
பாட்டாய்க் கனிந்து படைத்த வேளையில்
பாட்டுத் தேனைப் பாய்ச்சிய தூவல்
பறிபோ யிற்றுப் பதறி எழுந்தேன்!
புத்தம் புதிய புத்தகத் தினிலே
என்னிடம் பறித்த எழுது கோலால்
என்மகன் ஏதோ எழுத லுற்றான்!
காற்றொடு காற்றாய்க் கடலொடு கடலாய்ப்
பூவொடு பூவாய்ப் புனலொடு புனலாய்
ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லையில்
நின்றிவ் வுலகை மறந்த வேளையில்
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.
வெம்பிய மகன்குரல் விழுந்தது செவியில்
மனமோ படைப்பின் வழியில் நடந்ததால்
மகனின் குரலோ மங்கித் தேய்ந்தது.
உணர்வு முற்றும் உருவங் கொண்டதும்
உற்ற பெருமிதம் உரைத்தல் கூடுமோ?
உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்
படைத்தஎன் பாட்டைப் படிக்கத் தொடங்கினேன்.
'அத்தான்' என்றொரு குரல்செவி மேவத்
திரும்பிப் பார்த்தேன்; மனையாள் ஆங்கே,
"உங்கள் திருமகன் உயர்கை வண்ணம்
பாரும்!" என்று பல்லெல்லாம் தெரியச்
சிரித்து நின்றாள்; திரும்பினேன்! அடடா!

எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
அடுப்புக் கரியுடன் அருமை மகன்தான்
ஆங்கே அருங்கலை மணிபோல்
தேங்கும் மகிழ்ச்சி சிறக்கநின் றனனே!

- **கவிஞர் முரசு நெடுமாறன்**

(i) இக்கவிதையில் காணப்படும் **நயங்களை** விளக்கி எழுதுக .

(10 *புள்ளி*)

(ii) இக்கவிதை உமக்குள் ஏற்படுத்திய **தாக்கங்களை** விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**பிரிவு இரண்டு: நாடகம்**

12 பிசிராந்தையார் நாடகம் உமக்குள் ஏற்படுத்திய **தாக்கங்களை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

13 பிசிராந்தையார் நாடகத்தின் **துணைக் கருப்பொருள்களை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**பிரிவு மூன்று: நாவல்**

14 (i) வாடா மலர் நாவலில் கனகத்தின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலின் **இடப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 *புள்ளி*]

[20 *புள்ளி*]

**அல்லது**

15 (i) வாடா மலர் நாவலில் குழந்தைவேலுவின் தந்தையின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

[10 *புள்ளி*]

(ii) வாடா மலர் நாவலின் **கருப்பொருளை** விளக்கி எழுதுக.

[10 *புள்ளி*]

[20 *புள்ளி*]

**கேள்வித்தாள் முடிவுற்றது**

## பயிற்சி 5

[*எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்.*]

**பாகம் – ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

விளையும் பயிரை வளரும் கொடியை
வேருடன் அறுத்து விளையாடும் – மனம்
**வெந்திடும்** தோட்டக்காரனிடம்
மிரட்டல் வார்த்தைகளாடும் – பல
வரட்டுக் கீதமும் பாடும் – விதவிதமான
பொய்களை வைத்துப்
புரட்டும் உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா

**-கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்**

1 இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 *புள்ளி*)

2 இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **அணி நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 *புள்ளி*)

3 (i) **'வெந்திடும்'** என்பதன் **பொருள்** யாது? (2 *புள்ளி*)

விளையும் பயிரை வளரும் கொடியை
வேருடன் அறுத்து விளையாடும் – மனம்
**வெந்திடும்** தோட்டக்காரனிடம்
மிரட்டல் வார்த்தைகளாடும் – பல
வரட்டுக் கீதமும் பாடும் – விதவிதமான
பொய்களை வைத்துப்
புரட்டும் உலகமடா– தம்பி

(ii) இவ்வரிகளின் வழி யாரிடம் நாம் கவனமாக இருக்க வேண்டும் என்று கவிஞர் வலியுறுத்துகிறார்? (2 *புள்ளி*)

[10 *புள்ளி*]

**பிரிவு இரண்டு : நாடகம்**

4 பிசிராந்தையார் நாடக ஆசிரியரின் **தொழிலைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

5 (i) இந்நாடகத்தில் **அரசியின் பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இந்நாடகத்தின் **மொழிநடையைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

பிசிராந்தையார்: கண்ணைத் திறவுங்கள்! உற்றுப் பாருங்கள். வாழப் பிறந்தவளாயிற்றே அன்பர்களே! சாகப்பிறந்தவளா அவள்? வட்டில் அமிழ்தாயிற்றே! கொட்டிக் கவிழ்க்கலாமா எத்தால் குறைந்தாள்? எக்குற்றம் புரிந்தாள்? வைத்து வைத்துப் பார்க்கும் வடிவழகுக்குக் குத்தும் வெட்டுமா அன்பளிப்பு? பாண்டிய நாட்டின் நடைமுறைக் குறிப்பில் யாண்டும் இத்தகைய கொடிய வரலாறு காண்டல் உண்டா தூக்கிய கத்தி அவளின் துணுக்குற்ற விழி கண்டும் தாக்கத் துணிந்த துண்டா? ஏந்திய கொடுவாள் கண்ட எந்திழையின் மாந்தளிர் மேனி நடுங்கக் கண்டும் மாய்ந்திடச் செய்ய மனமும் வருமா? காதல்
இருவர் கருத்து ஒருமித்து வாழ்வதைக் கண்டு மகிழ வேண்டுமா? அவள் சாதலைக் கண்டு மகிழ வேண்டுமா? தூயனே எண்ணிப் பார்?

தூயன்: ஐயோ! ஐயோ, நான் மகிழவில்லை. என்னை நான் இகழுகிறேன்.

பிசிராந்தையார்: நாளெல்லாம் அவள் நடத்தையில் நலங்கண்ட நீ, கோள் சொன்னது கொண்டு, ஆராயாமல் வாள் கொண்டு மங்கையை மாய்த்தது மடமை இல்லையா மான்வளவனே?

*(அங்கு நடுவில் ஒரு பெட்டி மேல் வாள் வைக்கப்பட்டிருக்கிறது. அதை உற்றுப் பார்க்கிறான் தூயன். அதை அறிந்து கொள்ளுகின்றார் பிசிராந்தையார்.)*

பிசிராந்தையார்: தற்கொலை செய்து கொள்வது பெருங்குற்றம். நீங்கள் செய்த குற்றத்திற்குத் தண்டனை கேட்பது மெய்தானா? மனமாரச் சொல்லுகின்றீர்களா? மேலுக்கா?

தூயன்– மான்வளவன்: மனமாரச் சொல்லுகிறோம்.

தூயன்: சாகாதிருக்கும் ஒவ்வொரு கணமும் நான் தணியாத தணலில் துடிக்கின்றேன். ஐயா, (உடல் துவளல், தலை தொங்கல்)

மான்வளவன்: இருக்கும் வரை துன்பம். இறந்தால்தான் இன்பம்!
(சோர்ந்து உட்கார்ந்து விடுகிறான்).

(**காட்சி** 15, **பக்கம்** 78 & 79)
(**உமா பதிப்பகம்** 2020)

(i) இச்சூழலில் காணப்படும் தூயவனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக.
(2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **படிப்பினை** ஒன்றனை எழுதுக.
(2 *புள்ளி*)

(iii) **வைத்துப் பார்க்கும் வடிவழகுக்குக் குத்தும் வெட்டுமா அன்பளிப்பு**?
என்பதன் **சூழலுக்கேற்ற பொருள்** யாது?
(2 *புள்ளி*)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

7 வாடா மலர் நாவலாசிரியரின் **கல்வி தகுதி** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8 (i) வாடா மலர் நாவலில் **தானப்பனின் நண்பர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) வாடா மலர் நாவலின் **இடப்பின்னணி** இரண்டினைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

9 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

நான் ஒதுங்கி நிற்பதையும் மருண்டு பார்ப்பதையும் கவனித்த அவன்," இப்படி அஞ்சக் கூடாது; தயங்கக்கூடாது. முரடன் போல் அஞ்சாமல் இருந்தால்தான் இங்கே மற்றவர்கள் மதிப்பார்கள். "அடி" என்று சொல்பவர்களுக்கு முன்னே "உதை" என்கிறவனுக்குத்தான் இங்கே பெருமை. நான் கிராமத்திலிருந்து வந்தவன். முதல் ஆண்டில் படாத பாடுபட்டேன். ஒருநாள் என்னைச் சிறுநீர் கழிக்கும் அறையில் விட்டு பூட்டிவிட்டார்கள். மற்றொருநாள் என் பெட்டியை எங்கேயோ கொண்டு போய் ஒளித்துவிட்டார்கள். இப்படி நான் பட்டது எவ்வளவோ. உன் அறையில் உள்ள கருணாகரனும் பொல்லாதவன். தேர்வுக்கு முன்னே நான்கு வாரம் உட்கார்ந்து படித்தால் போதும் என்னும் கொள்கை உடையவன்.

ஓடினால் துரத்தும் நாய்போல் அஞ்சினால் மருட்டுவான். என்னைப் போல் ஐந்தாறு பேரைப் பக்கபலம் சேர்த்துக்கொள். அடிக்கடி எங்களோடு பழகு. **உனக்கு ஒரு சேனை இருக்கிறது என்று தெரிந்தால் பேசாமல் விட்டுவிடுவான்**. போகப் போக நீயே எவ்வளவோ கற்றுக் கொள்வாய்" என்றான்.

நல்ல நட்புத்தான் கிடைத்தது என்று மகிழ்ச்சி கொண்டேன். இரவு உணவுக்குப் போனபோது அவனோடு போனேன்.

**காட்சி** 12, **பக்கம்** 85 & 86
**(மல்டி எடுக்கேஷனல் புத்தக நிறுவனம்)**

(i) இச்சூழலில் வெளிப்படும் பழனிசாமியின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

(ii) இச்சூழலில் காணப்படும் **சமுதாயப் பின்னணியை** எழுதுக. (2 *புள்ளி*)

(iii) **உனக்கு ஒரு சேனை இருக்கிறது என்று தெரிந்தால் பேசாமல விட்டுவிடுவான்** என்பதன் சூழலுக்கேற்ற **பொருள்** யாது? (2 *புள்ளி*)

(iii) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி*]

## பாகம் இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக

### பிரிவு ஒன்று : கவிதை

**வாழ்க்கையே ஒரு திருவிழா**

வாழ்க்கை யேஒரு திருவிழா
வந்துள் ளோம்கொண் டாடவே
ஆழ்ந்துள் ளோம் அன் பிணைப்பினில்
அனைத்துயி ரிலும்நாம் வாழுவோம்!

காலை எழுந்ததும் உன் அன்பினில்,
காரணம் இலாத மகிழ்ச்சியில்
சாலையில் நீர்தெ ளிக்கையில்
தழுவும் நம்மனம் களிப்பினில்!

நம்மைச் சுற்றிலும் அழகொளி
ஞாயிறு ஒண்கதிர் நேருறச்
செம்மை அன்பையே பொழிந்திடும்
சேர்ந்து வந்திடும் ஊரெலாம்!

வியப்புற மக்கள் இயக்கமும்
வேறு வேறொலிப் புட்களின்
தயக்கம் ஒன்றிலாப் பல்லிசை
தழுவச் செய்திடும் வாழியே!

நாள்பொழு தெலாம்உன் அன்பொலி
நல்வழிக்கு என்னை அழைத்திடும்
நாள்பொழு தெலாம்உன் அன்புளம்
நம்பிக் கையின்மகிழ் வூட்டிடும்!

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
கணந்தொறும் வாழ உதவுமே!

\- **த. கோவேந்தன்**

10 மேற்காணும் கவிதையின் **கருத்துகளைத் தொகுத்து** எழுதுக.

(20 *புள்ளி*)

**அல்லது**

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**சூரியன் வருவது யாராலே?**

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவதும் எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே?
யாரிதற் கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாவோ?

தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
தரையில் முளைத்திடும் புல்ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவைஎல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ?

எத்தனை மிருகம்! எத்தனைமீன்!
எத்தனை ஊர்வன பறப்பனபார்!
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யும்தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பதுமெய்.

அல்லா வென்பார் சிலபேர்கள்;
அரன்அரி யென்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்
வாழும் தந்தை யென்பார்கள்;
சொல்லால் விளங்கா ‘நிர்வாணம்’
என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்.
எந்தப் படியாய் எவர் அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

**-கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை**

(i) இக்கவிதையில் கவிஞர் கையாண்டிருக்கும் **நயங்கள்** மூன்றனை எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) இக்கவிதையின் மூலம் கிடைக்கப்பெறும் **படிப்பினைகள்** மூன்றனை விளக்குக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**பிரிவு இரண்டு : நாடகம்**

12 (i) பிசிராந்தையார் நாடகத்தில் **அறிவுடைநம்பியின் பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **உத்தி முறைகள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**அல்லது**

13 (i) பிசிராந்தையார் நாடகத்தில் **கோப்பெருஞ் சோழனின் பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **சமுதாயப்பின்னணி** மூன்றனை விளக்கி எழுதுக.

(10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**பிரிவு மூன்று : நாவல்**

14 வாடா மலர் நாவலில் **குழந்தைவேலுவின்** பண்புநலனை விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**அல்லது**

15 வாடா மலர் நாவலின் **படிப்பினைகளை** விளக்கி எழுதுக.

[20 *புள்ளி*]

**கேள்வித்தாள் முடிவுற்றது**

# விடைப்பட்டி

## பயிற்சி 1

| கேள்வி எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 1 | அன்பு | 2 |
| 2 | எதுகை : | 4 |
| | நா**ள்**பொழுது – நா**ள்**பொழுது | |
| | *பிற ஏற்புடைய பதில்கள்* | |
| | மோனை : | |
| | **நா**ள்பொழுது – நல்வழிக்கு | |
| | **நா**ள்பொழுது – நம்பிக்<br>*பிற ஏற்புடைய பதில்கள்* | |
| 3 | (i) ஒவ்வொரு நொடியும் | 2 |
| | (ii) அன்பான உறவு | 2 |
| | *பிற ஏற்புடைய பதில்கள்* | |
| 4 | பாவேந்தர் | 2 |
| 5 | (i) அகநோக்கு நிலை | 2 |
| | (ii) - பிசிராந்தையார்<br>- மேற்படியார் | 2 |
| 6 | (i) - மக்கள் நலனில் அக்கறையும் கொண்டவர்<br>- கடமை தவறாதவர் | 2 |
| | (ii) நனவோடை உத்தி | 2 |
| | (iii) மனம் நிறைய வஞ்சக எண்ணம் | 2 |
| | (iv)<br>▪ குட்டையில் கிடைக்கப்பெற்ற பெட்டியில் ஒரு நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணின் உடல் கிடக்கிறது என்ற தகவல் அறியப்படுகிறது.<br>▪ அரசர் கொலையாளியைக் கண்டுபிடிக்க அமைச்சனுக்கு ஆணையிடுகிறான்;இல்லையேல் தானும் மடிவதாகக் கூறுகிறான்.<br>▪ அமைச்சனும் மூன்று நாளில் கண்டுபிடிக்காவிட்டால் தானும் மடிவதாகக் கூறுகிறான்.<br>▪ நான்கு மணிக்குள் கொலையாளியைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லாவிட்டால் அமைச்சன் தூக்கிலிடப்படுவான் என்கிறான்.<br>▪ அரண்மனையில் அமைச்சன்,மற்றவர் யாவரும் தத்தம் கடமையில் இருந்து தவறிவிட்டார்கள் என்றான் அரசன்.<br>▪ அமைச்சனுக்குத் தூக்குமேடை தயாராகிறது.<br>*பிற ஏற்புடைய பதில்கள்* | 3 |
| 7 | இந்திய ஜனாதிபதியின் சாகித்திய அகாடமி விருது | 2 |
| 8 | (i)<br>▪ தானப்பன்<br>▪ வேணு<br>▪ சுக்கூர் | 2 |
| | (ii)<br>▪ பொருளியல் அடிப்படை<br>▪ சமூகவியல் அடிப்படை | 2 |
| 9 | (i)<br>▪ தைரியமாகக் கருத்தை வெளிப்படுத்துபவர்<br>▪ மற்றக் குழந்தைகளின் மேலும் அக்கறை உள்ளவர்<br>*பிற ஏற்புடைய விடைகள்* | 2 |
| | (ii) உரையாடல் உத்தி | 2 |
| | (ii) தானப்பனின் தந்தை,இரண்டாம் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்.<br>*பிற ஏற்புடைய விடைகள்* | 2 |

| | | |
|---|---|---|
| | (iv)<br>▪ தன் குழந்தைகளைப் பார்த்துக்கொள்வதற்காகச் சித்தி, சுடர்விழி பள்ளிக்குப் போகாமல் நிறுத்திவிடுகிறாள்.<br>▪ மேலும் தானப்பனையும் வீட்டில் ஓர் அறையில் பூட்டி வைக்கின்றார்.<br>▪ அது மட்டுமல்லாமல் தானப்பனின் தந்தை தானப்பனை அடித்துத் துன்புறுத்துகின்றார். | 3 |
| 10 | **முன்னுரை**<br>▪ நாளை நமதே- வாழ்க்கை/ தமிழர் தம் சிறப்புகளை அறிந்தாள் எதிர்காலம் சிறக்கும்<br>▪ கவிஞர் காசிநாதன்.<br>▪ பல தெரிநிலைக் கருத்துளைக் கூறியுள்ளார்<br><br>**கருத்து**<br>கண்ணி 1<br>▪ இயற்கை அழகு மிகுந்தது எங்கள் நாடென்றே ஒன்றாய்க் கூடுவோம்.<br>▪ குன்றினில் நின்று தோகை விரித்தாடும் மயிலைப்போல கும்மி கொட்டி மகிழ்வோம்.<br><br>கண்ணி 2<br>▪ தோட்டத்தில் பார்க்கும் திசைகளிலெல்லாம் காணும் ரப்பர், செம்பனை, ஈயம் ஆகிய வளங்கள் எல்லாம் நம் முன்னோர்களின் சிறந்த உழைப்பைப் பறைசாற்றுகின்றன.<br>▪ அவை நமக்குக் கிடைத்த பெருமையென்று பாடி மகிழ்வோம்.<br><br>கண்ணி 3<br>▪ பத்துமலைக்குத் திரண்டு வருகின்ற மக்கள் கூட்டமெல்லாம் அங்குக் காணப்படும் உயர்வான கலை நுட்பத்தைக் கண்டு மனம் மயங்குகின்றன. அப்பெருமையை எண்ணி நாம் கும்மி கொட்டுவோம்.<br><br>கண்ணி 4<br>▪ ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்துச் சிறப்பாக வாழ்ந்த நம் முன்னோர்களின் வாழ்க்கை நமக்கு நல்லதொரு வழிகாட்டி.<br>▪ உலகில் சிறந்து விளங்கியவர்கள் முத்தமிழர்கள் என்று கும்மி கொட்டி மகிழ்வோம்.<br><br>கண்ணி 5<br>▪ முழு நிலவில் ஏற்பட்ட கறையைப்போல மலேசியத் தமிழர்களின் வாழ்விலும் களங்கம் இருப்பதை அறியவேண்டும்.<br>▪ திறந்த வெளியிலுள்ள பட்டுப்போன மரம்போல் தமிழர்களின் வாழ்வு சீர்குலைந்து போனதற்கான காரணத்தையும் அறியவேண்டும்.<br><br>**முடிவுரை**<br>• ஏற்புடையது | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |
| 11 (i) | ➢ **உவமை அணி - ஒத்ததை ஒப்பிடுதல்**<br>▪ சிவந்த பவளம் சிதறினாற் போன்று<br>▪ கைவிரல் போன்ற காந்தள்<br>▪ செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ<br>▪ அணிலின் சிறுவா லதுபோல்<br>▪ கழுத்தை உயர்த்தும் கலைமான் போன்று<br>▪ நெருப்பென மலர<br><br>➢ **உருவக அணி - உவமையைப் பொருளில் ஏற்றல்**<br>▪ காயா மலர்கள் – மயிலின் கொண்டை<br>▪ ஈர நொச்சியின் இலைகள் – மயிலின் பாதம்<br>▪ உன்னுடல் மரகதம் – பச்சை நிறம்<br>▪ ஓலை விசிறியால் – மயிலின் தோகை | கருத்து<br><br>3x3=9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | ➢ **பின்வருநிலை அணி - வந்த சொல்லே மீண்டும் வருதல்**<br>▪ மயிலே – மயிலே<br>▪ அகவும் – அகவும்<br>▪ காண்கிறேன் – காண்கிறேன்<br>▪ தோகையில் – தோகையில்<br>▪ உன் – உன்<br>▪ வாழ்க்கை – வாழ்க்கை<br>➢ **திரிபு அணி -சீர்களின் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துக்களாக ஒன்றி வருவது.**<br>▪ அன்று – நின்று<br>▪ மயிலே – வெயிலே<br>➢ **தற்குறிப்பேற்ற அணி - அஃறிணையில் உயர்திணை போல் தன்கருத்தை ஏற்றுதல்**<br>▪ கால மறிந்து கருமுகில் மழைதர<br>▪ தம்பலப் பூச்சிகள் தரைமீது தவழ<br>▪ கருநிற வண்டுகள் காந்தாரம் பாடிட<br>▪ முல்லை அரும்புகள் மெல்ல நகைக்க<br>▪ நீருண்ட முகிலோ<br>▪ ஈர முகிலினை ஏன்விசிறு கின்றனை?<br>▪ ஓ வெனும் எழுத்தை உண்டாக்கி காட்டினை<br>➢ **தன்மை நவிற்சி அணி - -இயல்பான வருணனை**<br>▪ அகவும் மயிலே அகவும் மயிலே<br>▪ ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும்<br>▪ உன்விழி நீலம்! உன் தோகை நீளம்<br>▪ வண்ணத் தோகையை வட்டமாய் விரித்து<br>▪ கண்டேன் களித்தேன் மீண்டும் காண்கிறேன்<br>▪ (கவிதையில் உள்ள ஏற்புடைய அடிகளைச் சான்றாகக் கொள்ளலாம்)<br>➢ **சுவை அணி-உள்ளத்தில் நிகழும் உணர்வு வெளிப்பாடு.**<br>அகவும் மயிலே அகவும் மயிலே!<br>(கவிதையில் உணர்வுகளை ஏற்படுத்தும் அடிகளைச் சான்றாகக் கொள்ளலாம்) | |
| 11 (ii) | ▪ மயிலின் அழகில் மனம் மயங்கியது.<br>▪ மயிலின் சிறப்புகளை மக்களுக்கு எடுத்துணர்த்த வேண்டும்.<br>▪ செந்தமிழை அழகிய மயிலுக்கு ஒப்பிடுவது அம்மொழியின் பெருமையை எனக்கு உணர்த்துகிறது.<br>▪ மொழியை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.<br>▪ தமிழர்கள் பலவற்றுக்கு இலக்கணம் வகுத்து வாழ்ந்தது பெருமையளிக்கிறது.<br>▪ அவ்விலக்கணங்களை சமுதாயத் தலைவர்கள் குமுகாயத்திற்கு சொல்லிக் கொடுக்க வழிவகுக்க வேண்டும்.<br>▪ பல சிறப்புகளைக் கொண்ட மயிலைப் பாதுகாக்க வேண்டும் என்று உணர்வு தோன்றுகின்றது.<br>▪ அரசாங்கம் மயிலைப் பாதுகாக்க வேண்டும். | கருத்து<br>3x3=9<br>மொழி<br>1 |
| 12 (i) | மனைவியின் மீது அன்பு கொண்டவன்<br>▪ பச்சைக்கிளியைத் திருமணம் புரிந்து பாசத்தோடு கவனித்துக் கொள்ளுதல்<br>▪ கர்ப்பிணியான பச்சைக்கிளி கேட்கும் அனைத்தும் செய்து கொடுத்தல்.<br>▪ பச்சைக்கிளிக்காக இலந்தைக் கனி கொண்டு வருதல்.<br>சந்தேகக் குணமுடையவன்<br>▪ பச்சைக்கிளியின் மீது சந்தேகம் கொள்ளுதல்.<br>▪ சந்தேகம் கொண்டு பச்சைக்கிளியைக் கொலை செய்தல். | கருத்து<br>3x3=9<br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | அவசர புத்தியுள்ளவன்<br>▪ தீர ஆராயாமல் அவசரப் பட்டு பச்சைக்கிளியைக் கொலை செய்தல்.<br><br>உண்மையைக் கூறுபவன்<br>▪ பாண்டிய மன்னனிடம் பச்சைக்கிளியைக் கொலை செய்ததாக உண்மையைக் கூறுதல்.<br><br>தவற்றை உணர்ந்து வருந்துபவன்<br>▪ தூயவளான பச்சைக்கிளியைச் சந்தேகப்பட்டுக் கொலை செய்ததை எண்ணி வருத்தம் கொண்டு தூக்கிலிடச் சொல்லுதல். | |
| 12 (ii) | இலக்கிய நடை<br>(இலக்கிய நயத்தோடு ஆசிரியர் படைத்திருக்கும் வரிகள்)<br><br>தூக்கிய கத்தி அவளின் துணுக்குற்ற விழி கண்டும் தாக்கத் துணிந்த துண்டா? ஏந்திய கொடுவாள் கண்ட ஏந்திழையின் மாந்தளிர் மேனி நடுங்கக் கண்டும் மாய்ந்திடச் செய்யும் மனமும் வருமா?<br><br>காற்றும் மழையும் கை கோர்த்து ஆடி மகிழ்ந்தபடி துடுக்குத் தனத்தையும் தொடங்கி விட்டன. என்ன இது? பூக்களின் இதழும் ஈக்களின் குரலும் நனைந்தன.<br><br>▪ பேச்சு வழக்கு<br>(அன்றாட வாழ்வில் மக்கள் இயல்பாகப் பேசும் மொழியாகும்)<br><br>பச்சைக்கிளி: பள்ளிக்குச் செல்வது உனக்குப் பெருங்கசப்பு. சென்றுவிட்டால் அங்குச் சிறிது நேரம் தங்கியிருப்பதும் பிடிக்கிறதில்லை.<br>பொன்னன்: அப்பா இலந்தைப் பழம் கொண்டாருவாங்க.<br><br>ஓடைப்பூ: ஐயோ! ஐயோ! என் வாழ்வு என்ன ஆவது மாமா? கொண்டை நிறையப் பூ வைத்துக் கொள்வதில் உனக்கு விருப்பமில்லையா? நெற்றி நிறையப் பொட்டிட்டுக் கொள்வதில் உனக்கு விருப்பமில்லையா?<br>உடையப்பன்: ஒரு மீன், ஒரே மீன் அகப்படட்டுமே!<br><br>▪ காதல் மொழி<br>(அன்பில் இணைந்த இருவரிடையில் எழும் அன்புமொழி)<br>பச்சைக்கிளி: என் நாணம் என் வாயை அடைக்க வேண்டாம். நான் உன்னைத்தான் மணப்பேன். நீயும் அப்படித்தானே?<br>மான்வளவன்: அப்படியானால் நம் பெற்றோருக்குத் அறிவிப்போம் நம் கருத்தை.<br>மணியிடை: வராதிருந்தாலும் வருத்தம் உண்டாகாது.<br>இளங்கோ: வந்ததால் ?<br>மணியிடை: பிரியத்தானே நேரும்? என் மனம் படும்பாடு எனக்கல்லவா தெரியும்?<br><br>▪ வருணனை<br>(ஒன்றின் தன்மையையும் இயல்பையையும் சுவைபட அழகிய மொழியில் வெளிப்படுத்துதல்)<br><br>பாண்டியன்: தூங்காமணி விளக்கத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிய கள்ளனைப்போல வெள்ளிய நிலாவை அள்ளிக் கொண்டு போய் மறைத்தது கருமுகில். நள்ளிருள் உலகுகுத் திரையிட்டது.<br><br>•பிசிராந்தையார்: அன்னச் சேவல்! அன்னச் சேவல்!<br>ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்<br>நாடுதலை யளிக்கும் ஒண்முகம் போலக்<br>கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்<br>அன்னச் சேவலே! நீ குமரிப் பெருந்துரையின்...<br><br>▪ சந்தநடை/அடுக்கு மொழி | கருத்து<br><br>3x3=9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | (ஒத்த ஓசையுடைய சொற்களை அடுக்கிச் சுவைபடக் கூறுதல்)<br><br>மேற்படியார்: இரும்படி உன் நெஞ்சம் என்றேன். ஒரு பணம் தரும்படி கேட்டாள். அரிசி வரும்படியிருந்தால் தானே! திரும்படி உன் ஆத்தாள் வீட்டுக்கு என்றேன். பெரும்படி வருந்தினாள். அங்கிருந்து முடியவில்லை. இங்கு வரும்படி நேர்ந்தது.<br>பிசிராந்தையார்: மேற்படியார் கீழ்ப்படியாராகி விட்டார்.<br>முளரி: பொன்னை நடுவிற் சுமந்த புன்னை; அண்டையில் அலறி மாணிக்கத் தென்னை<br><br>▪ வசை மொழி<br>(கோபத்தைக் காட்டும் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தி ஒருவரைத் திட்டுதல்)<br><br>அரசன் : அடே, ஆள எண்ணமா? இல்லை மாள எண்ணம் கொண்டுவிட்டாய்? முன்னேறித் தாக்குவோம். ஏறுங்கள் அண்டியூர்ச்சாலை நோக்கி (பக்கம் 99)<br>பாண்டியன் : நானும் படையுடன் இதோ வந்துவிட்டேன். இழித்துப் பேசிய சோழன் வாயைக் கிழித்துப் போடுகின்றேன் இதையும் சொல் போ!.<br><br>▪ மொழியணிகள்<br>(பழமொழி, மரபுத்தொடர், இணைமொழி, உவமைத்தொடர்)<br>உவமைத்தொடர்: ஒன்றையொன்று தொடரும் கடலலைப்போல்<br>சிங்கத்தைக் கண்ட நரிகள் போல<br>இரட்டைக் கிளவி: கடகட, தகதக<br>சிலேடை: நகை தந்து நகை பறித்தார்<br><br>▪ இசை மொழி<br>(பாராட்டுதல்)<br>பாண்டியன்: பாவேந்தரின் மதிப்பைப் பெற்ற கோப்பெருஞ்சோழன் எத்துணை நற்பண்புள்ளவனாயிருக்க வேண்டும்! அப்பெரியோனா இங்ஙனம் வஞ்சப் போர்க்கு முந்துவான்? | |
| 13 (i) | 1. உதவும் மனப்பான்மை கொண்டவன்<br>▪ பச்சைக்கிளியைக் கரடியிடமிருந்து காப்பாற்றுகின்றான்.<br>▪ பச்சைக்கிளியை வீடு வரை கவனமாக அழைத்துச் செல்கிறான்.<br><br>2. அன்பு உள்ளம் கொண்டவன்<br>▪ பச்சைக்கிளியிடம் தன் காதலைத் தெரிவித்து அன்பாகப் பழகுகிறான்.<br><br>3. உறுதி கொண்டவன்<br>▪ பச்சைக்கிளியைத்தான் மணப்பேன் என்று தன் தாயிடம் உறுதி கூறுகிறான்.<br><br>4. பழிவாங்கும் தன்மை கொண்டவன்<br>▪ பச்சைக்கிளியின் கணவரிடம் இலந்தைப் பழத்தைக் காட்டித் தனக்குக் கிடைத்த அன்பளிப்பு என்கிறான். தன் காதலை மறுத்த பச்சைக்கிளியை அவள் கணவன் வழி பழிவாங்குகிறான்.<br><br>5. உண்மையைக் கூறும் தன்மையுடையவன்<br>▪ பாண்டிய மன்னனிடம் பச்சைக்கிளியின் கொலைக்குத் தான்தான் காரணம் என்று கூறிகிறாள்.<br><br>6. காதல் நிறைவேறாததை ஏற்கும் பக்குவம் இல்லாதவன்<br>▪ பச்சைக்கிளிக்கும் மான்வளவனுக்கும் திருமணம் என்று தெரிந்தவுடன் மனம் நொந்து பேசுகிறான்.<br><br>7. தவற்றை உணர்ந்து வருந்துபவன்<br>▪ பச்சைக்கிளியின் கொலைக்குக் காரணமானதை எண்ணி வருத்தம் கொள்கிறான். | கருத்து<br><br>3x3=9<br><br>மொழி<br>1 |
| 13(ii) | 1. பிசிராந்தையார் வீடு – பேரனோடு விளையாடுதல் | கருத்து |

| | | |
|---|---|---|
| | 2. பாண்டிய அரண்மனை – பச்சைக்கிளி வழக்கு<br>3. சோழ நாடு – போர்<br>4. பச்சைக்கிளி மான்வளவன் வீடு – இலந்த பழம்<br>5. பட்டுக்குடை முத்துநகை வீடு – கோபெருஞ்சோழன்<br>6. மீன் பிடிக்கும் ஏரி – பெட்டி | 3x3=9<br><br>மொழி=1 |
| 14 | முன்னுரை<br>-மு.வரதராசன்<br>-வாடமலர்<br>-நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம்/அடித்தளம்/ பிரதானம்<br><br>1.**நட்பைப் போற்றுபவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.**<br><br>நோக்கம்: நட்பு என்பது உள்ளத்தில் ஆழப் பதியும் ஆணிவேராய் ஆயுள் உள்ளவரைப் போற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடைப்படையில் நாவலாசிரியர் இக்கதைப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்.<br><br>▪ தன் திருமண விருந்தில் குழந்தைவேலைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைக்கும் பொழுது அவனைப்பற்றிப் பெருமையாகப் பேசுகிறான்.<br>▪ திருமண விருந்திற்குப் பிறகு குழந்தைவேலிடம் பேசும் பொழுது தங்கள் நட்பு இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இருக்க வேண்டுமெனக் கூறுகிறான்.<br>▪ தான் நடத்தும் உணவகத்தைப் பற்றிய இரகசியங்களைக் குழந்தைவேலிடம் நம்பிக்கையுடன் கூறுகிறான்.<br>-<br><br>2.**உடன்பிறப்புகளின் மேல் பாசம் உள்ளவன்**<br><br>நோக்கம்: உடன்பிறப்புகளிடையே நெருக்கமான பிணைப்பு ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடைப்படையில் நாவலாசிரியர் இக்கதைப் பாத்திரத்தைப் படைத்துள்ளார்.<br><br>▪ தன் தங்கை சுடர்விழியைச் சித்தி, வேலைக்காரப்பெண் என வீட்டுக்கு வந்த பெண்களிடம் கூறியதைக் கேட்டுக் கோபம் கொள்கிறான்.<br>▪ சென்னைக்கு ஓடிச் சென்ற பிறகு, குழந்தைவேலுக்கு எழுதிய கடிதத்தில் தங்கை சுடர்விழியைப் பற்றிக் கவலை கொள்கிறான்.<br>▪ மகப்பேற்றுக்குத் தன் வீட்டிற்கு வந்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்கிறான்; குழந்தைக்குப் பொன் அரைஞாணும் பொன் காப்பும் செய்து அணிவிக்கிறான்.<br>▪ மனோன்மணியின் திருமணத்தைத் தானே நடத்தப் போவதாகவும் அவளது திருமணத்திற்குப் பிறகுதான் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் குழந்தைவேலிடம் கூறுகிறான்.<br><br>3.**விழிப்புடன் செயல்பட நினைப்பவன்**<br><br>நோக்கம் : இளைஞர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தவே நாவலாசிரியர் இக்கதைப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்<br><br>▪ சொத்துத் தொடர்பாகச் சித்தியின் மீது வழக்குத் தொடர வேண்டாமென முருகய்யாவின் வேண்டுகோளைக் குழந்தைவேல் தானப்பனிடம் கூறிய பொழுது அவன் அதற்கு ஒப்புக் கொண்டாலும் சித்திக்குப் பணம் கொடுக்கும் வழியை ஒப்புக்கொள்ளவில்லை.<br>▪ தன் வீட்டிற்கு மீண்டும் திரும்பி வந்த முன்னாள் மனைவி, சொத்தில் பங்கு கேட்ட பொழுது கொடுக்க மறுக்கிறான்.<br><br>4.**பேராசை மிகுந்தவன்**<br><br>நோக்கம்: மனிதனின் பேராசை குணம் அவனை வாழ்க்கையில் பெரும் இழப்புகளைச் சந்திக்க வைக்கிறது. அளவான ஆசையே நிம்மதியான வாழ்க்கையை அமைத்துத் தரும் என்பதை உணர்த்தும் நோக்கத்தின் அடைப்படையில் நாவலாசிரியர் இக்கதைப்பாத்திரத்தைப் படைத்துள்ளார். | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ▪ சாராயம் தயாரித்து அதிக விலைக்கு விற்றுப் பணம் சம்பாதிக்க ஆசைப்படுகிறான்; முதலாளியைப்போல அதிக அளவில் சம்பாதிக்க இயலவில்லையே என ஏங்குகிறான்.<br>▪ வருமானத்தைப் பெருக்க உணவுக்கடையில் மதுவகைகளைக் கள்ளத்தனமாக விற்பனை செய்கிறான்; குற்றவுணர்ச்சியால் வருந்துகிறான்.<br><br>**5.ஆடம்பரமாகவும் பகட்டாகவும் வாழ விரும்புபவன்**<br><br>நோக்கம்: இன்றைய இளைஞர்கள் ஆடம்பரமாகவும் பகட்டாகவும் வாழ விரும்புகிறார்கள். ஆடம்பர வாழ்க்கையை முழுமையாக அனுபவித்தவர்களைவிட அதனால் அழிந்து போனவர்கள் தான் அதிகம். இந்த அழிவு பாதையிலிருந்து இளையோரைக் காப்பாற்றி பொருளாதார சூழலுக்கு ஏற்ப எளிமையான வாழ்க்கைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்ற நோக்கத்தின் அடைப்படையில் நாவலாசிரியர் இக்கதைப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்.<br><br>▪ திருமணத்திற்குப் பின் பெரிய வாடகை வீட்டில் வாழ விரும்புகிறான்.<br>- தனது திருமண இசையரங்கின்போது விலையுயர்ந்த நீல நிற ட்வீட் துணியில் தைத்த கோட்டும் கால்சட்டையும் அணிந்து கொண்டு ஐரோப்பிய உடையில் தோற்றமளிக்கிறான்.<br><br>**6.வாசிப்புப் பழக்கம் உடையவன்**<br><br>நோக்கம்: இளைஞர்களிடையே வாசிப்புப் பழக்கத்தின் அவசியத்தை உணர்த்தும் நோக்கத்தின் அடைப்படையில் நாவலாசிரியர் இக்கதைப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்.<br>▪ மைத்துனர் முருகய்யா அனுப்பி வைத்த புத்தகங்களைக் கருத்தூன்றி வாசிக்கிறான்.<br>▪ நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஒரு பங்கு புத்தகங்கள் படிக்கச் செலவிடுகிறான்; குழந்தைவேலையும் புத்தகங்கள் படிக்க ஊக்குவிக்கிறான்.<br><br>**7.மதிப்பு மரியாதையை விரும்புபவன்**<br><br>நோக்கம்: இன்றைய உலகம் பணத்தை வைத்தே, ஒருவருக்கு மதிப்பையும் மரியாதையையும் கொடுக்கிறது. ஆனால், குணத்தினால் வரும் மதிப்பே நிலையானது என்பதை உணர்த்தவே நாவலாசிரியர் இக்கதைப்பாத்திரத்தைப் படைத்துள்ளார்.<br><br>▪ மாமனார் வீட்டாரும் மனைவியும் மதிப்பது மட்டுமல்லாது ஊராரும் வெளியூராரும் மதிக்க வேண்டுமானால் பெரிய வீடு வேண்டுமெனவும் உள்ளூர் அதிகாரிகளுக்கு ஆடம்பரமாக விருந்துகள் வைக்க வேண்டுமெனவும் கூறுகிறான்.<br>▪ இரயிலில் முதல் வகுப்பில் பயணம் செய்தால்தான் உலகத்தாரின் மதிப்புக் கிட்டும் எனக் குழந்தைவேலிடம் கூறுகிறான். | |
| | முடிவுரை – ஏற்புடையது | |
| 15 | முன்னுரை<br>▪ மு.வரதராசன்<br>▪ வாடமலர்<br>▪ நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம்/அடித்தளம்/ பிரதானம் | முன்னுரை<br>2 |
| | கருத்துகள்<br>1. நல்ல நட்பு போற்றத்தக்கது (குழந்தைவேல்)<br>2. மாற்றாந்தாய் கொடுமை கூடாது (தானப்பனின் சித்தி)<br>3. இரக்க குணம் (குழந்தைவேலின் பெற்றோர்)<br>4. சீரான குடும்ப வாழ்க்கையைச் (பூங்கொடி)<br>5. உயரிய பெண்மை (குழந்தைவேலின் தாய், சுடர்விழி)<br>6. இல்லற வாழ்க்கையில் புரிந்துணர்வு அவசியம் (சுடர்விழி)<br>7. அறநூல்கள் காட்டும் வாழ்வியல் கூறுகள் (தானப்பன்)<br>8. எளிமையான வாழ்க்கை (முருகய்யா, சுடர்விழி)<br>9. வாழ்க்கையில் கொள்கை வேண்டும் (முருகய்யா) | கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | 10. பெற்றோர் கடமை (குழந்தைவேல் பெற்றோர்)<br>11. முன்னேறும் வேட்கை (தானப்பன்)<br>12. அண்டை அயலார் உறவு (குழந்தைவேல், தானப்பன் குடும்பத்தினர்)<br>13. பிள்ளைகளின் கடமை (குழந்தைவேல்)<br>14. பிறர் நலன் வேண்டுதல் (குழந்தைவேல், முருகய்யா)<br>15. கட்டுப்பாடான ஆண் பெண் உறவு தேவை (கனகம்)<br>16. அரசியலில் நேர்மை (தானப்பன்)<br>17. தொண்டு மனப்பான்மை (முருகய்யா)<br>18. குடும்ப உறுப்பினர்களிடையே குறைவிலா பாசம் தேவை (தானப்பன், சுடர்விழி, மனோன்மணி)<br>19. களங்கமற்ற கணவன் மனைவி உறவு (தானப்பன் - கனகம்)<br>முடிவுரை – ஏற்புடையது | |
| | **பயிற்சி 2** | |
| **கேள்வி எண்** | **விடை** | **புள்ளி** |
| 1 | உயர்ந்தோர் வழி நிற்றல் | 2 |
| 2 | **திரிபு அணி:**<br>போனவழி – ஞானவழி<br>ஈனவழி – போனவழி<br>**எதுகை:**<br>ஊனவழிக் – ஞானவழி<br>ஈனவழிச் – போனவழி<br>(ஏற்புடைய பதில்கள்) | 4 |
| 3(i) | இழிவான பாதையைப் பின்பற்றி | 2 |
| (ii) | நல்லவர்கள் காட்டும் உயரிய வழியில் பின்பற்றி நடக்க வேண்டும் | 2 |
| 4 | சாகித்திய அகாடமி விருது | 2 |
| 5(i) | ▪ இளங்கோச்சோழன்<br>▪ செங்கோச்சோழன் | 2 |
| (ii) | ▪ இளங்கோச் சோழனின் பதவி ஆசையால் ஆட்சியைப் பிடிக்கச் சதித்திட்டம் தீட்டுதல். | 2 |
| 6 | (i)<br>▪ நகைச்சுவை மிக்கவர்<br>▪ துன்பத்திலும் இன்பம் காணுபவர் | 2 |
| | (ii) வருணனை | 2 |
| | (iii) புலவர் பிசிராந்தையார் வயதாகினாலும் இளமை துடிப்புடன் செயல்படுகின்றார். | 2 |
| | (iv)<br>▪ இயற்கைச் சீற்றம் ஏற்படுவதை ஆராய்ச்சி மணியோசை உறுதிப்படுத்துகிறது.<br>▪ வெளியே மணியை அடித்தவரையும் காற்றுத் தூக்கி எறிவதை அங்கே வந்த அரசன் காணுகின்றான்.அவர் பிசிராந்தையார் என அறிகிறான்.காற்று அரசனையும் மேற்படியாரையும் தூக்கி எறிகிறது.<br>▪ காற்று மழையும் தணிந்ததும் பாண்டிய மன்னன், மக்களின் நிலையை எண்ணி மனம் வருந்தியதோடு மட்டுமல்லாமல் அவர்களைச் சென்று காணச் செல்லும் போது இச்சூழல் நிகழ்கின்றது.<br>(ஏற்புடைய பதில்கள்) | 3 |
| 7 | திருவேங்கடம் | 2 |
| 8 (i) | ▪ சுடர்விழி<br>▪ மீனாட்சி அம்மாள்<br>▪ கனகம் | 2 |

| | | |
|---|---|---|
| | ▪ பூங்கொடி<br>(ஏற்புடைய ஏதேனும் இரண்டு விடை) | |
| 8(ii) | ▪ பேச்சுவழக்கு<br>▪ வருணனை<br>▪ வசைமொழி<br>(ஏற்புடைய பிற விடைகள்) | 2 |
| 9 | (i)<br>▪ அன்பானவர்<br>▪ அண்டை அயலாரோடு நெருக்கமாகப் பழகுபவர்.<br>▪ பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர்<br>(ஏற்புடைய பிற விடைகள்) | 2 |
| | (ii) உரையாடல் | 2 |
| | (iii) அக்கம் பக்கத்தில் வாழும் மக்கள் இக்குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சனைகளைப் பேசும்படி செய்துவிட்டார்கள். | 2 |
| | (iv)<br>▪ தானப்பனின் தந்தை திடீரென மரணம் அடைகிறார்; சுடர்விழிக்கும் அவளது கணவருக்கும் செய்தி அனுப்பப்படுகிறது;<br>▪ குழந்தைவேல் தானப்பனுக்குக் கடிதம் எழுதுகிறான்.<br>▪ தந்தையின் இறுதி அடக்கத்தில் தானப்பன் கலந்து கொள்கிறான்;<br>▪ தானப்பனின் வருகை சித்திக்கு அதிர்ச்சியைத் தருகிறது.<br>▪ தானப்பன் பூட்டியிருந்த தனது தந்தையின் நகைக்கடையை உடைத்து புதிய பூட்டுப் போடுகிறான்.<br>▪ இதைக் கேள்வியுற்ற சித்தியின் தந்தை அதைப்பற்றி நியாயம் கேட்கின்றார்.யாரும் உதவ முன்வரவில்லை.<br>▪ சித்தியும் அவளது பெற்றோரும் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வெளியேறி விட்ட சூழலில் இச்சம்பவம் ஏற்படுகின்றது. | 3 |
| 10 | **முன்னுரை:**<br>காலம் பறக்குதடா<br>கவிஞர் கரு.திருவரசு<br>பாடுபொருள் – சமுதாயம்<br>மையக்கரு – தமிழர் முன்னேற்றம்<br><br>**தெரிநிலை கருத்துகள்**<br>**கண்ணி 1**:<br>▪ காலம் விரைந்து நகர்கின்றது.<br>▪ காலச் சூழற்சியில் உலகில் பல மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமாய் உள்ளன.<br>▪ இக்கால ஓட்டத்தில் உலகில் பல புதுமைகள் நிகழ்கின்றன.<br>▪ மனித வாழ்க்கையில் செல்வங்கள் பெருகுகின்றன.<br>▪ தமிழர்கள் இக்கால மாற்றத்திற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.<br>**கண்ணி 2**:<br>▪ மேலோங்கி இருந்த தமிழர்களைப் பார்த்துத் தங்கள் வாழ்க்கையைச் சீர்செய்து கொண்டு மிகக் குறுகிய காலத்திலேயே எல்லாச் செல்வங்களையும் குவித்து இன்புற்று வாழ்கின்றனர்.<br>▪ ஆகாயம் மற்றும் கடல் வழியாகவும் பயணப்பட்டுத் தங்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி உள்ளனர்.<br>▪ தமிழர்கள் மட்டும் ஏன் அன்று இருந்த நிலையிலிருந்து தாழ்ந்து இருக்கின்றனர்.<br>**கண்ணி 3:**<br>▪ தமிழர்கள் இன்னும் பழம்பெருமையையே பேசிக் கொண்டிருக்கின்றனர். | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ▪ காலத்தின் அருமையை உணராததால் இன்னும் முன்னேற்றம் காணும் வழிமுறைகளை அறியாமல் வாழ்கின்றனர்.<br>▪ சமுதாயத்தில் தீமைகளை ஏற்படுத்தும் வேற்றுமைகளைக் கடைப்பிடிப்பதால் வாழ்க்கையில் முன்னேறாமல் இருக்கின்றனர்.<br>▪ இத்தகைய அறியாமையிலிருந்து மீள்வதற்கான வழியைக் காட்டுகின்றவர்களையும் வீணாகப் பகைத்து வாய்ப்பினைக் கெடுத்துக் கொள்கின்றார்கள்.<br><br>**கண்ணி** 4:<br>▪ ஒற்றுமையாகச் செயல்பட்டால் உயர்ந்த நிலையை அடைய முடியும் என்ற திட்டத்தை முன் வைத்தும் சில காலம் கடந்த பின்னும் எந்த ஒரு முயற்சியையும் செய்யாமல் இருக்கின்றனர். இதை உணர்ந்து தமிழ்ச்சமுதாயம் செயலில் இறங்க வேண்டும்.<br><br>**புதைநிலைக் கருத்துகள்**<br><br>▪ எல்லா சமூகத்தினரும் இருக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்தி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களாகிய நாமும் பொருளாதாரத்தை உயர்த்தி வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.<br>▪ தமிழர்கள் பொருளாதாரத்தில் சிறந்து விளங்க உயரிய பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டும்.<br>▪ பழம்பெருமைகளையுடைய தமிழினம் இன்று பிரிவினைகளால் சீரழிந்துகொண்டிருக்கிறது. இத்தகைய சிக்கலிலிருந்து தமிழினம் மீண்டும் வரவேண்டும்.<br>▪ தமிழர்கள் ஒன்றுபட்டால் வாழ்வில் உயரலாம்<br><br>**முடிவுரை** : ஏற்புடைய முடிவுரை | |
| 11 (i) | **உவமை அணி:** ஒத்ததை ஒப்பிடுதல்<br>▪ கண்களிலே ஒளி போல<br><br>**உருவக அணி:** உவமையைப் பொருளில் ஏற்றல்<br>▪ பிசாசுகள் – பெண்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகள்<br><br>**பின்வருநிலை அணி:** வந்தே சொல்லே மீண்டும் வருதல்<br>▪ கும்மியடி – கும்மியடி<br>▪ படைக்கவும் – படைக்கவும்<br>▪ நம்மைப் – நம்மை<br><br>**திரிபு அணி:** சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துக்களாக ஒன்றி வருவது.<br>▪ பட்டங்கள் – சட்டங்கள்<br>▪ வேதம் – சாதம்<br><br>தன்மை நவிற்சி அணி: இயல்பான வருணனை<br>▪ பெண்களை விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள் பேசிக் களிப்போடு நாம்பாட | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |
| 11 (ii) | **படிப்பினை**<br>▪ பெண்களுக்குக் கல்வி அவசியம்.<br>▪ பெண்கள் தங்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்கக் கூடாது.<br>▪ பெண்ணடிமை கண்டிக்கத்தக்கது.<br>▪ ஆண்களுக்குச் சிறுவயதிலிருந்தே பெண்களைப் போற்றும் நெறிகளைக் கற்றுத் தருதல் அவசியம். | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | ▪ பெண்கள் ஆண்களுக்கு நிகராகச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும்.<br><br>(ஏற்புடைய பதில்கள்) | |
| 12 | **முன்னுரை:**<br><br>பிசிராந்தையார் நாடகம் பாவேந்தர் பாரதிதாசன் கற்பனையில் உருவானதாகும். அறமும் உயர்நட்பும் என்பது இதன் கருப்பொருளாகும். இதனில் பிசிராந்தையார் முதன்மைக் கதைப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளார்.<br><br>**1. உண்மை நட்பின் தன்மையை உணர்த்தும் வகையில் படைக்கப்பட்டுள்ளது.**<br><br>▪ பாண்டிய நாட்டு அரசனைப் புலவரான பிசிராந்தையார் தான் நேராகக் கண்டிராத வேற்று நாட்டு அரசனான கோப்பேருஞ்சோழனின் ஆட்சிச் சிறப்பையும் பண்பு நலன்களையும் அறிவுத்திறனையும் அரசாட்சியின் மாண்பையும் கேள்வியுற்று அவன்மீது ஆழ்ந்த அன்பும் நட்பும் கொண்டவராக இந்நாடகத்தில் படைக்கப்பட்டுள்ளார்.<br><br>▪ கோப்பேருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறக்க முடிவெடுத்தபோது அவன் நம்பியபடியே பிசிராந்தையாரும் அவனுடன் சேர்ந்து வடக்கிருந்து உயிர்துறக்கின்றனர். நட்பு கொள்வதற்கு எவ்விதத் தொடர்பும் பழக்கமும் தேவையில்லை என்பதையும் ஒத்த உணர்வே போதுமானது என்பதையும் தெளிவுப்படுத்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**2. தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களிடம் வரையறைக்குட்பட்டுப் பழகுதலைக் காட்டுவதற்காகப் படைக்கப்பட்டுள்ளது.**<br><br>▪ பாண்டியன் அறிவுடை நம்பியின் நல்லாட்சியில் பிசிராந்தையார், அரசனுக்கு ஈடான செல்வாக்கு உடையவராகவும் அரசனின் நன்மதிப்பைப் பெற்றவராகவும் பவனிவருகிறார். இருப்பினும்,தாம் அரசனுக்கு நெருக்கமானவர் என்ற எண்ணம் கொண்டு அரசனின் முடிவெடுக்கும் உரிமையில் தலையிடாதவராகத் திகழ்கிறார். அதேபோன்று, தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களிடம் மிக நீங்காமலும் மிக அணுகாமலும் நெருப்பில் குளிர் காய்கின்றவர்களைப்போல் இருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தவே இக்கதைபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>3. **புலவராகப்பட்டவர் மன்னன் மீதும் மக்கள் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது.**<br><br>▪ பாண்டிய மன்னன் அறிவுடை நம்பியின் அரசவைப் புலவரான பிசிராந்தையார், மன்னன் மீதும் மக்கள்மீதும் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவராகப் படைக்கப்பட்டுள்ளார். பாண்டியன் நீதி வழுவாது ஆட்சி செய்ய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் அருகிலிருந்து ஓர் அமைச்சரைப் போலவும் நல்லாசானைப் போலவும் ஆலோசனை கூறுவது அவரது இயல்பாக இருக்கின்றது. பச்சைக்கிளி கொலை வழக்கில் மதிநுட்பம் வாய்ந்தவரான பிசிராந்தையாரே பல அணுகுமுறைகளைக் கையாண்டு குற்றவாளிகள் குற்றத்தை உணரும்படியும் மனம் திருந்தும்படியும் செய்கிறார். அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நல்ல அரசவைப் புலவர் என்பவர் மன்னன் மீதும் மக்கள் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தவே இக்கதைபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | 4. **அரசவைப் புலவரிடம் இருக்க வேண்டிய தனித்தன்மைகளை விளக்கப் படைக்கப்பட்டுள்ளார்.**<br>▪ பிசிராந்தையார் அறநெறி தவறாதவராகவும் கற்றறிந்திருந்தாலும் அடக்கமுடையவராகவும் படைக்கப்பட்டுள்ளார்.நீதியையும் நன்மையையும் விரும்பும் தன்மையாளராக இருக்கின்றார். தான் வாழ்ந்த பாண்டிய நாட்டின் நலனைப் பற்றி மட்டும் எண்ணாமல் சோழ நாட்டின் நலனிலும் அக்கறை கொண்டவராகத் திகழ்கிறார்.<br>▪ அதோடு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நிகழப்போவதை முன்னரே எண்ணி அறியக் கூடிய வல்லவராகவும் குறிப்பறியும் ஆற்றலைப் பெற்றவராகவும் இருக்கின்றார். அரசவையில் சான்றோராய்ப் போற்றப்படும் புலவர்களிடம் காணப்படும் பண்புகளை விளக்கவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br>5. **அரசவைப் புலவர் அறவழியில் நிற்பவராய் இருக்க வேண்டும் என்பதை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது.**<br>○ பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிசிராந்தையார், பாண்டியனால் மிகவும் விரும்பப்பட்ட அறவோராய்த் திகழ்கிறார். அதனால், பாண்டியன் அவர்மீது மிகுந்த மரியாதை கொண்டிருக்கிறான். அவரது வாக்கின் வாய்மையைப் போற்றுகிறான். பின்னொரு சமயம், கோப்பேருஞ்சோழன்மீது பாண்டியன் சந்தேகங்கொண்டு படையெடுக்க முற்படும்போது பிசிராந்தையார், கோப்பேருஞ்சோழனைப் புகழ்து பாடும் ஒரு பாடலைக் கேட்டுத் தன் முடிவை உடனேயே மாற்றிக்கொள்கிறான். அதன்வழி, தவறான செயல்புரிவதிலிருந்தும் தன்னைக் காத்துக்கொள்கிறான். அரசவைப் புலவர் அறவழியில் நிற்பவராய் இருந்தால் அரசன் நீதி வழுவாமல் ஆட்சி செய்ய இயலும் என்பதை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br>6. **ஈகைத் திறனைப் புலப்படுத்தப் படைக்கப்பட்டுள்ளது.**<br>▪ எல்லாரும் நல்லவர்களாகவும் செல்வந்தர்களாகவும் இருக்கும் பாண்டிய நாட்டில் பிசிராந்தையார், பிறருக்குக் கொடுப்பதனால் வரும் இன்பத்தை நுகர முடியாமல் வருந்துகின்றார். அதனால், வறியவர் தோன்ற மாட்டாரா என்ற ஏக்கமும் கொள்கிறார். அதனால், மேற்படியார் தாம் வறுமையில் வாடுவதாகப் பொய்யுரைத்ததை உண்மை என நம்பித் தன் பதக்கத் தொங்கலை அவரிடம் கொடுக்கிறார். பிசிராந்தையாரின் ஈகைத் திறனை வெளிப்படுத்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. | 2 |
| 13 | **முன்னுரை:**<br>கவிஞர் பாரதிதாசன்<br>பிசிராந்தையார்<br>கருப்பொருள்: அறமும் உயர் நட்பும்.<br>1. **உன்னதமான நட்பைப் போற்ற வேண்டும்.**<br>▪ பாண்டிய நாட்டு அரசவைப் புலவரான பிசிராந்தையார், தான் நேராகக் கண்டிராத வேற்று நாட்டு அரசனான கோப்பெருஞ்சோழனின் ஆட்சிச் சிறப்பையும் பண்பு நலன்களையும் , அறிவுத்திறனையும் அரசாட்சியின் மாண்பையும் கேள்வியுற்று அவன்மீது ஆழ்ந்த அன்பும் காட்ட வேண்டும் என்று வழியுறுத்தப்படுகிறது. கோப்பெருஞ்சோழ வடகிருந்து உயிர்துறக்க முடிவெடுத்தபோது அவன் நம்பிபடியே பிசிராந்தையாரும் அவனுடம் சேர்ந்து வடக்கிருந்து உயிர்துறக்கின்றனர். நட்பு கொள்வதற்கு எவ்வித் தொடர்பும் பழக்கமும் தேவையில்லை என்பதையும் ஒத்த உணர்வே போதுமானது என்பதை தெரிந்துக் கொள்ள வேண்டும்.<br>2. **அரசுக்கு மக்கள் நலனில் அக்கறை வேண்டும்.** | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ▪ ஆராய்ச்சிமணியின் ஒலிகேட்டவுடன் கடுங்காற்று மழைக்கு அஞ்சாமல்,அரசி தடுத்தும் நிற்காமல் மக்களுக்கு உதவ அரண்மனையைவிட்டு வெளியே வருகிறான் பாண்டிய நாட்டு அரசன் அறிவுடை நம்பி. அதுமட்டுமல்லாமல், மீன் கிடைக்காமல் ஏமாந்த உடைப்பனுக்கு ஓடைப்பூவுக்கும் வேண்டிய அளவு பொருள் தந்து உதவ அரண்மனைக்கு அழைக்கிறான். ஒரு நல்ல அரசன், தன் மக்கள் நலனில் அக்கறை கொள்ள, வேண்டும்.<br><br>**3. பதவியாசை துன்பத்தை விளைவிக்கும் என்பதை உணர வேண்டும்.**<br><br>▪ தன் தந்தை கோப்பெருஞ்சோழன் ஆட்சியில் இருக்கும்போதே அரியணை ஏற பேராசை கொள்கிறான் இளங்கோச் சோழன். அவனது அந்தப் பேராசை, தந்தைக்கு எதிராக அவனைப் பல சூழ்ச்சிகளைச் செய்யத் தூண்டுகிறது. கோப்பெருஞ்சோழனைப் பற்றிப் பொய்யான கதைகளைப் புனைந்துரைக்கிறான். அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான படைத்தலைவனையும் படைகளையும் அரசனுக்கே எதிரியாக்குகிறான். பேராசை அறமற்ற செயல்களைச் செய்யத் தூண்டும் என்பதை தெரிய வேண்டும்.<br><br>**4. எச்சூழலிலும் அறவழியில் நடப்பதே சிறப்பைத் தரும்.**<br><br>▪ பாண்டிய நாட்டைச் சேர்ந்த பிசிராந்தையார், பாண்டியனால் மிகவும் விரும்பப்பட்ட அறவோராய்த் திகழ்கிறார். அதனால், பாண்டியன் அவர்மீது மிகுந்த மரியாதை கொண்டிருக்கிறான். அவரது வாக்கின் வாய்மையைப் போற்றுகிறான். பின்னொரு சமயம், கோப்பெருஞ்சோழன்மீது பாண்டியன் சந்தேகங்கொண்டு படையெடுக்க முற்படும்போது பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனைப் புகழ்ந்து பாடும் ஒரு பாடலைக் கேட்டுத் தன் முடிவை உடனேயே மாற்றிக்கொள்கிறான். அதன்வழி தவறான செயல் புரிவதிலிருந்தும் தன்னைக் காத்துக்கொள்கிறான். அரசவைப்புலவர் அறவழியில் நிறபவராய் இருந்தால், அரசன் நீதி வழுவாமல் ஆட்சி செயய வேண்டும்.<br><br>**5. தீர ஆராய்ந்து செயல்படுவது சிறப்பு.**<br><br>▪ தான் ஆசைப்படும் பச்சைக்கிளி, தன்னை விரும்புகிறாளா இல்லையா என்பதைச் சிறிதும் ஆராய்ந்து அறியாமல் அவளை மணக்கத் துடிக்கிறான் தூயன். அது பற்றி அவனுடைய தாய் விபரமாக எடுத்துச் சொல்லியும் காதில் வாங்கிக்கொள்ளாத அவனது செயல் இறுதியில் அவனுக்கு இழிவையே ஏற்படுத்தியது. ஒருவர் ஆராயாமல் மேற்கொள்ளும் காரியம் அவருக்கு இழிவை தரும் என்பதை உணர வேண்டும்.<br>முடிவுரை – ஏற்புடையது | |
| 14 (i) | **சமுதாயப் பின்னணி**<br>**1. பொருளியல் அடிப்படை**<br>▪ மேல்மட்ட வர்க்கம் (பூங்கொடியின் குடும்பம், கனகம் )<br>▪ நடுத்தர வர்க்கம் (குழந்தைவேல் குடும்பம், தானப்பன் குடும்பம் – நகைக்கடை)<br>▪ கீழ்த்தட்டு வர்க்கம் (கிராமத்து மக்கள், தானப்பன் வீட்டுச்சமையலாள், வேலைக்காரர்கள், தோட்டக்காரர்)<br><br>**2. சமூகவியல் அடிப்படை**<br>▪ நட்பைப் போற்றும் சமுதாயம் (குழந்தைவேல், தானப்பன்)<br>▪ மாணவர் சமுதாயம் (கல்லூரி)<br>▪ எளிய வாழ்க்கை வாழும் சமுதாயம் (முருகய்யா, சுடர்விழி) | 5<br><br>5 |

| | | |
|---|---|---|
| | ▪ ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் சமுதாயம் (தானப்பன், கனகம், பூங்கொடி)<br>▪ இரக்க மனப்பான்மை கொண்ட சமுதாயம் (குழந்தைவேலின் தாய்தந்தையர்)<br>▪ அரசியலில் ஆர்வம் கொண்ட / இலாபம் தேடும் சமுதாயம் (தானப்பன், கட்சித் தொண்டர்கள்) | |
| 14( ii) | **சுடர்விழி**<br><br>**1. சூழலை அனுசரித்து வாழத் தெரிந்தவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவர் என்பதை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது.**<br>▪ சிறுமியாக இருந்தபோது தன் கொடுமைக்கார சித்தியின் குணம் அறிந்து பணிவாகவும் பொறுமையாகவும் நடந்துக்கொள்கிறாள்; அவருக்குப் பிடிக்காதவற்றைச் செய்யாமல் விடுகிறாள்.<br>▪ திருமணத்திற்குப்பின் அன்பான கணவனின் மனம் அறிந்து நடந்து கொள்கிறாள். அவருக்குப் பிடிக்காதவற்றைத் தானும் விரும்பாமல் வெறுக்கிறாள்.<br>**2. நல்ல மனைவியின் பண்புகளை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது.**<br>▪ வாழ்க்கைத் தேவைகளைக் குறைத்துக்கொண்டு பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் இன்பமாக வாழ்கிறாள்.<br>▪ ஒரு நல்ல மனைவியிடம் இருக்க வேண்டிய பண்புகளை இவளிடம் உண்டு.<br><br>**3. பெரியோரை மதிப்பவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்**<br>▪ சித்தி கடுமையாக நடந்து கொண்டாலும் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டுமெனக் குழந்தைவேலின் தாய் கூறியதைக் கேட்டுக் கொள்கிறாள்.<br>▪ குழந்தைவேலின் தாய் கொடுக்கும் பூவைச் சூடிக்கொண்டால் சித்திக்குக் கோபம் வரும் என்பதால் அதை நல்ல முறையில் மறுக்கிறாள்.<br><br>4. **கணவரின் கொள்கைகளைப் போற்றுபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.**<br>▪ பூக்களைப் பறிக்கக் கூடாது என்ற தன் கணவரின் கொள்கைக்கு ஏற்ப குழந்தைவேலின் தாய் பூச்சூடுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள்.<br>▪ கணவரின் விருப்பமே தன்னுடைய விருப்பம் எனக் குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறாள்.<br>5. **எளிய வாழ்க்கையை விரும்புவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.**<br>▪ சுடர்விழி தான் எளிமையாக வாழ விரும்புவதாகக் கூறியதைப் பூங்கொடி குழந்தைவேலிடம் கூறுகிறாள்.<br>▪ பட்டுச்சேலை அணியாமல் தானப்பனின் திருமணத்தில் கலந்து கொள்கிறாள்.<br><br>**6. அனைவருடனும் அன்பாகப் பழகுபவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.**<br>▪ குழந்தைவேலின் வீட்டிற்கு வந்த சுடர்விழி பூங்கொடியுடன் அறிமுகப்படுத்திக் கொண்டு பழகுகிறாள்.<br>▪ தன்னிடமும் தன் தாயிடமும் கலகலப்பாகப் பேசிப் பழகும் சுடர்விழியைக் கண்டு குழந்தைவேல் வியக்கிறான். | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி = 1 |
| 15(i) | **கதைப்பின்னல்**<br><br>**தொடக்கம்** | கருத்து<br>3X3 = 9 |

| | | |
|---|---|---|
| | ▪ குழந்தைவேல், தானப்பன் இளமைக்கால நட்பு<br>▪ தானப்பன், சுடர்விழி சித்தியின் கொடுமைக்கு ஆளாகுதல்; குழந்தைவேல் குடும்பத்தினர் ஆதரவாக இருத்தல்<br><br>**வளர்ச்சி**<br>▪ சித்தியின் கொடுமை தாளாது தானப்பன் சென்னைக்கு ஓடிவிடுதல்; குழந்தைவேல் வருந்துதல்.<br>▪ நீண்ட இடைவெளிக்குப் பிறகு குழந்தைவேல் தானப்பனிடமிருந்து கடிதம் பெறுதல்; தானப்பன் சென்னையில் இருப்பதை அறிதல்.<br>▪ குழந்தைவேல் சென்னைக் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடருதல்<br>▪ குழந்தைவேல் பல உணவுக்கடைகளில் தானப்பனைத் தேடுதல்; சந்தித்தல்<br>▪ படிப்பை முடித்த குழந்தைவேலுக்குத் திருமணம் நடைபெறுதல்<br>▪ தந்தையின் மரணத்தை அறிந்து தானப்பன் ஊருக்குத் திரும்புதல்; குழந்தைவேல் தானப்பனுடன் நெருங்கிய நட்பைத் தொடருதல்<br><br>**சிக்கல்**<br>▪ மனைவியின் விருப்பத்திற்கேற்ப குழந்தைவேல் தனிக்குடித்தனம் செல்லுதல்<br>▪ தனப்பனுக்கும் மனைவி கனகத்திற்குமிடையே மனக்கசப்பு ஏற்படுதல்; மணவிலக்குப் பெற்று இருவரும் பிரிதல்<br><br>**உச்சம்**<br>▪ பூங்கொடி மனந்திருந்தி குழந்தைவேலுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்தல்<br>▪ கனகம் மீண்டும் தானப்பன் வீட்டில் வந்து தங்குதல்; திடீரென்று ஒரு நாள் இருவரும் மரணமடைதல்<br><br>**சிக்கல் அவிழ்ப்பு**<br>▪ போலீசார் மரண விசாரணை நடத்துதல்; குழந்தைவேல் ஒத்துழைப்பு வழங்குதல்; கனகத்தின் கடிதங்களின் மூலம் உண்மை வெளிப்படுதல்.<br>**முடிவு**<br>▪ குழந்தைவேல் முருகய்யாவுடன் இணைந்து இறுதிக் காரியங்கள் செய்தல்<br>▪ முருகய்யா தானப்பனின் விருப்பங்களை நிறைவேற்றுதல்<br>▪ 'வாடா மலர்' பள்ளிக்கூட்டத்தின் முதல் நிகழ்ச்சியாக மனோன்மணியின் திருமணம் நடைபெறுதல்; குழந்தைவேல் குடும்பத்தினருடன் கலந்து கொள்ளுதல் | மொழி = 1 |
| 15(ii) | **முருகையா**<br><br>1) **எளிமையான வாழ்க்கையை விரும்புவராகப் படைக்கப்பட்டுள்ளார்.**<br><br>▪ எளிமை என்றால் உடையிலே மட்டும் அல்லாமல் பதவி முதலிய எதற்கும் ஆசைப்படாமல், தன்னலத்தைக் குறைத்துக் கொண்டு வாழ்ந்தால் பிறர் நம்மை நம்புவர் எனக் குழந்தைவேலுவிடம் கூறுகிறார்.<br><br>2) **பெண்ணுரிமைக்கு முக்கியத்துவம் கொடுப்பவராகப் படைக்கப்பட்டுள்ளார்.**<br><br>▪ குழந்தைவேலின் வீட்டிற்கு வந்த சுடர்விழி, முன்புபோல் இல்லாமல் அனைவரிடமும் கலகலவெனப் பேசிச் சிரிப்பது, முருகய்யாவின் நல்ல துணையும் அவர் தந்த உரிமையுமே காரணம் என்பதைக் குழந்தைவேல் அறிகிறான்<br><br>3) **குடும்பப்பற்று மிக்கவராகப் படைக்கப்பட்டுள்ளார்.** | கருத்து 3X3 = 9<br><br>மொழி = 1 |

| | | |
|---|---|---|
| | ▪ சொத்து வழக்கு வேண்டாமெனவும் அது குடும்பச் சீரழிவுக்கு வித்திடுமெனவும் குழந்தைவேலின் மூலம் தானப்பனிடம் கூறச் செய்கிறார்.<br>4) **பொதுநலச்சிந்தனை கொண்டவராகப் படைக்கப்பட்டுள்ளார்.**<br>▪ இயந்திரங்களின் பெருக்கத்தால் மக்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் போகும் நிலை ஏற்படலாம் என்பதால் அதற்கான திட்டங்களை அரசாங்கம் செயல்படுத்த வேண்டுமெனக் குழந்தைவேலிடம் கருத்துரைக்கிறார்.<br>5) **கொள்கையில் உறுதி கொண்டவராகப் படைக்கப்பட்டுள்ளார்.**<br>▪ எளிய உடை உடுத்துவதால் ஆரம்ப காலத்தில் தம் ஊரில் உள்ள பலரும் தன்னைப் பைத்தியக்காரன் என எள்ளி நகையாடியதையும் பின்னர் தாம் ஒரே நிலையாய் எளிய ஆடை உடுத்திக் கொண்டிருந்ததைக் கண்டு அவர்கள் தம்மை நம்பி அறிவுரை கேட்பதாகவும் குழந்தைவேலிடம் கூறுகிறார். | |

**பயிற்சி** 3

| கேள்வி எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 1 | தமிழர் முன்னேற்றம் | 2 |
| 2 | **எதுகை:**<br>▪ ஒன்றிச் - ஒன்றி<br>▪ என்றும் - என்றிங்<br>▪ ஒன்றி - சின்னாள்<br>▪ இருந்ததுபோல் – இருப்பாய்<br>**மோனை:**<br>▪ ஒன்றிச் - உச்சிக்<br>▪ என்றும் - ஏதும்<br>▪ என்றிங் - எண்ணிச்<br>▪ இருந்ததுபோல் – இருப்பாய் ( சீர் மோனை)<br>**இயைபு:**<br>▪ குயர்வதடா<br>▪ செயல்தொடடா | 4 |
| 3 | (i) சில நாள் | 2 |
| | (ii) தமிழர்கள் திட்டமிட்ட செயல்களைக் குறிப்பிட்ட நேரத்தில் செயல்படுத்த வேண்டும்<br>*பிற ஏற்புடைய பதில்கள்* | 2 |
| 4 | கனக சுப்புரத்தினம் | 2 |
| 5 | (i)<br>▪ பாண்டிய நாட்டு அரசி<br>▪ சோழ மன்னி<br>▪ அனிச்சை<br>▪ பச்சைக்கிளி<br>▪ முத்துநகை<br>▪ ஓடைப்பூ<br>▪ பரூஉத்தலையார் மனைவி<br>▪ மணியிடை | 2 |
| | (iii)<br>▪ பிசிர்<br>▪ பாண்டிய நாடு<br>▪ பாண்டிய அரண்மனை<br>▪ தோப்பு<br>▪ சோழ நாடு | 2 |

| | | |
|---|---|---|
| | ▪ தூயன் வீடு<br>▪ மீன் பிடிக்கும் ஏரி | |
| 6 | (v)<br>▪ அறத்தைப் பின்பற்றுபவர்<br>▪ நேர்மையாக ஆட்சி செய்பவர்<br>▪ உண்மையை ஆராய்ந்து தெளிவுபடுத்துபவர் | 2 |
| | (vi)<br>▪ ஆள்வோர் சமுதாயம்<br>▪ ஆளப்படுவோர் சமுதாயம் | 2 |
| | (vii) குற்றவாளிகளைக் கண்டறிந்தால், நாட்டில் ஏற்படும் தீயச் செயல்களை அடியோடு ஒழிக்க முடியும். | 2 |
| | (viii)<br>▪ பச்சைக்கிளியின் கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க முடியாததால், அமைச்சருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்ற ஆணையிடுகிறார் அரசர்.<br>▪ அப்பொழுது சபையிலிருந்து தூயன் தானே குற்றவாளி என ஒப்புக் கொண்டு முன்வருகிறான்.<br>▪ ஆனால் அவனோ கொலை செய்ததற்கான காரணத்தைக் கூற மறுக்கிறான்.<br>▪ அதனால் அக்காரணத்தை அறிய அரசர் மேலும் பல கேள்விகளைக் கேட்கும் சூழலில் இது நேர்கின்றது.<br>(ஏற்புடைய பதில்கள்) | 3 |
| 7 | மு.வ. | 2 |
| 8 | (i) வள்ளியம்மா | 2 |
| | (ii)<br>▪ காலை நேரம் / மாலை நேரம் / இரவு நேரம் /ஆடி மாதம் / ஆனி மாதம் /வெயில் காலம் | 2 |
| 9 | (i)<br>▪ நேர்மையானவர்<br>▪ மகனின் போக்கின்மீது நம்பிக்கை இல்லாதவர்<br>▪ மகள் மீது அக்கறை கொண்டவர்<br>▪ கடனை விரும்பாதவர்<br>*பிற ஏற்புடைய விடைகள்* | 2 |
| | (ii)<br>▪ கடலூர்<br>▪ பூங்கொடி தந்தையின் வீடு | 2 |
| | (ii)<br>▪ இரண்டாம் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்<br>▪ பூங்கொடியின் அப்பாவிடம் பணம் இல்லாத நிலை<br>*ஏற்ற ஏதேனும் ஒரு விடை* | 2 |
| | (iv)<br>▪ பூங்கொடியின் தந்தை சினிமா படம் எடுத்துப் பெரும் பணத்தை இழந்ததால் அக்குடும்பம் நலிந்துவிட்ட விசயத்தைக் கூறியதுடன் பூங்கொடியிடம் அவளது குடும்பத்தைப் பற்றி ஒன்றும் கேட்க வேண்டாமென்றும் குழந்தைவேலின் தந்தை அறிவுறுத்துகிறார்.<br>▪ பூங்கொடியுடன் குழந்தைவேல் தன் மாமனார் வீட்டிற்குச் செல்கின்றான் .<br>▪ அங்குக் குழந்தைவேலுவிடம் பூங்கொடியின் அண்ணன் பெற்ற கடன் குறித்து மாமனார் விளக்கும்பொழுது இச்சூழல் ஏற்பட்டது . | 3 |

| | | |
|---|---|---|
| 10 | முன்னுரை<br>▪ கலை அழகு<br>▪ கவிஞர் வாணிதாசன<br>▪ பாடுபொருள்:இயற்கை / மையக்கரு:காலைப்பொழுதின் அழகு<br><br>கருத்து<br>கண்ணி 1<br>- காலை பொழுது விடியும் வேளையில் சூரியன் ஒளியினால் வானம் அழகாக காட்சியளிக்கிறது. பறவைகளின் ஒலி காலை அழகை மெருகூட்டுகிறது.<br><br>கண்ணி 2<br>- அதிகாலையின் அழகு கண்களுக்கு விருந்தாகவும் சோலையில் ஏற்படும் ஆரவாரங்கள் மனதிற்கு இன்பமாகவும் அமைகிறது .<br><br>கண்ணி 3<br>- விருப்பு வெறுப்புகளைத் தவிர்த்தால் வாழும் வாழ்க்கை இன்பமாக அமையும்.<br><br>கண்ணி 4<br>- உள்ளே மறைந்திருக்கும் தாமரை மொட்டின் அழகு, சூரிய ஒளிபட்டு மலரும்போது அதன் அழகும் வெளிபட்டு மனத்திற்கும் இன்பத்தை அளிக்கிறது.<br><br>கண்ணி 5<br>- காலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்யும் பெண்களின் முக அழகைக் கண்டு வானத்தில் இருக்கும் நிலவுகூட வெட்கத்தால் மறைகிறது.<br><br>முடிவுரை<br>▪ ஏற்புடையது | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |
| 11 (i) | எதுகை:<br>- சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது<br><br>▪ ச**ஞ்**சி – வ**ஞ்**சி<br>▪ ச**ஞ்**சிக் – க**ஞ்**சிக்<br>▪ கா**லை** – பா**லை**<br>▪ தே**டி**ய – வா**டி**ய<br><br>மோனை:<br>- சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றி வருவது மோனை<br>▪ **ச**ஞ்சிக் – **த**லைமுறையாகச்<br>▪ **வ**ஞ்சித் – **வா**ழ்ந்தாருக்கே – வாணா<br>▪ **ச**ஞ்சிக் – **ச**ம்பாதித்ததுவும் – கட்டுடலைத்தான்<br>▪ **க**ஞ்சி – **க**டைவாசலிலே<br>▪ **கா**லை – **கை**யில்<br>▪ **பா**லை – **ப**லனை – **ப**ங்கை<br>▪ **தே**டிய – **தி**டமாய்க்<br>▪ **வா**டிய – **ம**ற்றவர் – **ம**ழுங்க<br><br>சந்தம்:<br>- சீர்களின் எல்லா எழுத்துகளும் ஓசையால் ஒன்று வருவது<br>▪ மாரடித்தாய் – போரடித்தாய்<br>▪ சஞ்சி – வஞ்சி | கருத்து<br><br>3x3=9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | ▪ சஞ்சி – கஞ்சி<br>▪ நிற்கின்றாய் – விற்கின்றாய்<br>▪ காலை – பாலை<br>▪ கண்டாயா – கொண்டாயா<br>▪ தேடிய – ஓடிய<br>▪ தேடிய – வாடிய<br>▪ நின்றிருப்பாய் - இன்றிருப்பாய்<br><br>இயைபு:<br>-சீர்களின் இறுதி அசை ஒன்றி வருவது இயைபு ஆகும். அடிகளின் இறுதி எழுத்து அல்லது இறுதிச் சொல் ஒன்றி வருவது.<br>▪ மாரடித்தாய் – போரடித்தாய்<br>▪ கண்டாயா – கொண்டாயா<br>▪ நிற்கின்றாய் – விற்கின்றாய்<br>▪ நின்றிருப்பாய் – இன்றிருப்பாய்<br>▪ அன்று – நின்று<br><br>முரண் தொடை<br>- சீர்கள் சொல்லாலும் பொருளாலும் முரண்பட்டு வருவது.<br>▪ வஞ்சி – வாழ்த்தி | |
| (ii) | ❖ இந்திய சமூகத்திடம் சேமிப்புப் பழக்கம் கட்டாயம் இருக்க வேண்டும்.<br>❖ இந்தியர்கள் தங்களின் அறியாமையைப் போக்கிக் கொண்டு வாழ்தல் அவசியம்.<br>❖ இந்தியர்கள் தங்களின் உழைப்புக்கேற்ற பலனைப் பெறுவதில் முனைப்புக் காட்டுதல் அவசியம்.<br>❖ இந்தியர்களுக்குச் சிந்தனை மாற்றம் இருந்தால் மட்டுமே முன்னேற முடியும்.<br><br>[ஏற்புடைய ஏதேனும் மூன்று கருத்து] | கருத்து<br><br>3x3=9<br><br>மொழி<br>1 |
| 12 | **முன்னுரை**<br>▪ பிசிராந்தையார்<br>▪ பாவேந்தர்<br>▪ அறமும் உயர்நட்பும்<br>**தொடக்கம்**<br>▪ பிசிராந்தையார், சோழமன்னன் நட்பின் மேன்மை கருதி தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் எனப் பெயரிட்டு அழைத்ததுக் குறித்துப் புதுப்புலவரும் புலவர் 'க'வும் சிறப்பித்துப் பேசுதல்.<br>**வளர்ச்சி**<br>▪ அறிவுடைநம்பி காற்று மழையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் காக்கச் செல்லுதல். பச்சைக்கிளியின் மரணம் குறித்த விசாரணை நடத்துதல்.<br>**சிக்கல்**<br>▪ இளங்கோச் சோழனின் பதவி ஆசை; ஆட்சியைப் பிடிக்கச் சதித்திட்டம் தீட்டுதல்.<br>**உச்சம்**<br>▪ கோப்பெருஞ்சோழனின் புதல்வர்கள் தந்தைக்கு எதிராகப் போருக்குத் தயாராகுதல்<br><br>**சிக்கல் அவிழ்ப்பு**<br>▪ ஆட்சியைக் கைப்பற்றும் சதித்திட்டங்கள் முறியடிக்கப்படுதல்.<br>▪ புல்லாற்றூர் எயிற்றியனாரின் அறவுரையால் சோழன் போரைக் கைவிடுதல்<br>**முடிவு**<br>▪ பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன் மற்றும் பொத்தியார் வடக்கிருந்து உயிர் துறத்தல். | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ▪ இளங்கோச் சோழனும் செங்கோச் சோழனும் தம் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டல்.<br>▪ உலகம் அவர்களுடைய நட்பைப் புகழ்ந்து பாடுதல்.<br>**முடிவுரை**<br>• ஏற்புடையது | |
| 13 | பிசிராந்தையார் பண்புநலன்<br>முன்னுரை<br>▪ பிசிராந்தையார்<br>▪ பாவேந்தர்<br>▪ அறமும் உயர்நட்பும்<br><br>கருத்து<br>➢ **நட்பைப் போற்றுபவர்**<br>▪ தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் என்று பெயரிட்டுள்ளார்.<br>▪ கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் இதுவரை ஒருவரையொருவர் கண்டதில்லை. ஆனால், உள்ளத்தால் நெருங்கியவர்கள் எனப் புலவர்கள் பேசிக்கொள்கின்றனர்.<br>▪ தன் தந்தைக்கு (சோழனுக்கு) எதிராகப் படையெடுக்கும் இளங்கோச் சோழனின்<br>செயலைக் கண்டு மனம் வருந்துகிறார்.<br>▪ சோழனோடு வடக்கில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கிறார்.<br>.<br>➢ **உதவும் மனப்பான்மை கொண்டவர்.**<br>▪ பிசிராந்தையார் தம் மார்பிலிருந்த கல்லிழைத்த பதக்கத் தொங்கலைக் கழற்றி<br>மேற்படியாரிடம் கொடுத்து மனைவி மக்களின் பசியைப் போக்குமாறு வேண்டினார்.<br>▪ புயல் காற்றைப் பற்றி மக்களை எச்சரிக்கிறார்.<br>▪ உடையப்பனுக்குப் பெட்டியை இழுக்க உதவி செய்கின்றார்.<br><br>➢ **சமுதாயத்தில் பலதரப்பட்ட மனிதர்கள் இருப்பது மக்களை வலிமையாக்கும் என்ற சிந்தனை உள்ளவர்.**<br>▪ எல்லாரும் செல்வராக இருந்தால் நாட்டில் தொல்லைகள் இருக்க வழியில்லை.<br>▪ ஆனால், மக்கள் மனமகிழ்ச்சியுடன் வாழ மாட்டார்கள். ஆகவே, மக்கள்<br>▪ மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்ற நோக்கில் ஏழைகள் சிலராவது நாட்டில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்.<br>▪ எல்லாரும் செல்வராக இருந்தால் மக்கள் மரப்பொம்மைகள் போன்று<br>▪ உணர்ச்சியற்றவர்களாகவே வாழ்வார்கள் என்று கூறுகிறார்.<br>▪ அனைவரும் நல்லவராகிவிட்டார்கள் என்றால் மக்கள் மனம் மென்மை அடைந்துவிடும். பகைவர்களாலும்/ இயற்கையாலும் ஏற்படும் துன்பத்தை மக்கள் தாங்க மாட்டார்கள் என்கிறார்.<br><br>➢ **அன்புள்ளம் கொண்டவர்.**<br>▪ கோப்பெருஞ்சோழன் மீது கொண்ட அன்பால், தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் எனப் பெயர் சூட்டினார்.<br>▪ கோப்பெருஞ்சோழனை காணாமலே ஆழ்ந்த அன்பு கொள்கிறார்.<br>▪ அறிவுடை நம்பி மீது ஆழ்ந்த அன்பினால் மன்னன் இறந்தால் தானும் இறப்பதாகக் கூறுகிறார்.<br><br>➢ **நகைச்சுவை மிக்கவர்.**<br>▪ மேற்படியாரைக் கீழ்ப்படியார் என்று சொல்லி நகைச்சுவையாகப் பேசுகிறார்.<br>▪ கடும் காற்று மழையில் மேற்படியாரின் நிலை குறித்து<br>வேடிக்கையாகப் பேசிச் சிரிக்கிறார். | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ➢ **மதிநுட்பம் கொண்டவர்.**<br>▪ தச்சுப்புலவரைக் கொண்டு பச்சைக்கிளியின் பிணத்தைப்போல் அச்செடுக்கச் செய்யச் சொல்கிறார்.<br><br>முடிவுரை<br>ஏற்புடையது | |
| 14(i) | **பூங்கொடியின் பண்புநலன்**<br>➢ **இசையார்வம் கொண்டவள்**<br>▪ தாய் வீட்டிலிருந்து கொண்டு வந்த வீணையை உயிர்போல போற்றிப் பாதுகாக்கிறாள்.<br>▪ காலையில் எழுந்ததும் பூபாள இராகத்தில் இன்னிசை பாடிக் கொண்டிருப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறாள்: குழந்தைவேல் அதைப் பெரிதும் இரசித்துக் கேட்கிறான்.<br>▪ தானே விரும்பி சில புதிய இராகங்களில் வீணை மீட்டி குழந்தைவேலுக்குப் பாடிக் காட்டுகிறாள்.<br><br>➢ **பிடிவாத குணம் படைத்தவள்**<br>▪ திருமணமாகி ஊருக்கு வந்த தானப்பனுக்கு விருந்து வைக்க விரும்பிய குழந்தைவேல் அன்பான முறையில் பல முறை கூறியும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள்.<br>▪ வீட்டில் சமைக்க ஆளில்லை எனக் குழந்தைவேல் எடுத்துக் கூறியும் தாய் வீட்டிற்குச் சென்றே ஆக வேண்டுமெனப் பிடிவாதம் செய்கிறாள்.<br><br>➢ **பொறுப்பில்லாதவள்**<br>▪ மாமியார், வீட்டில் எல்லா வேலைகளையும் செய்ய இவள் ஓய்வெடுக்கிறாள்.<br>▪ மாமியார் வீட்டில் இல்லாத நிலையில், கணவருக்கும் மாமனாருக்கும் உணவு தயாரித்துக் கொடுக்கும் பொறுப்பை மறந்து தாய்வீட்டிற்குச் சென்றுவிடுகிறாள்.<br><br>➢ **ஆடம்பரத்தை விரும்புபவள்**<br>▪ சுடர்விழி வைர நகையும் பட்டுச் சேலையும் இல்லாமல், வேலைக்காரப் பெண்போல் இருப்பது தனக்குப் பிடிக்கவில்லை எனவும் ஆடம்பரமாக வாழ்ந்தால்தான் மதிப்புக் கிட்டும் எனவும் குழந்தைவேலுவிடம் கூறுகிறாள்.<br>▪ சுடர்விழி பட்டுச்சேலை அணியாமல் தன்னுடன் சினிமாவுக்கு வந்ததை மதிப்புக் குறைவாகக் கருதுகிறாள். | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி = 1 |
| (ii) | **வாடா மலர் உத்திமுறை**<br>➢ **பின்நோக்கு உத்தி**<br>▪ நான் அவனுக்குக் கதை சொல்லி வந்ததாகக் குறிப்பிட்ட காலம் நேற்று முந்தாநேற்று அல்ல; எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்தது அது.<br>▪ அப்போது எனக்கு மகளும் இல்லை, மனைவியும் இல்லை; நான் இருந்தேன், என் பெற்றோர் இருந்தார்கள்.<br>▪ முப்பது ஆண்டுகளுக்கு முன் எங்கள் ஊரில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டது.<br><br>➢ **உரையாடல் உத்தி**<br>▪ “உன்னைக் கழுதை கழுதை என்று கூப்பிடுகிறாளே!”<br>▪ “அப்படித்தான் சொல்வாள். நாம் பேசாமல் இருக்க வேண்டும். சித்தி சொன்னபடி கேட்க வேண்டும் என்றும் இட்ட வேலையைச் செய்ய வேண்டும் என்றும் அப்பா சொல்கிறார். செய்யாவிட்டால், அப்பா | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி = 1 |

| | | |
|---|---|---|
| | கடையிலிருந்து வந்தவுடன் சித்தி சொல்லிவிடுகிறார்; அதைக் கேட்டு அப்பா என்னை அடிக்கிறார்."<br><br>➢ **கடித உத்தி**<br>▪ தானப்பனின் கடிதம்<br>▪ பூங்கொடி தந்தையின் கடிதம்<br>▪ கனகத்தின் கடிதம்<br><br>➢ **கதைகூறல் உத்தி**<br>▪ "ரயில் நிலையத்தைவிட்டு இறங்கிய பிறகு பெரிய கட்டடங்களையும் நம் ஊர்த் திருவிழாவில் காண்பது போன்ற மக்கள் கூட்டத்தையும் கண்டேன்."<br><br>➢ **உரை உத்தி**<br>▪ "இந்த உலகத்தில் பழங்காலம் முதல் காட்டிலும் நரிகளும் புலிகளும் ஒரு பக்கம் இருந்துவர முயல்களும் மான்களும் ஒருபுறம் வாழ்ந்து வருகின்றன...<br><br>➢ **நனவோடை உத்தி**<br>▪ தானப்பனின் மனைவியும் வச்சிரநாதனும் நெருங்கிப் பழகுவதை எண்ணிப் பார்த்துக் குழந்தைவேல் வருத்தமும் குழப்பமும் அடைதல். (இந்த ஒரு வழியை நண்பனிடம் சொல்ல வேண்டும். எப்படிச் சொல்வது! அவனுடைய மனைவியின் மேல் நான் ஐயுற்றது போல் ஆகுமே)<br><br>▪ மணமுறிவுக்குப் பிறகு கனகம் மீண்டும் தானப்பன் வீட்டிற்கு வந்து அன்போடும் பொறுப்போடும் இருக்கும் மாற்றத்தைக் குழந்தைவேல் எண்ணி பார்த்தல்.<br>(இது என்ன மாறுதல்! இப்படியும் இவனுடைய வாழ்க்கையில் அற்புதங்கள் நடப்பது உண்டா என்று நெடுநேரம் எண்ணிக் கொண்டிருந்தேன். காரணம் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இப்படி வரக்கூடும் என்று சிறு குறிப்பையும் தானப்பன் என்னிடம் தெரிவிக்கவில்லையே)<br><br>➢ **முன்நோக்கு உத்தி**<br>▪ (நாவலில் எதிர்காலத்தில் நடக்கப் போகும் நிகழ்வை முன்கூட்டியே நாவலாசிரியர் குறிப்பால் உணர்த்துவது)<br>அன்று இரவு தானப்பன் தன் மனைவியோடு போராடி அவளைக் கொன்றுவிட்டதாகக் கனவு கண்டு அலறி எழுகிறான்; வீணான கற்பனைகள் கூடாது எனத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்கிறான். பின்னாளில் தானப்பனும் கனகமும் மரணம் அடையப்போகின்றனர் என்பதை முன்கூட்டியே இஃது உணர்த்துவதாக இக்கனவு நாவலில் வருகிறது.<br><br>*[மூன்று கருத்துகளைச் சான்றுகளோடு விளக்கி எழுதியிருக்க வேண்டும்] | |
| 15(i) | **மோகனா பண்புநலன்**<br>➢ **பிறந்த வீட்டின் பெருமை பேசுபவள்.**<br>▪ தாமே கடைக்குச் சென்று பட்டுச்சேலை ஒன்றனை வாங்கி அதனை உடுத்திக் கொண்டு தன் அப்பா ஊரிலிருந்து கொண்டு வந்ததாக அக்கம்பக்கத்தாரிடம் பெருமை பேசிக் கொள்கிறாள்.<br><br>➢ **கொடூர உள்ளம் கொண்டவள்**<br>▪ சுடர்விழி பக்கத்து வீட்டாரான தாயாரம்மா கொடுத்த முறுக்கைச் சாப்பிடதற்காகக் கன்னத்தில் அறைகிறாள்.<br>▪ தானப்பன் பாலைக் கைதவறி கீழே கொட்டியதால் அவன் முகத்தில் இருக்கியால் அடிக்கிறாள்.<br><br>➢ **பணத்தாசை மிக்கவள்.** | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி = 1 |

| | | |
|---|---|---|
| | ▪ கணவரின் மறைவிற்குப் பிறகு, பெட்டி பேழையெல்லாம் ஆராய்ந்து பணம், நகை முதலியவற்றை மூட்டைகளாகக் கட்டிக் கொண்டு தன் பெற்றோருடன் ஊருக்குக் கிளம்புகிறாள்.<br>▪ தானப்பனின் தந்தையின் நகைக்கடையில் ஏறக்குறைய ஐம்பதினாயிர ரூபாய் பெறக்கூடிய நகை முதலியவை இருந்தன என்றும், அவற்றில் தனக்கும் தன் குழந்தைகள் இருவர்க்கும் பங்கு உண்டு என்றும் அந்த மூலதனத்திலும் மற்ற சொத்திலும் பாதி தர வேண்டும் என்று வழக்கு அறிக்கை நோட்டிஸ் அனுப்புகிறாள்.<br><br>➢ **கோப உணர்ச்சிக்கு ஆட்படுபவள்.**<br>▪ குழந்தைவேல் தானப்பனைச் சந்தித்துப் பேச அவன் வீட்டிற்கு வெளியே வந்த பொழுது அவனைக் கடுஞ்சொற்களால் திட்டுகிறாள்.<br>▪ தன் தந்தைக்குச் சுருட்டு வாங்கிவர முடியாது எனத் தானப்பன் மறுத்ததால் கடுங்கோபங்கொண்டு கயிற்றால் அடிக்கிறாள்.<br><br>➢ **குத்தலாகப் பேசுபவள்.**<br>▪ பசியென்றால் உணவு கொடுக்க மீனாட்சி அம்மால் இருக்கிறார் எனத் தான் குழந்தைவேலின் வீட்டில் சாப்பிடுவதைப் பற்றிச் சித்தி குத்தலாகப் பேசுவதாகத் தானப்பன் குழந்தைவேலிடம் வருத்தத்துடன் கூறுகிறான்.<br><br>➢ **புறம் பேசுபவள்.**<br>▪ குழந்தைவேலின் தாய் தனது மருமகளுக்கு எந்தவொரு வேலையும் வைக்காமல் வேலைக்காரிபோல் தானே அனைத்து வேலைகளையும் செய்வதாகவும் பூங்கொடி படுத்துத் தூங்குவதாகவும் அவர்களது உறௌ விரைவிலேயே பிட்டுக் கொள்ளத்தான் போகிறது எனத் தாயரம்மாவுடன் சேர்ந்து புறம் பேசுகிறாள். | |
| (ii) | மொழிநடை<br><br>➢ பேச்சுவழக்கு<br>▪ மக்கள் பயன்படுத்தும் இலக்கணமற்றதும் தூய்மையற்றதுமான பேச்சு "அப்படி எல்லாம் நீ தனியே போகாதே கண்ணு. எங்கள் குழந்தைவேல் நல்ல பையன் என்று பெயர் எடுக்க வேண்டாவா?"<br><br>➢ வருணனை<br>▪ ஒன்றின் தன்மையையும் இயல்பையையும் சுவைபட அழகிய மொழியில் வெளிப்படுத்துதல்<br>"அது வானமெல்லாம் புகை பரப்பிக் கொண்டு வந்து நின்றது."<br><br>➢ மொழியணிகள்<br>▪ பழமொழி, மரபுதொடர், இணைமொழி (அங்கும் இங்கும்), உவமைத்தொடர், இரட்டைக்கிளவி (சலசல, வளவள)<br><br>➢ வசைமொழி<br>▪ "யாருடா நீ? கூட்டாளி வந்து விட்டாயா? வேலை இல்லையா வீட்டில்? நாளையிலிருந்து இந்தப் பக்கம் தலை காட்டாதே. சோம்பேறிக் கழுதைகள்"<br><br>➢ இலக்கிய நடை<br>▪ "குழந்தை என்றால் தூய்மையான மழைநீர் போல. இந்த உலகத்து மாசும் அழுக்கும் படாதா தூய்மையான நீர் இது. வளர்ந்த நானும் நீயும் உப்பு மண்ணிலும் களி மண்ணிலும் விழுந்த நீர்போல மாறிவிட்டோம். சிலர் அழுக்குச் சாய்க்கடையில் விழுந்த மழைத்துளிபோல் கெட்டுவிட்டார்கள்"<br><br>➢ உருவகம்<br>▪ கல்மனம்<br>▪ ஆட்டி வைத்தபடி ஆடுகிற பொம்மை<br>▪ அணிகலனாக | கருத்து<br><br>3X3 = 9<br><br>மொழி<br>= 1 |

| | | |
|---|---|---|
| | ▪ கறிவேப்பிலை ஆனான்<br><br>➢ திசைச்சொற்கள்<br>▪ எஞ்சின் / சிகரெட் /சிமெண்ட் /டிக்கெட்/ பஸ்<br><br>➢ செய்யுள்<br>▪ “உளநாள் சிலவால் (வெண்பா) | |
| | **பயிற்சி 4** | |
| **கேள்வி எண்** | **விடை** | **புள்ளி** |
| 1 | வாழ்க்கை | 2 |
| 2 | **எதுகை**<br>வட்ட – வெட்ட<br>நா**ளை** – வே**ளை**<br><br>**மோனை**<br>**வ**ட்ட – **வா**ழ்க்கை<br>**வெ**ட்ட – **வே**ரற்றுப்<br>**நா**ளை – **ந**ம்தமிழ்ப்<br><br>**சந்தம்**<br>வட்ட – பட்ட<br>வெட்ட – பட்ட<br>பாருங்கடி – கூறுங்கடி<br>நாளை – வேளை<br><br>**இயைபு**<br>பாருங்கடி – கூறுங்கடி<br>கொட்டுங்கடி – கொட்டுங்கடி<br><br>**உவமை அணி**<br>பட்ட கறையென<br>பட்ட மரமென<br><br>**பின்வரு நிலை அணி**<br>பட்ட – பட்ட<br>கொட்டுங்கடி – கொட்டுங்கடி<br><br>**திரிபு அணி**<br>வட்ட – பட்ட<br>வெட்ட – பட்ட<br>நாளை – வேளை<br><br>**மடக்கு அணி**<br>பட்ட கறையென – பட்ட மரமென | 4 |
| 3 | (i) எழுச்சியுடன் / ஊக்கத்துடன் / உத்வேகத்துடன் /முனைப்புடன் | 2 |
| | (ii)<br>▪ சிறப்பாகக் கல்வி கற்க வேண்டும்.<br>▪ எந்த வேலை செய்தாலும் கடுமையாக உழைக்க வேண்டும்.<br>▪ தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல் முன்னேற வேண்டும்.<br>(*ஏற்புடைய பிற விடைகள்*) | 2 |
| 4 | கவிதைத் துறை / நாவல் துறை / புதினத் துறை / கட்டுரைத் துறை / திரைப்படங்களுக்குப் பாடல் / வசனம் / திரைக்கதை | 2 |

| | | |
|---|---|---|
| 5 | (i) கோப்பெருஞ் சோழன் / அறிவுடை நம்பி | 2 |
| | (ii) பின்னோக்கு உத்தி / முன்னோக்கு உத்தி / நனவோடை உத்தி / பாடல் உத்தி / கதைக்கூறல் உத்தி / ஓலை உத்தி / உரையாடல் உத்தி | 2 |
| 6 | (i)<br>▪ மிகுந்த கோபக்காரன்<br>▪ கொண்ட / எடுத்த முடிவில் உறுதியாக இருப்பவன்.<br>▪ நீதியை நிலைநாட்டுபவன்<br>▪ தன் இரத்தமே ஆனாலும் துரோகம் செய்பவரைத் தண்டிக்கத் துடிப்பவன்.<br>(*ஏற்புடைய பிற விடைகள்*) | 2 |
| | (ii) சோழ நாட்டு அரண்மனை | 2 |
| | (iii) சிறை பிடிக்கப்பட்ட தன் இரு புதல்வர்களையும் கொல்லத் துடிக்கின்றான் கோப்பெருஞ் சோழன். | 2 |
| | (v) இளங்கோச் சோழனும் செங்கோச் சோழனும் அரியணையில் அமரும் ஆசையில் தன் தந்தையின் ஆட்சியைக் கவிழ்க்க முயல்கின்றனர். படைகளைத் திரட்டி தந்தைக்கு எதிராகப் போர் தொடுக்கின்றனர். அப்போரில் சிறைப் பிடிக்கப்படுகின்றனர். அவர்களைக் கொல்ல கோப்பெருஞ்சோழன் செல்லும் போது இச்சூழல் இடம்பெறுகிறது. | 3 |
| 7 | ▪ அகல் விளக்கு / கரித்துண்டு / செந்தாமரை / கள்ளோ? காவியமோ? / பாவை / அந்த நாள் / மலர்விழி / அல்லி / பெற்ற மனம் / கயமை / நெஞ்சில் ஒரு முள் / மண் குடிசை | 2 |
| 8 | (i) தானப்பன் / சுடர்விழி / மனோன்மணி / மோகனா / தானப்பனின் அப்பா / மீனாட்சி அம்மாள் / குழந்தைவேலின் அப்பா / முருகய்யா<br>(*ஏற்புடைய பிற விடைகள்*) | 2 |
| 8(ii) | (ii)<br>▪ மனைவியின் விருப்பத்திற்கேற்ப குழந்தைவேல் தனிக்குடித்தனம் செல்லுதல்<br>▪ தானப்பனுக்கும் மனைவி கனகத்திற்குமிடையே மனக்கசப்பு ஏற்படுதல்; மணவிலக்குப் பெற்று இருவரும் பிரிதல் | 2 |
| 9 | (i)<br>▪ வெறுப்பைக் காட்டுபவன்<br>▪ பிறருக்கு அடிப்பணியாதவன்.<br>▪ தன் எதிர்காலத்தை எண்ணி கலங்குபவன்.<br>▪ சுதந்திரமாக வாழ நினைப்பவன்.<br>▪ தங்கையை நினைத்துப் பெருமைப்படுபவன்<br>(*ஏற்புடைய பிற விடைகள்*) | 2 |
| 9 | (ii) உரையாடல் உத்தி | 2 |
| | (iii) தானப்பனின் சித்தி தானப்பனுக்கும் தங்கை சுடர்விழிக்கும் உணவு கொடுக்காமல் பட்டினி போடுகிறாள். | 2 |
| | (iv) தானப்பனின் தங்கை சுடர்விழி கைத்தவறி கண்ணாடிக் குவளையை உடைத்துவிடுகிறாள். சித்தி அவளை வீட்டுக்கு வெளியே நிற்கும்படி விரட்டியடிக்கிறாள். சுடர்விழி வெயிலில் நிற்பதைக் கண்ட குழந்தைவேல் தானப்பனிடம் காரணம் கேட்கும் போது இச்சூழல் இடம்பெறுகிறது. | 3 |
| 10 | **முன்னுரை**<br>கவிஞர்: கவிஞர் பாதாசன்<br>கவிதை: காடு<br>பாடுபொருள்: காட்டின் வளம்/மையக்கரு: காடு காட்டும் வாழ்வியல்<br><br>**கண்ணி 1**<br>கல்லும் மண்ணும் தோன்றி இறுகி பூமி உருவானது. பின்பு பசுமையான புல்லும் செடிகொடிகளும் தோன்றின. தொடர்ந்து பருத்து உயர்ந்த மரங்களும் தோன்றின. இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வீசுகின்ற | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி |

| | | |
|---|---|---|
| | காற்றும் வெப்பமான கதிரவன் மற்றும் குளிர் நிலவின் ஒளியும் ஊடுருவாத மிக அடர்த்தியான இருள் சூழ்ந்த இடமே காடு. பூமியில் தோன்றிய ஆதி மனித இனத்தின் வாழ்விடமும் காடுதான்.<br><br>**கண்ணி 2**<br><br>நாம் வீடுகள் கட்டுவதற்குக் காட்டு மரங்கள் மூலப்பொருளாய் அமைகின்றன. காட்டில் கிடைக்கும் பழ வகைகள் நமக்கு உணவாகின்றன. நமக்குப் பாட்டிசைக்கக் கற்றுத் தந்த பறவையினம் கூட்டில் அடைபட்டுத் துன்பப்படுகிறது. மயில், பாம்பு, மான் போன்ற விலங்குகளிடமிருந்து ஆட்டத்தையும் கற்றுக் கொண்டோம். இவை அனைத்தையும் எண்ணிப் பார்க்கும்போது காட்டிலுள்ள ஒவ்வொன்றும் மனிதன் பயன்பெற உதவுகின்றன என்பதை அறிகின்றோம். ஆனால், நாட்டில் வாழும் நாமோ யாருக்கும் பயனற்று வாழ்கிறோம்.<br><br>**கண்ணி 3**<br><br>காட்டின் அடர்த்தி, நண்பகலிலும் வெளிச்சமற்ற நிலையை உருவாக்கும். இன்றைய நிலையில் நம் தமிழ்மொழியின் நிலைமையும் அவ்வாறாகவே உள்ளது. நள்ளிரவில் காட்டில் சேர்கின்ற இருள் துன்பப்படுகின்ற நம் தமிழர்களின் வாழ்க்கைக்கான குறியீடாகக் காட்டப்படுகின்றது. இரவிலும் பகலிலும் காட்டில் தொடர்ந்து பேரிரைச்சல் அமைதியைக் குலைப்பதுபோல் ஒற்றுமையில்லாத் தமிழர்கள் கூடி வாழுமிடத்திலும் அமைதி இருக்காது.<br><br>**கண்ணி 4**<br><br>பெண்கள் அணிந்திருக்கின்ற ஆடை அவர்கள் உடலை இறுக்கமாகப் பற்றியிருப்பதைப் போல உறுதியான மரங்களில் கொடிகள் பற்றிக்கொண்டு ஏறும். உயர்ந்து வளர்ந்திட்ட மரங்களின் வேர்கள் நீண்டு பக்கத்தில் வளர்ந்திருக்கின்ற மரத்தின் வேரோடு பின்னிக் கொள்ளும். தாயைச் சேர்ந்திருக்கின்ற குழந்தை விளையாடுவதைப் போன்று காட்டில் எல்லையற்றுத் தரையில் படர்ந்திருக்கும் கொடிகளுக்கிடையில் சில உயிரினங்கள் விளையாடிக் கொண்டிருக்கும்.<br><br>**கண்ணி 5**<br><br>மனிதனின் மதிப்புமிகு வாழ்க்கையை உணர்த்துவதற்குக் கவரிமானின் இயல்பையே உவமையாகக் கூறுவர். துணிச்சலோடு செயல்படுவதற்குக் காட்டில் வாழும் சிங்கம் மற்றும் புலியின் அஞ்சாமையைச் சுட்டிக் காட்டி உணர்த்துவர். காதல் மற்றும் கற்பு வாழ்க்கையில் சிறக்க காட்டில் வாழும் அன்றில் பறவைகளின் பண்பை வானவருக்கும் மேலான பண்பாகச் சொல்லி விளக்குவர். இப்படி மனிதர்களுக்கு வாழ்க்கையின் நெறிகளைக் கற்றுத் தந்த காடு மனிதனின் வீடு என்பதை உணர வேண்டும். காட்டின் இச்சிறப்புகளை எண்ணி இனிய மனம் கொண்டு அழகிய தமிழால் வாழ்த்துகின்றார் கவிஞர்.<br><br>**முடிவுரை**<br>- ஏற்புடைய முடிவுரை | 1<br><br>முடிவுரை<br>2 |
| 11 | (i)<br>➢ **எதுகை:** சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது.<br>▪ வேண்டுமென் – தூண்ட<br>▪ புத்தம் – புத்தகத்<br>▪ காற்றொடு – காற்றாய்க்<br>▪ கடலொடு – கடலாய்க்<br>▪ புனலொடு – புனலாய்<br>▪ வெடுக்கெனப் – பிடுங்கினேன்<br>➢ **மோனை:** சீர்களில், முதலெழுத்து ஓசையால் ஒன்றிவருவது.<br>▪ படிப்பறை – பற்றினேன்<br>▪ பழந்தாள் – படியச்<br>▪ உணர்வுக் – ஓட<br>▪ என்னை – எழுதும்<br>▪ ஒன்றென் – உடலில் – உரசும்<br>▪ உணர்வு – உளந்திருப் | கருத்து=<br>9<br><br>மொழி=<br>1 |

| | | |
|---|---|---|
| | ▪ பாட்டாய்க் – படைத்த<br>▪ பாட்டுத் – பாய்ச்சிய<br>(பிற ஏற்புடைய பதில்கள்)<br><br>**இயைபு:** சீர்களின் இறுதி அசை ஒன்றிவருவது.<br>▪ கடலாய் – புனலாய்<br>▪ எல்லையில் – வேளையில்<br><br>**அணி நயம்**<br>➢ **உவமை அணி:** ஒத்ததை ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி.<br>▪ அருங்கலை மணிபோல்<br>▪ காற்றொடு காற்றாய்<br>▪ கடலொடு கடலாய்<br>▪ பூவொடு பூவாய்<br>▪ புனலொடு புனலாய்<br><br>➢ **உருவக அணி:** உவமையைப் பொருளில் ஏற்றல்<br>▪ பாட்டுத்தேனை - இனிமையான பாட்டு<br><br>➢ **உயர்வு நவிற்சி அணி:** இயற்கைக்கு அப்பால் நம்பவியலாத அளவு உயர்த்தியோ தாழ்த்தியோ மிகையாகக் கூறுவது<br>▪ உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்<br>▪ எந்தக் கலைஞனும் எழுதிட முடியா<br>ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!<br><br>➢ **தன்மை நவிற்சி அணி:**<br>ஒன்றன் தன்மையை அப்படியே இயல்பாக அழகுபட நவில்வது தன்மை நவிற்சி அணியாகும்.<br>▪ எழுத வேண்டுமென் றுணர்வு தூண்ட<br>படிப்பறை சென்று பற்றினேன் தூவல்<br>(ஏதேனும் மூன்று கருத்துகள்)<br>*முன்னுரை/முடிவுரை எழுத தேவையில்லை | |
| 11 | (ii)<br>1. பெற்றோர்கள் பிள்ளைகளின் இயல்பூக்கத்தை அலட்சியப்படுத்தக்கூடாது என்ற உணர்வு மேலோங்கியது.<br>2. பிள்ளைகளின் எதிர்பார்ப்பைப் புறக்கணித்தது மனத்தில் நெருடலை ஏற்படுத்தியது.<br>3. பிள்ளைகளின் கிறுக்கல்களையும் இரசிக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.<br>(ஏற்புடைய பிற கருத்துகள்)<br>*முன்னுரை/முடிவுரை எழுத தேவையில்லை | கருத்து=<br>9<br><br>மொழி=<br>1 |
| 12 | **முன்னுரை**<br>நாடகாசிரியர்: பாவேந்தர் பாரதிதாசன்<br>நாடகம்: பிசிராந்தையார்<br>கருப்பொருள்: அறமும் உயர்நட்பும்<br><br>**கருத்துரை**<br>**1. செய்த தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது.**<br>▪ தூயனின் சூழ்ச்சியால் மான்வளவன் தன் மனைவி பச்சைக்கிளியைக் கொலை செய்கிறான்.<br>▪ இருவரும் மனம் திருந்தி செய்த தவற்றை ஒப்புக்கொண்டு தண்டனை ஏற்க முன் வருகின்றனர்.<br><br>2. **பதவி ஆசை, உறவுகளிடையே சிக்கலை உண்டாக்குவது வருத்தமளிக்கிறது.** | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ▪ சோழ மன்னன் கோப்பெருஞ் சோழன் தன் நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்கிறான்.<br>▪ அவன் புதல்வன் இளங்கோச் சோழன் ஆட்சியைக் கைப்பற்ற எண்ணத்தில் பல சூழ்ச்சிகளைச் செய்கிறான்.<br>▪ இதை அறிந்த கோப்பெருஞ் சோழன் அந்த முயற்சியை முறியடிக்கிறான்.<br><br>3. **நட்புக்கு வயது, உருவம், நிறம், தகுதி போன்றவை கிடையாது. மாறாக, ஒத்த உணர்வே முக்கியம் என்பதை உணர்ந்தேன்.**<br>▪ கோப்பெருஞ் சோழன் தன் நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்கிறான்.<br>▪ அவன் ஆட்சியின் பெருமைகளை அறிகிறார் புலவர் பிசிராந்தையார்.<br>▪ கோப்பெருஞ் சோழனைப் பார்க்காமலே புலவர் பிசிராந்தையார் நட்பு கொள்கிறார்.<br>▪ கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கும் போது தானும் அவரோடு இணைந்து வடக்கிருந்து உயிர் துறக்கின்றார்.<br><br>4. **கணவன் மனைவியிடையே சந்தேக உணர்வு தோன்றினால் அது குடும்பத்தைச் சீரழித்துவிடும் என உணர்ந்து கொண்டேன்.**<br>▪ பச்சைக்கிளி இரண்டாம் குழந்தையைக் கருவுற்றிருக்கிறாள். தன் கணவன் மான்வளவனிடம் இலந்த பழம் கேட்கிறாள்.<br>▪ மகன் பொன்னனும் பழம் கேட்கிறான்.<br>▪ மான்வளவன் ஐந்து இலந்த பழங்கள் கொண்டு வந்து கொடுக்கிறான்.<br>▪ யாருக்கும் தெரியாமல் பொன்னன் இரண்டு இலந்த பழங்களை எடுத்துக் கொண்டு தெருவில் உருட்டி விளையாடுகிறான்.<br>▪ இதைப் பார்த்த தூயன் இரண்டு இலந்த பழங்களை வாங்கிக் கொள்கிறான்.<br>▪ வழியில் மான்வளவன் தூயன் கையில் இருந்த இரண்டு இலந்தைப் பழங்களைப் பற்றி வினவுகிறான்.<br>▪ தூயன், அவை நிறைமாத கர்ப்பிணியான ஒருத்தியிடமிருந்து கிடைத்தது எனப் பொய்யுரைக்கின்றான்.<br>▪ மான்வளவன் தீர விசாரிக்காமல் மனைவிமேல் சந்தேகப்பட்டு அவளை வெட்டிக் கொல்கிறான்.<br><br>5. **அறத்தைப் பின்பற்றி வாழ்வோரை எண்ணி மகிழ்ச்சிடைகிறேன்.**<br>▪ பாண்டியன் அறிவுடை நம்பி, தன் பரம்பரைப் புகழைக் காக்கும் பொருட்டுப் பிசிராந்தையாரின் துணையோடு தன் நாட்டு மக்கள் அனைவரையும் நல்லவர்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழச் செய்கின்றான் .<br>▪ தம் மக்கள் எவ்விதப் பாவச் செயலும் செய்யாதிருப்பதையும்<br>▪ அறவழியில் நிற்பதையும் அமைச்சரைக் கொண்டு கண்காணித்து வருகின்றான் .<br>▪ பச்சைக்கிளியின் படுகொலை தன் பரம்பரையின் பெருமைக்குக் களங்கம் கற்பிக்காதபடி தீர்ப்பு வழங்குகிறான் .<br>▪ பழிபாவத்திற்கு அஞ்சும் அரசனே பரம்பரையின் பெருமையை நிலைநிறுத்த வல்லவன்.<br>**முடிவுரை**<br>- ஏற்புடைய முடிவுரை | |
| 13 | **முன்னுரை**<br><br>நாடகாசிரியர்: பாவேந்தர் பாரதிதாசன்<br>நாடகம்: பிசிராந்தையார்<br>கருப்பொருள்: அறமும் உயர்நட்பும்<br><br>**கருத்துரை** | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15 |

| | | |
|---|---|---|
| | ▪ நட்பைப் போற்றுதல் (அறிவுடை நம்பி, பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன்)<br>▪ உதவும் மனப்பான்மை (அறிவுடை நம்பி, பிசிராந்தையார், மேற்படியார்)<br>▪ நீதியை நிலைநாட்டுதல் (அறிவுடை நம்பி)<br>▪ நேர்மையான ஆட்சிமுறை (அறிவுடை நம்பி, கோப்பெருஞ்சோழன்)<br>▪ ஆள்வோர் ஆளப்படுவோர் அன்பு (அறிவுடை நம்பி, கோப்பெருஞ்சோழன், நாட்டு மக்கள்)<br>▪ பழிக்கும் இகழ்ச்சிக்கும் அஞ்சுதல் (அறிவுடை நம்பி, கோப்பெருஞ்சோழன்)<br>▪ காணாமல் கண்ட நட்பு (பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன்)<br>▪ மக்களின் மனவலிமை நாட்டின் பலம் (பிசிராந்தையார்)<br>(ஏதேனும் ஐந்து கருத்துகள்)<br>**முடிவுரை**<br>- ஏற்புடைய முன்னுரை | மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |
| 14 | (i)<br>**1. மேற்கத்திய நாகரிகத்தைப் போற்றுபவள்**<br>▪ குழந்தைவேல் குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த திருமண விருந்தில் சில உணவு வகைகளைத் தொடாமல் இருந்ததைத் தானப்பன் சுட்டிக்காட்டிய பொழுது மேல் நாட்டாரின் பழக்கவழக்கங்கள் அப்படித்தான் என்கிறாள்.<br><br>**2. ஆடம்பரத்தை விரும்புபவள்**<br>▪ வெளியே செல்லும் பொழுது பளபள என மின்னும் சரிகை மிகுந்த புடவையும் கழுத்து நிறைய பொன்னும் வைரமும் அணிந்து கொண்டு செல்கிறாள்.<br><br>**3. ஆண்களிடம் நெருங்கிப் பழகுபவள்**<br>▪ குழந்தைவேல் தனக்கு நெருங்கிய நண்பன் எனத் தானப்பன் அறிமுகப்படுத்திய பொழுது சற்றும் கூச்சப்படாமல் அவனிடம் நிறைய பேசுகிறாள்.<br>▪ தானப்பன் வீட்டில் இல்லாத நேரத்தில் வச்சிரநாதனுடன் நெருக்கமாகப் பேசிப் பழகுகிறாள்.<br>▪ கவர்ச்சியாக உடையுடுத்தி வச்சிரநாதனுடன் அவனது வீட்டிற்குச் செல்கிறாள்.<br>▪ தானப்பன் வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும் திரும்பிப் போக குழந்தைவேல் முயன்ற பொழுது அவனை உள்ளே அழைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படி நெருங்கி வற்புறுத்துகிறாள்; குழந்தைவேல் அவளது செயலை விரும்பாமல் உடனே அங்கிருந்து கிளம்புகிறான்.<br><br>4. **சினிமா மோகம் கொண்டவள்**<br>▪ குழந்தைவேல் ஏற்பாடு செய்திருந்த திருமண விருந்தில் கலந்து கொண்ட பொழுது உணவை முறையாக உண்ணாமல், ஊரில் அப்போது வந்திருந்த ஒரு சினிமாப் படத்தைப் பற்றியும் அதில் நடித்த நடிகர்களைத் தான் சந்தித்த விசயத்தையும் அவர்களது பழக்கவழக்கங்களையும் திறமைகளையும் விரிவாகப் பேசுகிறாள்.<br>**5. பொறுப்பற்றவள்**<br>▪ தானப்பனின் வீட்டிற்கு உணவுக்காகச் சென்றுவிட்டுத் திரும்பும்பொழுது குழந்தைவேலின் தந்தை, கனகம் குடும்பத்தில் அக்கறை இல்லாதவளாகவும் விருந்தினர்களை வரவேற்றுக் கவனிக்காமல் இருப்பதையும் குழந்தைவேலிடம் சுட்டிக் காட்டுகிறார்.<br>▪ குழந்தைவேல் தானப்பனைப் பார்க்க வீட்டிற்கு வரும்பொழுது, அவனிடமே தானப்பன் வீட்டில் இருக்கிறாரா எனக் கேட்ட வேளையில் அவளது பொறுப்பற்ற தன்மையைக் குழந்தைவேல் உணருகிறான்.<br>(ஏதேனும் மூன்று கருத்துகள்)<br>* முன்னுரை/முடிவுரை எழுத தேவையில்லை. | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |
| 14 | (ii)<br>1. **தானப்பனின் வீடு** | கருத்து<br>3X3 = 9 |

| | | |
|---|---|---|
| | ▪ தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் பல துன்பம் நிறைந்த வீடு தானப்பனையும் சுடர்விழியையும் சித்தி பல கொடுமைகள் செய்கிறாள்<br>▪ தானப்பனுக்கும் சுடர்விழிக்கும் பல நேரங்களில் முறையான உணவு கொடுக்காமல் துன்பப்படுத்துகிறாள்.<br>▪ மனோன்மணி பிறந்த நாளில் தானப்பனையும் சுடர்விழியையும் வேலைக்காரர்களைப் போல் நடத்துகிறாள்.<br><br>**2. பள்ளிக்கூடம்(குழந்தைவேலும் தானப்பனும் கல்வி கற்ற இடம்)**<br><br>▪ குழந்தைவேலும் தானப்பனுக்கும் ஒரே பள்ளியில் கல்வி கற்கின்றனர்.<br>▪ தானப்பன் வீட்டில் படும் துன்பங்களைத் தானப்பன் குழந்தைவேலிடம் கூறுகிறான்.<br>▪ தானப்பனுக்கு வீட்டில் அதிக வேலைகள் இருப்பதால் பள்ளிக்கூடப் பாடங்களைக் குழந்தைவேலின் மூலம் அறிந்து கொள்கிறான்.<br>▪ அறிவுக்கூர்மையும் பணிவும் கொண்ட மாணவனாகத் தானப்பன் இருந்ததால் ஆசிரியர்களின் பாராட்டைப் பெறுகிறான்.<br><br>**3. சென்னை**<br>▪ சித்தியின் கொடுமை தாங்காமல் யாரிடமும் கூறாமல் தானப்பன் சென்னைக்கு ஓடிவிடுகிறான்.<br>▪ தன் இருப்பிட முகவரி தெரிவிக்காமலேயே கடிதம் மூலம் குழந்தைவேலைத் தொடர்பு கொள்கிறான்.<br>▪ குழந்தைவேல் மேற்படிப்புக்காகச் சென்னை செல்கிறான்.<br>▪ பல புலால் உணவகங்களில் தானப்பனைத் தேடுகிறான்.<br><br>**4. பாம்பே மிலிட்டரி ஓட்டல் (புலால் உணவுக்கடை)**<br>▪ திருவல்லிக்கேணியில் தானப்பனைத் தேடிப் பார்க்க புலால் உணவுக்கங்களில் நுழைந்து பரிமாறுவோரை விசாரிக்கிறான்.<br>▪ இறுதியாக 'பாம்பே மிலிட்டரி ஓட்டல்' எனும் கடைக்குச் சென்று விசாரிக்க மனம் தூண்ட, அங்குச் சென்று தானப்பனைப் பற்றி விசாரிக்கிறான்.<br>▪ அக்கடையின் பரிமாறுவோன் தானப்பன் எவ்வாறு கடையில் பணிக்குச் சேர்ந்தான் என்ற விவரத்தையும் முதலாளி அவனைத் தன் தேவைக்கு நன்றாகப் பயன்படுத்திக் கொண்டதால் பதினெட்டு மாதங்கள் சிறைக்கூடத்திற்குச் சென்று வந்த தகவலையும் கூறுகிறான்.<br>(ஏதேனும் மூன்று கருத்துகள்)<br>* முன்னுரை/முடிவுரை எழுத தேவையில்லை. | மொழி<br>1 |
| 15(i) | (i)<br>1. **அன்பானவர்**<br><br>▪ குழந்தைவேலின் இல்லற வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை நினைத்து வருத்தப்படுகிறார்.<br>▪ குழந்தைவேலும் பூங்கொடியும் பேசிக்கொள்ளவில்லை எனக் குழந்தைவேலின் தாய் கூறிய பொழுது அவனது இல்லற நல்வாழ்விற்காக விட்டுக்கொடுத்துச் செல்லும்படி ஆலோசனை கூறுகிறார்.<br>▪ மகனின் இல்லற வாழ்க்கை நலம்பெற வேண்டும் என்பதற்காகப் பூங்கொடியின் விருப்பம்போல் தனிக்குடித்தனம் அனுப்ப அவளைத் தாய்வீட்டிலிருந்து அழைத்து வரக் கடலூருக்குப் போகிறார்.<br>▪ குழந்தைவேலின் தனிக்குடித்தனத்திற்கு வாடகை வீட்டை ஏற்பாடு செய்கிறார்.<br>▪ குழந்தைவேலின் தனிக்குடித்தனத்திற்குத் தேவையான மளிகை பொருள்களை வாங்கி அனுப்பி வைக்கிறார்.<br><br>**2. பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர்**<br><br>▪ தானப்பன் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டுத் தன் தந்தையால் அடிக்கப்படுவதை அறிந்து, உள்ளே போய்த் தடுத்துக் கடிந்து | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | பேசிவிட்டு வர எண்ணுகிறார்.<br>▪ மனோன்மணியின் பிறந்தநாளின்போது, சுடர்விழி கலைந்த முடியோடும், பூ, நகை இல்லாமல், அழுக்கான பாவாடை, கிழிந்த சட்டையுடன் இருப்பதைக் கண்டு வருத்தம் கொள்கிறார்.<br><br>3. **போலி உறவை விரும்பாதவர்**<br><br>▪ தங்களை மனோன்மணியின் மறுவருட பிறந்தநாள் விழாவிற்குத் தானப்பனின் பெற்றோர் அழைக்காததைப் பற்றிக் குழந்தைவேலுவின் தாய் கூறியபொழுது உண்மை அன்பு இல்லாத உறவைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை எனவும் பிள்ளைகளுக்கு மட்டும் தேவையான உதவிகளைச் செய்யுமாறும் கூறுகிறார்.<br><br>4. **கோப உணர்வுக்கு ஆட்பட்டவர்**<br><br>▪ வீட்டு வேலைக்காகச் சுடர்விழி பள்ளிக்குப் போகாமல் நிறுத்தப்பட்டதை அறிந்து கோபப்படுகிறார்.<br>▪ தானப்பனின் வீட்டுச்சிறையைக் கண்டித்துத் தானப்பனின் தந்தையிடம் பேசப் போவதாகக் கோபமாகக் கூறுகிறார்.<br><br>5. **கொள்கையில் உறுதி கொண்டவர்**<br><br>▪ குழந்தைவேலுக்குப் பிறந்தநாள் விழா கொண்டாடலாமெனக் குழந்தைவேலுவின் தாயின் விருப்பத்திற்கு உடன்பட மறுக்கிறார்.<br>▪ எல்லா நாளும் விழா நாளே என்றும் பிறந்தநாள் விழா கொண்டாட்டம் தேவையில்லை எனவும் கூறுகிறார்.<br>(ஏதேனும் மூன்று கருத்துகள்)<br>* முன்னுரை/முடிவுரை எழுத தேவையில்லை. | |
| 15 (ii) | (ii)<br>**1. பெற்றோர் மீது அன்பு கொள்ளுதல்**<br>▪ தாயை இழந்த தானப்பன் சித்தியின் கொடுமைக்கு ஆளாவதைக் கேட்டறிந்தபோது தன் தாய் நலத்துடன் வாழ வேண்டுமென இறைவனிடம் வேண்டிக் கொள்கிறான்.<br>▪ தன்னுடைய திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் பெற்றோரே முடிவு செய்ய விட்டுவிடுகிறான்.<br>▪ தன் பெற்றோருக்கு முதுமையும் நோயும் வந்துவிட்டால், அவர்களைத் தனியே விடமுடியாது என்பதால் தனிக்குடித்தனம் இனியும் வேண்டாமென முடிவு செய்கிறான்.<br>▪ தந்தைக்குப் பிடிக்காத விசயங்களைச் செய்யத் துணியாததால் தேர்தலில் நிற்கும்படி தானப்பனின் கட்சிக்காரர்கள் வற்புறுத்தியபொழுது மறுக்கிறான்.<br><br>2. **உடன்பிறப்புகளின் மேல் பாசம் வைத்தல்**<br>▪ தன் தங்கை சுடர்விழியைச் சித்தி, வேலைக்காரப்பெண் என வீட்டுக்கு வந்த பெண்களிடம் கூறியதைக் கேட்டுக் கோபம் கொள்கிறான்.<br>▪ சென்னைக்கு ஓடிச் சென்ற பிறகு, குழந்தைவேலுக்கு எழுதிய கடிதத்தில் தங்கை சுடர்விழியைப் பற்றிக் கவலை கொள்கிறான்.<br>▪ மகப்பேற்றுக்குத் தன் வீட்டிற்கு வந்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்கிறான்.<br>▪ குழந்தைக்குப் பொன் அரைஞாணும் பொன் காப்பும் செய்து அணிவிக்கிறான்.<br>▪ மனோன்மணியின் திருமணத்தைத் தானே நடத்தப் போவதாகவும் அவளது திருமணத்திற்குப் பிறகுதான் தான் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் குழந்தைவேலிடம் கூறுகிறான்.<br><br>3. **நண்பன் மீது அன்பு வைத்தல்**<br><br>▪ குழந்தைவேல், தன் பால்ய நண்பனான தானப்பன்மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவனாக இருக்கிறான்.<br>▪ தானப்பனின் இன்ப துன்பங்களில் முழுமையாகப் பங்கு கொள்கிறான்.<br>▪ தானப்பனுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் அதனைக் களைய | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | முற்படுவதோடு அவன் துன்பத்தை எண்ணித் தானும் துன்பம் அடைகிறான்.<br>▪ சந்தர்ப்பச் சூழ்நிலை தானப்பனின் வாழ்க்கைப் போக்கை மாற்றியதை எண்ணி இரக்கப்படுகிறான்; அவனை அதிலிருந்து காப்பாற்றவும் முனைகிறான்.<br><br>4. **பிள்ளைகள் மீது பெற்றோர் அன்பு**<br><br>▪ விளையாட்டில் மும்முரமாய் இருக்கும் குழந்தைவேல் சாப்பிடாமல் இருப்பதைப் பொறுக்க மாட்டாதவராய் அவன் தாய் உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார்.<br>▪ தனிக்குடித்தனம் கேட்கும் போது பொருந்தாத பெண் தன் மகனுக்கு மனைவியாக அமைந்துவிட்டதை எண்ணி அவன் அப்பா வருந்துகிறார்.<br>▪ குழந்தைவேலின் தனிக்குடித்தனத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கிறார்.<br><br>5. **கணவன் மனைவி அன்பான உறவு**<br><br>▪ தாய் வீட்டிற்குச் சென்ற பூங்கொடி மீண்டும் திரும்பி வருவதைப் பற்றிக் கடிதம் எழுதாத நிலையில் அவளது நினைவால் வாடுகிறான் குழந்தைவேல்.<br>▪ பூங்கொடி மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டிற்குச் சென்ற பின்பு அவளை நினைத்து மனம் ஏங்குகிறான்.<br>(ஏதேனும் மூன்று கருத்துகள்)<br>* முன்னுரை/முடிவுரை எழுத தேவையில்லை. | |
| | **பயிற்சி** 5 | |
| **கேள்வி எண்** | **விடை** | **புள்ளி** |
| 1 | அறியாமை | 2 |
| 2 | தன்மை நவிற்சி அணி | 4 |
| | விளையும் பயிரை வளரும் கொடியை | |
| | வேருடன் அறுத்து விளையாடும் | |
| | உருவக அணி | |
| | வரட்டு கீதமும் பாடும் | |
| 3 | (iii) வேதனைப்படும் / துனபப்படும் | 2 |
| | (iv) பொய்களைப் பேசுவோரிடமும் ஏமாற்றுபவரிடமும் மிரட்டுபவரிடமும் கவனமாக இருக்க வேண்டும் | 2 |
| | *பிற ஏற்புடைய பதில்கள்* | |
| 4 | புலவர் , அரசியல்வாதி, தமிழாசிரியர் | 2 |
| 5 | (iii) சோழ மன்னி<br>(iv) பண்டிய நாட்டு அரசி | 2 |
| | (iv)<br>இலக்கிய நடை / பேச்சு வழக்கு/ காதல் மொழி /வருணனை / வசைமொழி /சந்த நடை @ அடுக்கு மொழி /மொழியணிகள் | 2 |
| 6 | (i)<br>▪ தன் தவற்றை உணர்ந்து வருந்துபவன்<br>▪ தவற்றுக்கான தண்டனையை மனமார ஏற்க விரும்புபவன் | 2 |
| | (ii) செய்த தவற்றை ஒப்புக்கொண்டு அதற்கான தண்டனையைப் பெறுவது நல்ல பண்பு | 2 |
| | (iii) அழகு நிறைந்த மனைவியை அன்புடன் அரவணைத்துப் பார்க்காமல் அவளைக் கொலை செய்தது முறையற்றப் பண்பாகும்/ செயலாகும் . | 2 |
| | (iv) பச்சைக்கிளி கொலை வழக்கில் மான்வளவனும் தூயனும் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள்தான் அக்கொலையைச் செய்தார்களா என்ற உண்மையை உறுதிபடுத்துவதற்காக அவர்களிடம் விசாரனை நடத்தப்படுகின்றது. அத்தருணத்தில் மான்வளவனும் தூயனும் தங்களின் தவற்றை உணர்ந்து தண்டனை அளிக்கும்படி வேண்டுகின்றனர். இதுவே இச்சூழலுக்கான காரணமாகும். | 3 |
| 7 | ▪ இலக்கியத்தில் இளங்களைப் பட்டம் பெற்றார்.<br>▪ இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். | 2 |

| | | |
|---|---|---|
| | ▪ தமிழில் டாக்டர் பட்டம் பெற்றார். | |
| 8 | (i)<br>▪ சுடர்விழி<br>▪ மனோன்மணி<br>▪ மாணிக்கவல்லி | 2 |
| | (ii)<br>▪ தானப்பனின் வீடு /கல்லூரி/ கடைத்தெரு / சோழசிங்கபுரம்/ சென்னை / பள்ளிக்கூடம் / திருசலம் | 2 |
| 9 | (i)<br>▪ உதவும் மனம் படைத்தவன்<br>▪ அக்கறை கொண்டவன்<br>▪ தைரியம் ஊட்டுபவன்<br>*பிற ஏற்புடைய விடைகள்* | 2 |
| | (ii) மாணவர் சமுதாயம் | 2 |
| | (iii) நட்பு வட்டாரங்கள் அதிகமானோர் இருந்தால் உனக்குத் தொந்தரவு தரமாட்டான் | 2 |
| | (iv) கல்லூரி விடுதி அறையில் தானப்பனோடு தங்கி இருக்கும் மாணவனின் பழக்க வழக்கம் அவனுக்குப் பிடிக்கவில்லை. வெளியே சென்றுவிட்டு வரும்போது தன் அறை பூட்டியிருப்பதை அறிந்து வெளியே நின்றுகொண்டிருக்கிறான். பழனிச்சாமி அவனை அணுகி விடுதி வாழ்க்கையும் அவன் அறை நண்பனையும் பற்றி தானப்பனுக்குத் தெரிவிக்கும்போது இச்சூழல் நடைபெறுகிறது. | 3 |
| 10 | முன்னுரை<br>▪ வாழ்க்கையே ஒரு திருவிழா<br>▪ கவிஞர்: த. கோவேந்தன்<br>▪ பாடுபொருள்: வாழ்க்கை / மையக்கரு: அன்பு<br><br>கருத்து<br>கண்ணி 1<br>▪ மனித வாழ்க்கையே திருவிழா போன்றது. அதை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்காகவே நாம் பிறந்துள்ளோம்.<br>▪ இந்த வாழ்க்கையில் நாம் ஆழ்ந்த அன்பின் பிணைப்பில் திளைத்தோமானால் அனைத்து உயிர்களுக்குள்ளும் நாம் வாழ முடியும்.<br><br>கண்ணி 2<br>▪ நம் அன்பான வாழ்க்கையின் ஒவ்வொரு காலைப்பொழுதையும் மிக மகிழ்ச்சியோடு தொடங்க வேண்டும்.<br>▪ அக்காலை வேளையில் கோலம் போடுவதற்காக எல்லோர் வீட்டின் முன் நீர் தெளிக்கும் போது நம் மனம் மகிழ்ச்சியில் திளைக்கின்றது.<br><br>கண்ணி 3<br>▪ ஒவ்வொரு நாளும் நம் வாழ்க்கையில் தவறாமல் ஒளிவீசுகின்ற சூரியன் நம்மைச் சுற்றிலும் அழகான ஒளியைப் பரப்புகிறது.<br>▪ இச்செயலானது சூரியன் உலக உயிர்களின் மீது கொண்ட ஆழமான அன்பைக் காட்டுகின்றது<br><br>கண்ணி 4<br>▪ மனித வாழ்க்கையின் பல்வேறு செயல்பாடுகளும் பறவைகள் சுதந்திரமாக எழுப்பும் பல்வேறு ஓசைகளும் நம்மை வியக்க வைக்கின்றன.<br>▪ இவ்வோசைகள் இசையாய் நம் வாழ்க்கையை மணக்கச் செய்வதால் இவ்வாழ்க்கையை வாழ்த்துவோம்.<br><br>கண்ணி 5<br>▪ ஒவ்வொரு நாளும் வாழ்க்கையில் நாம் கேட்கின்ற இனிமையான அன்புமொழி, நம்மை நல்ல வழிக்கு இட்டுச் செல்கிறது. | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

<table>
<tr><td></td><td>
▪ அந்த அன்பே நமக்கு நம்பிக்கை ஊட்டி மகிழ்விக்கிறது.<br><br>
கண்ணி 6<br>
▪ நாள் முழுவதும் கிடைக்கின்ற அன்பான உறவுதான் நமக்கு நலத்தையும் வலுவையும் கொடுக்கின்றது.<br>
▪ இப்படிக் கிடைக்கின்ற இந்த அன்புதான் நாம் ஒவ்வொரு நொடியும் என்றும் மகிழ்வோடு வாழ்வதற்குத் துணைபுரிகிறது.<br><br>
புதைநிலைக் கருத்துகள்<br><br>
1. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அன்பு மிக முக்கியம்.<br>
2. அனைவரும் அன்பு பாராட்ட வேண்டும்.<br>
3. அனைத்துக் காரியங்களையும் மிக அன்பாகவே செய்ய வேண்டும்.<br>
4. அன்பு ஏற்படுத்தும் மகிழ்ச்சி நமக்கு உடல் நலத்தைத் தந்திடும்.<br>
5. அன்பான உறவுகளை நாம் போற்ற வேண்டும்.<br>
6. அன்பென்ற உணர்வு இருந்தால் மட்டுமே வாழ்க்கையை இரசித்து வாழ முடியும்<br>
முடிவுரை: ஏற்புடைய முடிவு
</td><td></td></tr>
<tr><td>11 (i)</td><td>
எதுகை:<br>
➢ சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது<br>
▪ சூரியன் – காரிருள்<br>
▪ பேரிடி – யாரிதற்<br>
▪ தண்ணீர் – மண்ணில்<br>
▪ கண்ணில் – எண்ணிப்<br><br>
மோனை:<br>
➢ சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றி வருவது மோனை<br>
▪ காரிருள் – கண்ணிற்<br>
▪ பேரிடி – பெருமழை<br>
▪ தண்ணீர் – தரையில்<br>
▪ மண்ணில் – மரஞ்செடி<br><br>
சந்தம்:<br>
➢ ஓசைப் பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்த அமைவதே சந்தமாகும்.<br>
▪ எதனாலே – எவராலே<br>
▪ மண்ணில் – கண்ணில்<br>
▪ எத்தனை – அத்தனை<br>
▪ அந்த – எந்த<br><br>
இயைபு:<br>
➢ சீர்களின் இறுதி அசை ஒன்றி வருவது இயைபு ஆகும். கவிதை அடியில் இறுதியிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதாகும்.<br>
▪ யாராலே – எவராலே<br>
▪ எதனாலே – எவராலே<br>
▪ புழுவகைகள்–செடிகொடிகள்–உருவங்கள்<br>
▪ வணங்கிடுவோம் – வாழ்த்திடுவோம்<br><br>
அணி நயம்<br><br>
➢ உவமை அணி:<br>
▪ ஒன்றன் பண்பு , தொழில், பயன் ஆகியவை நன்கு விளங்குமாறு ஒத்ததை ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி.<br>
எ.காட்டு: மின்மினிபோல்<br>
➢ உருவக அணி:<br>
▪ உவமையும் பொருளும் வேற்றுமை இன்றி ஒன்றென கொள்வது உருவகம்.<br>
எ.காட்டு:<br>
ஒருவிசை – ஆற்றல்
</td><td>கருத்து<br><br>3x3=9<br><br>மொழி<br>1</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>அதிகாரி – இயக்குபவன்<br>
➢ பின்வருநிலை அணி:<br>
▪ ஒரு கவிதையின் முன்னர் வந்த சொல்லே திரும்பவரினும் அல்லது முன்னர் வந்த பொருளே பின்னர்த் திரும்ப வரினும் அது பின்வருநிலையாகும்.<br>
எ.காட்டு:<br>
எவராலே – எவராலே<br>
எத்தனை – எத்தனை<br>
சிலபேர்கள் – சிலபேர்கள்<br>
➢ திரிபு அணி<br>
▪ சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க, மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்றி வருவது திரிபு அணி.<br>
எ.காட்டு:<br>
மண்ணில் – கண்ணில்<br>
எத்தனை – அத்தனை<br>
அந்த – எந்த<br>
➢ தன்மை நவிற்சி அணி<br>
▪ ஒன்றன் தன்மையை அப்படியே இயல்பாக அழகுபட நவில்வது தன்மை நவிற்சி அணியாகும்.<br>
எ.காட்டு:<br>
மண்ணில் போட்டது விதையொன்று<br>
மரஞ்செடி யாவது யாராலே?<br>
<br>
பொருள் நயம்<br>
▪ தெரிபொருள்:<br>
பிரஞ்ச இயக்கத்திற்கு இறையாற்றல்லே காரணம் என்பதை உணர்ந்து அனைவருடனும் அன்போடு வாழ வேண்டும் என்பதை நயமாகக் கவிஞர் உரைக்கின்றார்<br>
▪ புதைபொருள்:<br>
இறைவழிபாடு பல வழிகளில் இருந்தாலும் இறைவனால் படைக்கப்பட்ட நாம் யாவரும் சமமேஆகவே ., அதனை உணர்ந்து அன்பு நெறியோடு வாழ்வது சிறப்பெனக் கவிஞர் நயமாக எடுத்துரைக்கின்றார்.<br>
<br>
சொல்நயம்<br>
▪ மின்மினிபோல்<br>
▪ அதிகாரி<br>
▪ கண்ணில் தெரியாச் சிசுவை<br>
▪ ஏதோ ஒருவிசை<br>
▪ எண்ணத் தொலையா<br>
▪ ஒருகர்த்தன்<br>
▪ வல்லான்<br>
▪ குலவிடுவோம்<br>
▪ வந்திப்போம்<br>
<br>
[ஏதேனும் 3 கருத்துகளை மட்டும் விளக்கி எழுதியிருக்க வேண்டும்]</td>
<td></td>
</tr>
<tr>
<td>(ii)</td>
<td>▪ இயற்கையைப் போற்றி மதிக்க வேண்டும்.<br>
▪ இயற்கையை இயக்கும் அந்த மாபெரும் சக்தியைப் போற்ற வேண்டும்.<br>
▪ பிற சமயங்களை / நம்பிக்கையைத் தூற்றக் கூடாது.<br>
▪ யாருக்கும் கெடுதல் செய்யக்கூடாது.<br>
▪ அனைவரிடமும் அன்பாய்ப் பழகிட வேண்டும்.<br>
<br>
[ஏற்புடைய ஏதேனும் மூன்று கருத்து]</td>
<td>கருத்து<br>3x3=9<br><br>மொழி<br>1</td>
</tr>
<tr>
<td>12 (i)</td>
<td>1. மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் கொண்டவர்<br>
▪ காற்று, மழையால் துன்பப்படும் மக்களைக் காணச் செல்லும் போது அரசி போக வேண்டாம் என்று தடுத்தும் தான் மக்களைக் காப்பாற்ற வேண்டும் அல்லது மடிய வேண்டும் என்று சொல்லி வெளியே செல்கிறார்.</td>
<td>கருத்து<br>3X3 = 9</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ▪ காற்று, மழையால் மக்களின் நிலையைப் பற்றி புலவர்களிடம் வினவினார்.<br>▪ நாட்டில் ஏழைகள் மற்றும் தீயவர்கள் இருக்கக் கூடாது எனப் பாடுபட்டவர்.<br>▪ காற்று, மழையால் மக்கள் அடைந்த துன்பத்தைப் பார்வையிடுவதற்கு பிசிராந்தையாருடனும் மேற்படியாருடனும் செல்கின்றார்.<br>**2. ஆராய்ந்தறியும் குணம் உடையவர்**<br>▪ குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆணை இடுகின்றார்.<br>▪ மான்வளவன் கொலைக் குற்றத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தண்டனை வழங்காமல் மேலும் ஆராயச் சொல்கிறார்.<br>▪ தூயனும் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்ட போதும் இருவரையும் தண்டிக்காமல் மேலும் தீர விசாரிக்கின்றார்.<br>**3. பாராட்டும் குணம் உடையவர்**<br>▪ பாண்டிய நாட்டில் நல்லவர்கள் உருவாகப் பெரும் உதவியாக இருந்தவர்கள் புலவர்கள் எனப் பாராட்டுகிறார்.<br>▪ அரசனுடைய அறிவிற்கும் ஆற்றலுக்கும் ஊட்டம் அளிப்பவர்கள் புலவர்கள் எனப் பாராட்டுகிறார்.<br>▪ பிசிராந்தையாரை நல்லாசிரியரின் திரு அடியில் இருக்கிறேன் எனப் புகழ்கிறார்.<br>**4. கடமை தவறாதவர்**<br>▪ புயல் மழையால் மக்கள் அடைந்த துன்பத்தைப் பார்வையிடுவதற்குப் பிசிராந்தையாருடனும் மேற்படியாருடனும் செல்கின்றார்.<br>**5. நீதியை நிலை நாட்டுபவர்**<br>▪ தான் உயிர் வாழ வேண்டுமெனில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆணையிடுகின்றார்.<br>▪ பச்சைக்கிளி கொலை பற்றி விரைவில் தகவல்கிடைக்காவிடில் உயிர்விடுவதாக அறிவிக்கிறான்.<br>**6. மன்னிக்கும் குணம் உடையவர்**<br>▪ குற்றத்தை உணர்ந்த மான்வளவன் மற்றும் தூயன் ஆகிய இருவரையும் மன்னிக்கின்றார்.<br>▪ நல்ல உள்ளம் படைத்த அவர்களைப் பாண்டிய நாடு இழக்க வேண்டாம் என்று எண்ணுகிறார்.<br>**7. பழிக்கு அஞ்சுபவர்**<br>▪ பச்சைக்கிளி கொலையுண்ட சதி அறிந்து மனம் பதறுகிறார். மக்கள் தன் ஆட்சியைப் பற்றி குறை கூறுவார்கள் என்று அஞ்சி பதைபதைக்கிறார்.<br>**8. இயற்கையை இரசிப்பவர்**<br>▪ தூங்காமணி விளக்கத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிய கள்ளனைப்போல் வெள்ளிய நிலாவை அள்ளிக் கொண்டு போய் மறைத்தது கருமுகில் என்று பாண்டிய மன்னன் வருணனையோடு கூறுகிறான்.<br><br>[ஏதேனும் 3 கருத்துகளை மட்டும் சான்றுகளோடு விளக்கி எழுதியிருக்க வேண்டும்] | மொழி<br>1 |
| 12 (ii) | **1. பின்நோக்கு உத்தி**<br>▪ கடந்த கால நிகழ்ச்சிகளைக் கதையோட்டத்திற்கு ஏற்ப பின்நோக்கிப் பார்த்தல்<br>▪ நினைவு வருகிறது. நான் சின்னவளாயிருந்தபோது, கரடி வந்ததென்று என்னை விட்டு ஓடி விட்டார்கள் கூட வந்த குட்டிகள்! ஒருவன்...<br>▪ அன்னச் சேவல் என்னும் பிசிராந்தையார் பாட்டைக் கேட்டுத் திரும்பவும் பாண்டியன் முதலியோர் அப்பாட்டின் அருமையை வியக்கின்றார்கள்.<br>**2. முன்னோக்கு உத்தி**<br>▪ எதிர்காலத்தில் நடக்கப்போகும் நிகழ்வை முன்கூட்டியே குறிப்பால் | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |

| | | |
|---|---|---|
| | உணர்த்துதல்<br>▪ இளங்கோச் சோழன் தன் தந்தைக்கு எதிராகச் செயல்படுவான் என முன்கூட்டியே நமக்குக் கோடி காட்டல்.<br><br>**3. நனவோடை உத்தி**<br>▪ கதைப்பாத்திரம் தம் மனக்கண்வழி காணுகின்ற காட்சியாகவும் எண்ணங்களின் பதிலாகவும் அமைதல்.<br>அரசன்: மேலுக்கு அமைதி. உட்புறம் குமுறல். தெருவில் நடிப்பு; திரைமறைவில் கொலைக்கான சூழ்ச்சிகள்....<br>தூயன்: குழந்தை ஒன்று கையில் பலாப்பழம் போல அவள் பெற்றுக் கொடுத்துவிடுவாள் காப்பற்ற வேண்டும்! எளிதா அது?<br><br>**4. பாடல்/கவிதை உத்தி**<br>▪ இலக்கிய நாடகத்தை மேலும் மெருகேற்ற நாடக ஆசிரியர் பயன்படுத்தும் உத்தி<br>▪ பாடல் : மண்டமர் உற்ற மதனுடை நோன்தாள்<br>▪ வெண்குடை விளங்கும் விறல்கெழு வேந்தே<br>▪ அன்னச் சேவல்! அன்னச் சேவல்!<br>ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்...<br><br>**5. கதை கூறல் உத்தி**<br><br>▪ கதைப்பாத்திரங்களே கதை கூறி கதையை நகர்த்திச் செல்லுதல் எ.கா. இளைஞன் (தூயன்) பச்சைக்கிளியின் மரணத்திற்கான காரணத்தைக் கூறுதல்.<br>▪ தூயன் தன் தாயிடம் பச்சைக்கிளியின்மேல் தான் வைத்துள்ள காதலையும் அவளோடு தனக்கு ஏற்பட்ட பழக்கத்தையும் கூறுதல்.<br><br>**6. ஓலை உத்தி**<br><br>▪ பண்டைய தமிழர்கள் எழுதுவதற்குப் பயன்பட்டது பனையோலை. தமிழ் வரலாற்றுப் படைப்பிலக்கியங்களில் ஓலை உத்தி பயன்படுத்தப்படுதல்<br>▪ பொத்தியார்: சுருள் கொண்டு வந்தவரே, பாண்டியனார் தந்ததா இந்த ஓலை?<br>▪ மறவர்: ஓலை தந்தார். படையையும் கிளப்பிவிட்டார். வந்து கொண்டிருக்கிறது சோழ நாட்டை நோக்கி.<br>▪ ஒற்றன்: அயலரசின் செய்தி கொண்டு வந்தாரை ஒன்றும் செய்யமாட்டீர்கள் என்று நம்பியதால் இப்பணியை நான் மேற்கொண்டேன். இது கோப்பெருஞ்சோழன் அளித்தது.<br><br>**7. உரையாடல் உத்தி**<br>▪ கதையோட்டத்திற்கு மெருகூட்ட கதைப்பாத்திரங்களின் பேச்சு உத்தியாகப் பயன்படுத்தப்படுதல்<br>▪ பிசிராந்தையார் நாடக வடிவில் இருப்பதால் கதையோட்டம் பெரும்பாலும் உரையாடல் வடிவில் அமைந்துள்ளது.<br><br>[ஏதேனும் 3 கருத்துகளை மட்டும் சான்றுகளோடு விளக்கி எழுதியிருக்க வேண்டும்] | |
| 13(i) | 1. நட்பைப் போற்றுபவர்<br>▪ சோழநாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால், இதுவரை ஒருவரையொருவர் கண்டதில்லை. இவர்கள் உடலால் நெருங்கியதில்லை; உள்ளத்தால் நெருங்கியவர்கள்.<br>▪ தன் நண்பன் என்னைத் (கோப்பெருஞ்சோழன்) தேடி வருவார். தான் துயர் கொண்டு வாடிக் கிடக்கின்ற இந்த நேரத்தில் தன்னைக் காணக் கண்டிப்பாக வருவார்.<br>▪ பிசிராந்தையாரோடு வடக்கிருந்து உயிர் துறக்கிறார். | கருத்து<br>3X3 = 9 |

| | | |
|---|---|---|
| | **2.** நீதி வழுவாது ஆட்சி புரிபவர்<br>▪ தவறு செய்த தன் மகனையும் படைத்தலைவனையும் சிறைப்படுத்தக் கூறுகிறார்.<br><br>**3.** வீரம் மிக்கவர்<br>▪ என் தோள் எனக்குத் துணை; என் ஒரு வாள் எனக்குத்துணை என்று போரிடப் போகிறார்.<br>▪ அறத்தைப் போற்றுபவர்<br>▪ போரில் அஞ்சி ஓடுபவரை அழிப்பது அறமல்லவே எனக் கூறுகிறார்.<br><br>[ஏதேனும் 3 கருத்துகளை மட்டும் சான்றுகளோடு விளக்கி எழுதியிருக்க வேண்டும்] | மொழி<br>1 |
| 13 (ii) | 1. ஆள்வோர் சமுதாயம் (அரண்மனை சமுதாயம்)<br>▪ அரசர், அரசி<br>▪ அமைச்சர்<br>▪ அரசவைப் புலவர்கள்<br>▪ படத்தலைவன்<br><br>2. ஆளப்படுவோர் சமுதாயம் (மக்கட் சமுதாயம்)<br>▪ குடிமக்கள்<br>▪ புலவர்கள்<br>▪ ஆசிரியர்கள் | கருத்து<br>3X3 = 9<br><br>மொழி<br>1 |
| 14 | **முன்னுரை**<br>▪ நாவல் பெயர்: வாடா மலர்<br>▪ ஆசிரியர்: மு. வரதராசன்<br>▪ கருப்பொருள்: நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம்<br><br>**கருத்து**<br><br>❖ நட்பைப் போற்றுபவன்<br>▪ தானப்பனை அவனது சித்தி வீட்டில் ஓர் அறையில் அடைத்து வைத்துக் கொடுமை செய்வதை அறிந்து கோபம் கொள்கிறான்.<br>▪ தானப்பனுக்கு நேரும் துன்பங்களைக் கண்டு அழுகிறான்.<br>▪ ஊரைவிட்டு ஓடிய தானப்பனின் பிரிவுத் துன்பத்தால் வாடுகிறான்.<br>▪ சென்னையில் கல்லூரியில் படிக்கும் பொழுது பல உணவுக்கடைகளில் ஏறி இறங்கி தானப்பனைத் தேடுவதை அவனது நண்பர்கள் எள்ளி நகையாடினாலும் தனது முயற்சியைக் கைவிடவில்லை.<br>▪ நண்பனின் இல்லற வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சிக்கலை எண்ணி வருந்துகிறான்; தீர்க்கும் வழி தேடுகிறான்<br>❖ உதவும் மனப்பான்மை கொண்டவன்<br>▪ தான் வாங்கி வந்த காய்களை வேண்டாமெனக் கூறிய சித்தியின் கோபத்திலிருந்து தானப்பனைக் காப்பாற்றி உதவும் நோக்கத்தில் தன் தாயிடம் கூறி அக்காய்களை எடுத்துக் கொண்டு காசு கொடுத்துவிடுவோமென வழி கூறுகிறான்.<br>▪ சென்னையில் வேலை இல்லாமல் இருந்த தானப்பனுக்குப் பணம் கொடுத்து உதவ முன்வருகிறான்.<br><br>❖ **பெற்றோரைப் போற்றுபவன்**<br><br>▪ தாயை இழந்த தானப்பன் சித்தியின் கொடுமைக்கு ஆளாவதைக் கேட்டறிந்தபோது தன் தாய் நலமுடன் வாழ வேண்டுமென இறைவனிடம் வேண்டிக் கொள்கிறான். | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |

| | | |
|---|---|---|
| | ▪ தன்னுடைய திருமண ஏற்பாடுகள் அனைத்தையும் பெற்றோரே முடிவு செய்ய விட்டுவிடுகிறான்.<br>▪ தன் பெற்றோருக்கு முதுமையும் நோயும் வந்துவிட்டால், அவர்களைத் தனியே விடமுடியாது என்பதால் தனிக்குடித்தனம் இனியும் வேண்டாமென முடிவு செய்கிறான்.<br>▪ தானப்பனுக்கு வழங்கப்பட்ட விருந்தில் பூங்கொடி கலந்து கொள்ளாததை நினைத்துக் குழந்தைவேலின் தாய் வருந்தியபொழுது அவருக்கு ஆறுதல் கூறுகிறான்.<br>▪ தந்தைக்குப் பிடிக்காத விசங்களைச் செய்யத் துணியாததால் தேர்தலில் நிற்கும்படி தானப்பனின் கட்சிக்காரர்கள் வற்புறுத்தியபொழுது மறுக்கிறான்.<br><br>❖ **தமிழ்ப்பற்றுக் கொண்டவன்**<br>▪ தனது புதிய உணவகத்திற்குப் 'பாம்பே தில்குஷ் ஓட்டல்' எனப் பெயரிடப் போவதாக தானப்பன் கூறிய பொழுது அதற்குத் தமிழில் பெயரிடுமாறு கூறுகிறான்.<br><br>❖ **இரக்க மனம் கொண்டவன்**<br>▪ தாயை இழந்த சுடர்விழியின் நிலையை எண்ணி அவள்மீது இரக்கம் கொள்கிறான்.<br>▪ மகப்பேற்றுக்குப் பிறகு சுடர்விழியைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லாததால் தன் தாயை உதவி செய்ய வேண்டுகிறான்.<br><br>❖ **எளிதில் உணர்ச்சிவசப்படக்கூடியவர்**<br>▪ தாய் வீட்டிற்குச் சென்ற பூங்கொடி மீண்டும் தன்னோடு வர மறுத்ததைத் தன் தாயிடம் சொன்னால் அவர் மனம் வருத்தம் கொள்ளுமே என எண்ணி துயரம் தாளாது அழுகிறான்.<br><br>❖ **ஆடம்பர வாழ்க்கையை விரும்பாதவன்**<br>▪ இரயில் பயணத்திற்குத் தானப்பன் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கியதை வீண் செலவு எனக் கூறுகிறான்.<br>▪ சமுதாய மதிப்பு, புகழ், பணம் ஆகியவையே வளமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்குமெனத் தானப்பன் கூறியபொழுது போலி மதிப்பைப் பற்றியும் ஆடம்பரத்தைப் பற்றியும் கவலைப்படாமல் உண்மை வழியில் நடக்க அறிவுறுத்துகிறான்.<br><br>❖ **ஒழுக்கத்தைப் போற்றுபவன்**<br>▪ தானப்பன் நீட்டிய சிகரெட் பெட்டியை வேண்டாமென மறுக்கிறான். கல்லூரி விடுதியில் கருணாகரன் சிகரெட் பெட்டியை எடுத்துத் தான் ஒன்று எடுத்துக் கொண்டு குழந்தைவேலிடம் நீட்டிய பொழுது, தனக்குப் பழக்கமில்லை என மறுக்கிறான்; கற்றுக் கொடுக்க முயலும் பொழுது வேண்டாமென்கிறான்.<br>▪ தானப்பன் வீட்டில் இல்லாத நிலையில் அவனுடைய மனைவி கவர்ச்சியாக உடையுடுத்திக் கொண்டு வச்சிரநாதன் என்பவனோடு வெளியே செல்வதை விரும்பவில்லை.<br>▪ தானப்பன் வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும் திரும்பிப் போக குழந்தைவேல் முயன்ற பொழுது, கனகம் அவனை உள்ளே அழைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படி நெருங்கி வற்புறுத்துகிறாள்; குழந்தைவேல் அவளது செயலை விரும்பாமல் உடனே அங்கிருந்து கிளம்புகிறான்.<br><br>[ஏற்புடைய 5 கருத்துகளை மட்டும் சான்றுகளோடு விளக்கி எழுதியிருக்க வேண்டும்]<br>**முடிவுரை :** ஏற்புடைய முடிவுரை | |

| | | |
|---|---|---|
| 15 | **வாடா மலர் நாவலின் படிப்பினைகள்**<br><br>**முன்னுரை**<br>▪ நாவல் பெயர்: வாடா மலர்<br>▪ ஆசிரியர்: மு. வரதராசன்<br>▪ கருப்பொருள்: நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம்<br><br>❖ நல்ல நட்பு நல்வழி காட்டும்<br>▪ குழந்தைவேலு-தானப்பன்<br>❖ பிறர் பிள்ளைகள் மீதும் அன்பு காட்டுதல் வேண்டும்<br>▪ குழந்தைவேலுவின் அம்மா<br>❖ அண்டை அயலாரிடையே நல்லுறவு கொள்ளுதல் நன்று<br>▪ சித்தி<br>❖ பிள்ளைகள் பெற்றோரை மதிக்க வேண்டும்<br>▪ குழந்தைவேலு<br>❖ பிறர் நலத்தில் அக்கறை அவசியம்<br>▪ குழந்தைவேலுவின் அம்மா<br>❖ அறநூல்களை வாசிக்கும் பழக்கம் நன்மை பயக்கும்<br>▪ தானப்பன்<br>❖ ஆடம்பரமற்ற வாழ்க்கை சிறப்பைத் தரம்<br>▪ ஆசிரியர் முருகையா<br>❖ வாழ்க்கையில் உயர உழைப்பது அவசியம்<br>▪ தானப்பன்<br><br>[ஏற்புடைய 5 கருத்துகளை மட்டும் சான்றுகளோடு விளக்கி எழுதியிருக்க வேண்டும்]<br>**முடிவுரை :** ஏற்புடைய முடிவுரை | முன்னுரை<br>2<br><br>கருத்து<br>5X3 = 15<br><br>மொழி<br>1<br><br>முடிவுரை<br>2 |



நடந்து செல்லும் பாதைக்கு வழிகாட்டியாக
அமைவது ஒளி;
வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டியாக
அமைவது இலக்கியம்.
அதைக் கற்போம் ! பேணுவோம் !
HAK CIPTA
JABATAN PENDIDIKAN NEGERI PULAU PINANG
2022
jotaro~ footsteps
TOP
“PULAU PINANG PENERAJU TRANSFORMASI PENDIDIKAN NEGARA”